வன்னி : ரூபா.20
யாழ். : ரூபா.20
கொழும்பு : ரூபா.30

# உதயன்

UTHAYAN - A Lively National Tamil Daily

மழைக்கான சாத்தியம் உண்டு.
27°C 26°C

பக்கம் 24 ■ சுடர்: 28 ■ கதிர்: 312 ■ வள்ளுவர் ஆண்டு: 2044 | புரட்டாதி 19, சனி 05.10.2013


# மஹிந்த முன்னால் விக்கி பதவியேற்க கடும் எதிர்ப்பு

## ஏற்றுக்கொள்ளமுடியாது என்கின்றனர் வடக்கு மக்கள்



யாழ்ப்பாணம், ஒக்ரோபர் 5
வடமாகாண சபையின் முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ முன்னிலையில் பதவியேற்பதை தாம் விரும்பவில்லை என்று வடக்கில் உள்ள பெரும்பான்மையான மக்கள் கருத்து தெரிவிக்கின்றனர்.
மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் எதிர்வரும் திங்கட்கிழமை ஜனாதிபதிக்கு முன்பாக பதவியேற்கவுள்ளார் என்று நேற்றுத் தகவல் வெளியானது. வடக்கு மக்களுக்கு இந்தச் செய்தி கடும் அதிர்ச்சியை அளித்தது. இந்த முடிவை விமர்சித்து முகநூல் போன்ற சமூக வலைத்தளங்களிலும் காரசாரமான விமர்சனங்கள் உடனடியாப் பதியப்பட்டன. கூட்டமைப்பின் இந்த முடிவு குறித்து 'உதயன்' மக்களிடம் கருத்துக் கேட்டது. வடமாகாணத்தைச் சேர்ந்த வைத்திய அதிகாரிகள், ஆசிரியர்கள், அரசியல் ஆர்வலர்கள், பிரதேச சபை உறுப்பினர்கள், பொது மக்கள் ஆகியோர் இந்தக் கருத்துக் கணிப்பில் கலந்து கொண்டனர். அவர்களில் அறுதிப் பெரும்பான்மையானோர் கூட்டமைப்பின் இந்த முடிவு தமக்கு ஏமாற்றம் அளிப்பதாகவும் நல்லிணக்கத்தின் பேரால் இவ்வாறு செய்யவேண்டிய அவசியம் எதுவும் கிடையாது எனவும் கருத்து வெளியிட்டனர். அவர்களின் எண்ணங்களின் சாரமாக சிலரது கருத்துக்கள் வருமாறு:

**எஸ்.தவபாலசிங்கம் – புளியங்குளம்**
தமிழ் மக்களின் அரசியல் தீர்வு மற்றும் உரிமை விடயங்களை கருத்தில் கொண்டே தமிழ் மக்கள் தமிழ்த் தேசிக் கூட்டமைப்புக்கு வாக்களித்தனர். வடமாகாண முதலமைச்சர் ஜனாதிபதி, ஆளுநர் முன்னிலையில் தான் சத்தியப் பிரமாணம் செய்ய வேண்டும் என்றோ பதவியேற்க வேண்டும் என்றோ கட்டாய சட்டம் எதுவும் இல்லை. நாங்கள் எங்களது தனித்துவத்தை வெளிப்படுத்தவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வாக்களித்தோம். ஏனவே கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் 21



## காணாமற்போனோர் விவரம் பிரஜைகள் குழு சமர்ப்பிக்கும்

யாழ்ப்பாணம், ஒக். 5
ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்டுள்ள காணாமற்போனோர் தொடர்பிலான விசாரணைகளை மேற்கொள்ளும் ஆணைக் குழுவின் செயற்பாடுகளுக்கு மன்னார் பிரஜைகள் குழு ஒத்துழைப்பு வழங்கவுள்ளது.
காணாமற்போனோரின் உறவுகளிடமிருந்து விண்ணப்பங்களைப் பதிவு செய்து ஜனாதிபதி ஆணைக்குழுவுக்குச் சமர்ப்பிக்க மன்னார் பிரஜைகள் குழு தீர்மானித்துள்ளது.
இதற்காகக் காணாமற்போன உறவுகளைத் தேடும் குடும்பங்களின் சங்கத்தின் ஒத்துழைப்புடன் மன்னார் பிரஜைகள் குழு இந்த நடவடிக்கையை எடுத்துள்ளது.
ஒவ்வொரு மாவட்டத்துக்கும் இந்தக் குழுவினர் வருகை தந்து பதிவுகள் மேற்கொள்ளவுள்ளனர்.
எதிர்வரும் 14 ஆம் திகதி திங்கட்கிழமை 'அருட்கால் இல்லம்' இல. 81, குருசோறோட், யாழ்ப்பாணத்தில் காலை 9 மணி முதல் மாலை 6 மணி வரையும் 15 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை 'மேய்ப்பு பணி இல்லம்', பழைய மக்கள் வங்கி முன்பாகக் கிளிநொச்சியில் காலை 9 மணி முதல் மாலை 6 மணி வரையும்,
16 ஆம் திகதி புதன்கிழமை, மாகாண சபை உறுப்பினர் கனகசுந்தர சுவாமியின் இல்லத்தில் (10 ஆம் வட்டாரம், வற்றாப்பளை, புதுக்குடியிருப்பு) காலை 9 மணி முதல் மாலை 6 மணி வரையும் அதே தினத்தில் கள்ளப்பாடு வடக்கு பொது நோக்கு மண்டபத்தில் காலை 9 மணி முதல் மாலை 6 மணி வரையும்,
17 ஆம் திகதி வியாழக்கிழமை புனித அந்தோனியார் ஆலய வளாகம், இறம்பைக் குளம் வவுனியாவில் காலை 9 மணி முதல் 21

## மக்களின் விருப்பத்தைப் புறந்தள்ளி மஹிந்த முன்னிலையில் பதவியேற்பு

### கூட்டமைப்பின் தலைவர்கள் முடிவு

யாழ்ப்பாணம், ஒக். 5
வடக்கு மாகாண முதலமைச்சராக க.வி.விக்னேஸ்வரன் நாளை மறுதினம் திங்கட்கிழமை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ முன்னிலையில் பதவியேற்கவுள்ளார்.
திங்கட்கிழமை காலை 9 மணிக்கு அலரி மாளிகையில் இந்தப் பதவியேற்பு வைபவம் நடைபெறவுள்ளது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அங்கத்துவக் கட்சிக்கு இடையில் நேற்று வெள்ளிக்கிழமை காலை கொழும்பில் இடம்பெற்ற கலந்துரையாடலிலேயே மேற்படி விடயம் தீர்மானிக்கப்பட்டுள்ளது.
இந்தக் கலந்துரைடயாலுக்கு முன்பதாக நேற்றுக் காலை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தனியாகச் சென்று சந்தித்துப் பேசினார்
இதன்போது வடக்கு மாகாண சபையின் செயற்பாட்டுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு சம் பந்தன் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளார். இதற்கு ஜனாதிபதி ஒத்துழைப்பு வழங்குவதாகப் பதிலளித்துள்ளார்.
மாகாண சபையின் சர்ச்சைக்குரிய காணி, பொலிஸ் அதிகாரங்கள் தொடர்பிலும் இதில் கலந்துரையாடப்பட்டுள்ளது. அத்து 21

## ஜனாதிபதியுடன் பேச்சு தொடரும்

### அலரிமாளிகைச் சந்திப்பின் பின்னர் சம்பந்தன் தெரிவிப்பு

கொழும்பு, ஒக்.5
ஜனாதிபதிக்கும் கூட்டமைப் புக்கும் இடையிலான பேச்சு தொடரும். தமிழ் மக்களுக்குத் திருப்தியளிக்கக்கூடிய – எல்லோரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய வகையில் முடிவுகளை நாம் எடுப்போம்.
இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் திருகோண மலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இரா. சம்பந்தன் தெரிவித்தார்.
ஜனாதிபதியின் செயலாளரின் அழைப்பின் பேரிலேயே தான் நேற்று ஜனாதிபதியைச் சந்தித்து பல முக்கிய விடயங்கள் குறித்துப் பேசியுள்ளார் எனவும் அவர் குறிப்பிட்டார்.



ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனுக்குமிடையில் நேற்றுக் காலை9 மணியளவில் அலரி மாளிகையில் 21

## '13' ஆதரவுத் தீர்மானங்களால் அதிகாரங்கள் கிடைத்துவிடாது

### வடக்கு – கிழக்கு இணைப்பும் சாத்தியமில்லை என்கிறது அரசு

கொழும்பு, ஒக்.5
"மாகாணசபைகளுக்கு காணி, பொலிஸ் அதிகாரங்கள் வழங்கப்படமாட்டா. 13ஆவது திருத்தத்தை பலப்படுத்துவதற்கான தீர்மானங் களை நிறைவேற்றுவதனூடாக இந்த அதிகாரங்களைப் பெற்றுக்கொள்ளவும் முடியாது" என்று அரசு நேற்று அறி வித்தது.
வடக்கு - கிழக்கு இணைப்பு இனி மேல் சாத்தியம் இல்லை என்றும் அது தெரிவித்தது.
காணி அதிகாரம், வடக்கு - கிழக்கு இணைப்பு தொடர்பிலான உயர் நீதி மன்றத்தின் தீர்ப்புகள், 18ஆவது திருத்தம் ஆகியவற்றைக் கோடிகாட்டி கருத்து வெளியிட்டபோதே ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச் செயலாளரும், அமைச்சருமான சுசில் பிரேமஜயந்த மேற்கண்ட வாறு தெரிவித்தார்.
13ஆவது திருத்தத்தை பலப்படுத்த தீர்மானங்களை நிறைவேற்று 21

## மேல் மாகாணசபைத் தேர்தல் சித்திரை புத்தாண்டுக்கு முன்

### அரசு நேற்று அறிவிப்பு

கொழும்பு, ஒக்.5
மேல் மாகாணசபைத் தேர்தல் எதிர்வரும் தமிழ் – சிங்கள புத்தாண்டுக்கு முன்னர் நடத்தப்படும் என அரசு நேற்று அறிவித்தது. அத்துடன், ஊவா, தென் மாகாணத் தேர்தல்கள் மாகாண ஆளுநரின் அறிவித்த லுக்கமைய நடத்தப்படும் என் றும் அது தெரிவித்தது.
ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மேற்கொள்ளும் தீர்மானத்தை எவரும் சவாலுக்குட்படுத்த முடியாது. மேலும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி எடுக்கும் தீர்மானம், நீதிமன்றத் தீர்ப்பைப் போன்றதாகும் என்றும் அறிவித்தது.
ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சித் தலைமையகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த தெரிவித்தவை வருமாறு:- 21

## ஓட்டோ மோதி வயோதிபர் சாவு

யாழ்ப்பாணம், ஒக். 5
கைதடி மேற்கில் நேற்று இடம்பெற்ற விபத்தில் படுகாயமடைந்த முதியவர் யாழ். போதனா வைத்திய சாலையில் உயிரிழந்தார்.
கைதடி மேற்கில் நேற்று நண்பகல் 12 மணியளவில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.
வீட்டில் இருந்து வந்து வீதியில் சைக்கிளுடன் ஏற முற்பட்ட இவரை அவ்வழியே வந்த ஓட்டோ ஒன்று பலமாக மோதி விட்டுத் தப்பிச் சென்றது.
படுகாயமடைந்த அவர் அயலவரின் உதவியுடன் உடனடி 21

## வெட்கம் கெட்ட மு.கா. வெளியேற வேண்டும்

### அரச பங்காளி ஹெல உறுமய போர்க்கொடி

கொழும்பு, ஒக்.5
"ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸை அரச கூட்டுக்குள் தொடர்ந்து வைத்திருப்பதா அல்லது வெளியேற்றுவதா என்பது தொடர்பில் அரசு விரைவில் தீர்க்கமானதொரு முடிவை எடுக்க வேண்டும்" என்று அரசின் பங்காளிக் கட்சியான ஜாதிக ஹெல உறுமய வலியுறுத்தியுள்ளது.
சலுகைகளை அனுபவித்துக் கொண்டு அரசை விமர்சிக்கும் முஸ்லிம் காங்கிரஸுக்கு உறுதியானதொரு கொள்கை இல்லை என்றும், மஹிந்த சிந்தனையை ஏற்று செயற்பட முடியாவிட்டால் அக்கட்சி, அரசிலிருந்து வெளியேற வேண்டும் என்றும் ஹெல உறுமய குறிப்பிட்டுள்ளது.
அரசமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டத்தைப் பலப் படுத்த வேண்டும் என வலியுறுத்தி ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கிழக்கு மாகாண சபையில் நிறைவேற்றியுள்ள தீர்மானத்தை வன்மையாகக் கண்டித்துள்ள ஹெல உறுமயவின் ஊடகப் பேச்சாளர் நிஷாந்த ஸ்ரீ வர்ணசிங்க, மு.காவையும் கடுமையாக விமர்சித்துள்ளார்.
மு.காவை பங்காளியாக வைத்திருப்பதால் அரசுக்கு சாதகத்தை விட பாதகமே அதிகம். அக்கட்சியால் அரசுக்கு நன்மை பயக்கப் போவதில்லை.
முஸ்லிம் காங்கிரஸின் அரசியல் கொள்கை அரசுக்கு விரோதமானதாகவே இருக்கின்றது. அவர்கள் அரசுடன் எவ்வாறான இணக்கப்பாடுகளைச் செய்துள் 21

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தினுஜ புத்தா படகிலிருந்தோரை கரைக்கு மீட்டு வருகிறது சாகரா

கொழும்பு, ஒக்.05
மாலைத்தீவு மற்றும் இலங்கை கடற்பரப்பிற்கு இடையில் பழுதடைந்த படகில் இருந்தவர்களை இலங்கை கடற்படையினர் மீட்டுள்ளனர். தி னுஜ புத்தா என்ற படகில் இருந்த நபர்கள் தற்போது கரைநோக்கி அழைத்து வரப்படுகின்றனர் என கடற்படை ஊடகப் பேச்சாளர் கோசல வர்ண குலசூரிய தெரிவித்துள்ளார்.
இலங்கையின் தென்மேற்கு கடற் பரப்பில் 215 கிலோமீற்றர் தொலைவில் 65 பேருடன் பயணித்த படகு ஒன்று தொழில்நுட்ப கோளாறு காரணமாக கடந்த வியாழக்கிழமை மாலை பழுதடைந்தது. இந்தப் படகில் பயணித்தவர்களை மீட்க இலங்கைக் கடற் படையினரின் சாகர எனும் கப்பல் அப்பகுதிக்கு விரைந்து சென்றது. அதன்படி நேற்றுமுன்தினம் இரவு கடற்படையின் கப்பல் படகு இருந்த இடத்தை அடைந்ததுடன், படகில் இருந்தவர்கள் மீட்கப்பட்டுள்ளனர் என்றும் அவர் குறிப்பிட்டார். (த)

## அமெரிக்க நிறுவனங்கள் குறித்து இலங்கையில் எதிர்மறைக் கருத்து

நியூயோர்க், ஒக்.5
அமெரிக்க அரசு நிறுவனங்கள் பல மூடப்பட்டுள்ள விடயம் தொடர்பாக இலங்கையிலுள்ள ஊடகங்கள், அமெரிக்க அரசின் நிலைப்பாட்டுக்கு எதிர்மறையான கருத்துக்களை வெளியிட்டு வருகின்றன என்று அமெரிக்க ராஜாங்க அமைச்சின் பிரதி பேச்சாளர் மாரி ஹார்ட் தெரிவித்துள்ளார்.
அமெரிக்க நிர்வாகம் தன்னை ஒழுங்குபடுத்திக் கொள்ள முடியாமல் இருப்பதற்குக் காரணம் என்ன என்பதை உலகில் பல பகுதிகளிலும் உள்ள பலரால் புரிந்து கொள்ள முடிவதில்லை என்றார் அவர்.
அமெரிக்க அரசு, குறிப்பாக காங்கிரஸ் சபையில் உள்ள பலரும் இலங்கை அரசு நல்லிணக்கத்தையும் பொறுப்புக் கூறலையும் முன்னெடுக்க வேண்டும் என்று கடுமையாக வற்புறுத்தி வந்திருக்கிறார்கள். நாம் மிகவும் கவனம் செலுத்துகின்ற விடயம் இது. ஆனால் இலங்கையிலுள்ள ஊடகங்கள் வொஷிங்டனில் என்ன நடக்கிறது என்பதைக் கவனித்துக் கொண்டிருந்து விட்டுக் கூறுகிறார்கள். எமது நல்லாட்சி முறையை அவர்களுக்குப் பொதிசெய்து அனுப்பி திரும்பப்பெற வேண்டும் என்று ராஜாங்க அமைச்சின் பத்திரிகையாளர் சந்திப்பில் அவர் மேலும் கூறினார். (த-ப)

**இலங்கையிலுள்ள ஊடகங்கள் வொஷிங்டனில் என்ன நடக்கிறது என்பதைக் கவனித்துக் கொண்டிருந்து விட்டுக் கூறுகிறார்கள். எமது நல்லாட்சி முறையை அவர்களுக்குப் பொதிசெய்து அனுப்பி திரும்பப்பெற வேண்டும்**

## தென்மாகாணத்தில் முதல்வர் வேட்பாளராக குதிக்கத் தயார்

### மங்கள சமரவீர உறுதி



கொழும்பு,ஒக்.05
எதிர்வரும் தென் மாகாண சபைத் தேர்தலில் ஐக்கிய தேசியக்கட்சியின் சார்பில் முதலமைச்சர் வேட்பாளராகப் போட்டியிட தயார் என்று நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.
இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது.
தேர்தலில் போட்டியிடுமாறு கோரிக்கை முன்வைக்கப்பட்டால், நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை துறந்துவிட்டு, தென் மாகாண சபைத் தேர்தலில் போட்டியிட தயாராக உள்ளேன். ஆபத்தான முயற்சியாக இருந்தாலும் ஐக்கிய தேசியக்கட்சியின் நலனுக்காக அப்படியான நடவடிக்கை ஒன்றை எடுக்க தயக்கமோ, விருப்பமின்மையோ இல்லை. கட்சியின் மேல் மட்டத்தில் இருந்தும் பிரதேச மட்டத்தில் இருந்தும் அதற்கான கோரிக்கைகள் முன்வைக்கப்பட வேண்டும். எனினும் அப்படியான கோரிக்கைகள் எதுவும் இதுவரை முன்வைக்கப்படவில்லை என்றார் அவர். (த)

## 4,500 பொலிஸாருக்கு தமிழ்மொழி பயிற்சி

கொழும்பு, ஒக்.5
4,500 பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு இதுவரை தமிழ் மொழிமூல பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன என்று தேசிய மொழிகள் மற்றும் ஒருமைப்பாடுகள் பயிற்சி அமைச்சு தெரிவித்துள்ளது.
கடந்த மூன்றாண்டுகள் காலத்துள் களுத்துறை, காங்கேசன்துறை, மஹியங்கனை மற்றும் மட்டக்களப்பு பொலிஸ் பயிற்சி மையங்களில்இந்தப்பயிற்சிவழங்கப்பட்டுள்ளது என்று அமைச்சர் வாசுதேவ நாணயக்கார கூறினார். (ச-22)

## ஜேம்ஸ் பாக்கரின் சூதாட்ட நிறுவனத்துக்கு வரிவிலக்கு

கொழும்பு,ஒக் 05
ஆஸ்திரேலிய பெரும் வணிகரான ஜேம்ஸ் பாக்கரால் கொழும்பு நகரில் ஸ்தாபிக்கவுள்ள பெரியதொரு சூதாட்ட நிறுவனத்துக்கு வரிவிலக்கு அளிப்பதை அறிவிக்கும் வர்த்தமானி அறிவித்தலை நாடாளுமன்றம் விவாதித்து அங்கீகரிக்கவுள்ளது.
உபாய அபிவிருத்தி சட்டத்தின் கீழ் அறிவிக்கப்பட்டுள்ள இந்த செயற்றிட்டம் அமைச்சரவையால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இப்போது அதற்கான வர்த்தமானி அறிவித்தலை நாடாளுமன்றம் அங்கிகரிக்க வேண்டியுள்ளது.
டி.ஆர்.விஜயவர்தன மாவத்தையில் அமையவுள்ள இந்த திட்டத்தில் கேட்போர் கூடம் உட்பட பல வசதிகளுடன் கூடிய 400 அறைகள் கொண்ட ஹோட்டல் சூதாட்ட வசதிகள் ஆடம்பர உணவகங்கள் மற்றும் தொடர்பாடல் வசதிகள் அமையவுள்ளன.
கம்பனி வருமான வரி, இலாபத்தின் மீதான வரி, பிடித்துவைக்கும் வரி, உழைக்கும்போதே செலுத்தும் வரி, சூதாட்ட வரிச் சட்டத்தின் கீழ் அறிவிக்கப்பட்ட கட்டணங்கள், பெறுமதி கூட்டிய வரி என்பவற்றிலிருந்து இந்த நிறுவனத்திற்கு வரி விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.
இதைவிட இத்திட்டத்துக்குகாக இறக்குமதியாகும் பொருள்களுக்கு துறைமுகம் மற்றும் விமான நிலைய அபிவிருத்தி வரி சுங்க வரி என்பனவும் அறவிடப்படமாட்டாது. இத்திட்டத்தை எதிர்க்கட்சிகள் பலமாக எதிர்க்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. (த)

## 3 இலங்கை ஆவணப்படங்களுக்கு தடை விதித்துள்ளது நேபாள அரசு

காத்மண்டு, ஒக்.05
நேபாளத்தில் நடைபெறும் தெற்காசியத் திரைப்பட விழாவில் இலங்கையின் மூன்று ஆவணப்படங்களைத் திரையிடுவதற்கு நேபாள அரசு தடைவிதித்துள்ளது. இலங்கை அரசாங்கத்தின் கோரிக்கையை ஏற்று இந்த தடை விதிக்கப்பட்டுள்ளது.
தெற்காசிய திரைப்பட விழாவில், புரோக்கன், த ஸ்டோரி ஒப் வன் மற்றும் நோ பயர் சோன் ஆகிய ஆவணப்படங்கள் திரையிடப்படவிருந்தன. எனினும் நேபாள அரசிடம் இருந்து கிடைத்த உத்தரவை அடுத்து அந்த மூன்று படங்களையும் திரையிடுவதில்லை என்று தென்னாசியத் திரைப்பட சம்மேளனம் அறிவித்துள்ளது. இதற்கான காரணங்களை நேபாள தகவல் அமைச்சு தென்னாசியத் திரைப்படச் சம்மேளனத்துக்கு அறிவிக்கவில்லை.
இந்தநிலையில் குறித்த மூன்று படங்களும் வேறு ஒரு இடத்தில் சனிக்கிழமையன்று காண்பிக்கப்படும் என்று கூறியுள்ள தென்னாசியத் தி ரைப்பட சம்மேளனம், 2000 டொலர் வெற்றிப் பரிசின் போதும் இந்தப் படங்கள் கருத்திற்கொள்ளப் படும் என்று தெரிவித்துள்ளது.
நேபாள அரசாங்கத்தின் இந்தச் செயல் சுதந்திரமான பேச்சுரிமைக்கு எதிரான செயல் என்றும் சம்மேளனம் குறிப்பிட்டுள்ளது.
இதேவேளை, இலங்கை அரசின் அழுத்தம் காரணமாகவே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக விழாவின் ஏற்பாட்டாளர்கள் குற்றம் சாட்டுகின்றனர். (த)

## திருமலையில் குண்டு மீட்பு

திருகோணமலை, ஒக்.05
திருகோணமலை, குச்சவெளி என்னும் இடத்தில் 61 மில்லி மீற்றர் மோட்டார் குண்டொன்று மீட்கப்பட்டுள்ளது.
குச்சவெளி பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள 2 ஆம் வட்டாரத்திலேயே நேற்று வெள்ளிக்கிழமை காலை இந்தக் குண்டு மீட்கப்பட்டுள்ளது. தங்களுடைய வீட்டு வளைவில் மர்மமான பொருளொன்று கிடப்பதாக வீட்டு உரிமையாளர் பொலிஸாருக்குத் தகவல் தெரிவித்தார்.
சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிசார் இது தொடர்பில் இராணுவத்தின் கவனத்துக்கு கொண்டுவந்தனர். இராணுவத்தினர் அந்தக் குண்டை மீட்டுப் பொறியிலாளர்கள் உதவியுடன் செயலிழக்கச் செய்தனர்.
போர்க் காலத்தில் ஏவப்பட்ட குண்டே அந்த வீட்டு வளவுக்குள் விழுந்து வெடிக்காமல் இருந்திருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகின்றது. (த)

## திருகோணமலை துறைமுகத்தில் ரஷ்ய ஏவுகணைப் போர்க் கப்பல்



திருகோணமலை, ஒக்.05
ரஷ்ய கடற்படையின் பாரிய ஏவுகணைப் போர்க் கப்பல் ஒன்றும், விநியோகக் கப்பல் ஒன்றும் நட்புறவுப் பயணமாக நேற்றுக் காலை திருகோணமலைத் துறைமுகத்துக்கு வந்துள்ளன. இந்தக் கப்பல்களுக்கு இலங்கைக் கடற்படையினர் மரபுரீதியான வரவேற்பை அளித்துள்ளனர்.
வர்யக் என்ற பெயர் கொண்ட, 187 மீற்றர் நீளமான ஏவுகணைப் போர்க்கப்பலும், பொரிஸ் புடோமா என்ற 162 மீற்றர் நீளமான விநியோகக் கப்பலுமே திருகோணமலைத் துறைமுகத்துக்கு வந்துள்ளன.
வர்யக் போர்க்கப்பலில், 65 அதிகாரிகள் உள்ளிட்ட 529 கடற்படையினரும், பொரிஸ் புடோமா கப்பலில், 75 மாலுமிகளும் பணியாற்றுகின்றனர்.
ரஷ்யக் கடற்படையின் பசுபிக் கப்பற் பிரிவைச் சேர்ந்த இந்தக் கப்பல்கள், எதிர்வரும் 8ஆம் திகதி வரை திருகோணமலையில் தரித்து நிற்கவுள்ளன. இதன்போது, இலங்கைக் கடற்படையினருடன் இணைந்து, ரஷ்யக் கடற்படையினர் பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்கவுள்ளனர். (த)

## பணிப்பெண்களாக வெளிநாடு செல்வோர் வீதம் கடும்வீழ்ச்சி

### வேலைவாய்ப்பு பணியகம் தெரிவிப்பு

கொழும்பு, ஒக்.05
வெளிநாடுகளுக்குப் பணிப் பெண்களாக செல்பவர்களின் எண்ணிக்கை படிப்படியாக குறைந்து வருகிறது என இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம் தெரிவித்துள்ளது.
பயிற்றப்பட்ட பணியாளர்களை வெளிநாடுகளுக்கு அனுப்புவதற்கும், பணியகத்தினால் முன்னெடுக்கப்பட்ட சில முக்கிய தீர்மானங்கள் காரணமாகவும் இந்தப் பலன் கிடைத்துள்ளது.
இதுபற்றி கருத்து வெளியிட்ட வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் பிரதிப் பொது முகாமையாளர் மங்கள ரன்தெனிய, பணிப்பெண்களாக யாரும் வெளிநாடுகளுக்கு செல்ல முடியும் என்ற கொள்கையே கடந்த காலத்தில் இருந்தது. தற்போது இதற்கு தகைமை மற்றும் குடும்பப் பின்னணி தொடர்பான அறிக்கை மற்றும் அவர்களது விளையாட்டு திறமை மற்றும் தொழில் பயிற்சிச் சான்றிதழ் என்பன கட்டாய மாக்கப்பட்டுள்ளன. அதனூடாக அவர்களுக்கு அதிக வருமானம் மற்றும் தொழில் பாதுகாப்பையும் பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருக்கும் என்று தெரிவித்துள்ளார். (த)

## முதல்வருக்கு எதிராக நேற்று ஆர்ப்பாட்டம்

மத்திய மாகாண முதலமைச்சராக நியமிக்கப்பட்டுள்ள முன்னாள் முதலமைச்சர் சரத் ஏக்கநாயக்கவுக்கு எதிராகக் கண்டியில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டமொன்று நேற்றுமுன்தினம் வியாழக் கிழமை நடத்தப்பட்டுள்ளது.
மத்திய மாகாணத்தில் கண்டி மாவட்டத்தில் அதிகூடிய விருப்பு வாக்குகளைப் பெற்ற பிரதமர் டி.எம்.ஜயரட்னவின் மகனான அனுராத ஹேரத்தின் ஆதரவாளர்களே இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது. (த)

## இலக்கமற்ற மோ.சைக்கிளில் வந்தோரே பொலிஸாரை வெட்டினர்

யாழ்ப்பாணம், ஒக்.05
ஆனைக்கோட்டையில் இலக்கத்தகடு இல்லாத மோட்டார் சைக்கிளில் சென்றவர்களை பொலிஸார் மறித்த போதே அவர்கள் பொலிஸாரை வாளால் வெட்டி விட்டுத் தப்பிச் சென்றுள்ளனர் எனத் தெரிய வருகிறது.
இது தொடர்பில் இதுவரை எவரும் கைது செய்யப்படவில்லை.
இச் சம்பவத்தை அடுத்து மானிப்பாய் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மல்கம் பேத் பொலிஸ் தலைமையகத்தினால் பணியிலிருந்து தற்காலிகமாக இடை நிறுத்தப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.
பொலிஸார் மீது வாள் வீச்சு நடத்திய சம்பவத்துடன் தொடர்பிருக்கலாம் என்ற சந்தேகத்தில் நேற்றுமுன்தினம் அதே இடத்தைச் சேர்ந்த ஏழு பேரை பொலிஸார் கைது செய்தனர். எனினும் விசாரணையின் போது அவர்களுக்கும் சம்பவத்துக்கும் தொடர்பில்லை என்பது தெரியவந்தமையால் அவர்கள் விடுவிக்கப்பட்டனர். ஆனைக் கோட்டையில் கடந்த புதன் இரவு ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த பொலிஸார் அவ் வழியே சென்ற வாகனங்களின் ஆவணங்களைப் பரிசோதித்துக் கொண்டிருந்தனர்.
இதன்போது இலக்கத்தகடு இல்லாத மோட்டார் சைக்கிள் ஒன்று வந்துள்ளது. அதில் பயணித்தவர்களை நிறுத்த முற்பட்ட போதே அவர்கள் தாம் வைத்திருந்த வாளை எடுத்து பொலிஸாரை வெட்டியுள்ளனர். இதன் போது பொலிஸாரின் கையில் வெட்டு வீழ்ந்தது. வெட்டு நடத்தியவர்கள் அங்கிருந்து தப்பிச் சென்றுவிட்டனர். (த-4)

**இச் சம்பவத்தை அடுத்து மானிப்பாய் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மல்கம் பேத் பொலிஸ் தலைமையகத்தினால் பணியிலிருந்து தற்காலிகமாக இடை நிறுத்தப்பட்டுள்ளார்**

## சிக்கனக் கடன் வழங்கும் திட்டம் நேற்று ஆரம்பம்



யாழ்.மாவட்ட சிக்கன கடன் வழங்கும் கூட்டுறவுச் சமாசம் அங்கத்தவர்களுக்கான முயற்சியாளர் கடன் வழங்கும் திட்டத்தை நேற்று வெள்ளிக் கிழமை ஆரம்பித்து வைத்தது.
யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் சமாசத் தலைவர் எஸ்.இலகுநாதன் தலைமையில் இடம் பெற்ற இந்தக் கடன் வழங்கும் திட்டத்தை யாழ்.மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வி.கே.அருந்தவநாதன் ஆரம்பித்து வைத்தார்.
100 அங்கத்தவர்களுக்கு இந்தக் கடன் தொகை நேற்று வழங்கப்பட்டது.
கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ்.சிறிக்குமார், கூட்டுறவு சபைத் தலைவர் ஆர். இராஜாராம் உட்பட சமாச பணிப்பாளர்கள் அங்கத்தவர்கள் போன்றோர் இதில் கலந்துகொண்டனர். (த-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மூன்றுமுறிப்பு பாடசாலை உளநல அறை தீக்கிரை



வவுனியா, ஒக். 5

வவுனியா மூன்று முறிப்பு அ.த.க.பாடசாலையின் மகிழ்வூட்டல் உளநல அறை இனந்தெரியாத நபர்களால் எரியூட்டப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றது.

இது குறித்து பொலிஸில் முறையிடப்பட்டதைத் தொடர்ந்து பொலிஸார் குறித்த இடத்துக்குச் சென்று எரியூட்டப்பட்ட அறையைப் பார்வையிட்டுள்ளனர். இது குறித்த மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

இதேவேளை பாடசாலை மாணவர்களுக்கான உளநலம் பேணும் அறை எரியூட்டப்பட்டமைக்கு பாடசாலைச் சமூகம் வன்மையாகக் கண்டனம் தெரிவித்துள்ளது. (வ-402)

## சட்டவிரோத மது விற்பனை; 265 பேருக்குத் தண்டம்

### 13 லட்சம் ரூபா அறவீடு

யாழ்ப்பாணம், ஒக்.5

கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் சட்டவிரோத மதுவரிக் குற்றச் செயல்களில் ஈடுபட்ட 265 பேரிடமிருந்து கடந்த 9 மாத காலப் பகுதிக்குள் 13 லட்சத்து 60 ஆயிரத்து 500 ரூபா தண்டப்பணம் அறிவிடப்பட்டுள்ளது என்று கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்ட மதுவரித் திணைக்களம் தகவல் தெரிவித்துள்ளது.

மதுவரித் திணைக்களத்தின் சட்டக் கோவைகளுக்கு அப்பால் 2 மாவட்டங்களிலும் சட்ட விரோதமாக அரச சாராயத்தை விற்பனை செய்தவர்கள், கள் விற்பனை செய்தவர்கள், கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டவர்கள், 21 வயதுக்கு உட்பட்டவர்களுக்கு சிகரெட் விற்பனை செய்தவர்கள் என 265 பேர் இனங்காணப்பட்டனர்.

அவர்களுக்கு எதிராக நீதிமன்றங்களில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டபோது அவர்களுக்கு மொத்தமாக 13 லட்சத்து 60 ஆயிரத்து 500 ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டது.

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்ட மதுவரித்திணைக்களத்தின் பொறுப்பதிகாரி றொஷன் சஞ்சே ராஜீ தலைமையிலான மதுவரித் திணைக்கள உத்தியோகத்தர்கள் கொண்ட குழுவினரால் நடத்தப்பட்ட திடீர் சோதனை நடவடிக்கைகளின் போது குறிப்பிட்ட குற்றச் செயல்கள் இனங்காணப்பட்டமை குறிப் பிடத்தக்கது. (வ-14-9)

சமூக உயர்வுக்காகத் தம்மை அர்ப்பணித்த

## ஆசிரியர்களின் பணி தொடரட்டும்

### ஆசிரியர் தின வாழ்த்துச் செய்தியில் கல்வி அமைச்சின் செயலர்

யாழ்ப்பாணம், ஒக். 5

தன்னலம் கருதாது சமூக உயர்வுக்காகத் தம்மை அர்ப்பணித்து ஏணிகளாக இருந்து எமது சமூகத்தை உயர்த்தி நிற்கும் ஆசிரியர்களது பணி தொடர பாராட்டி வாழ்த்துவதாக வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் சி.சத்திய சீலன் தெரிவித்துள்ளார்.

ஆசிரியர் தினத்தை முன்னிட்டு அனுப்பியுள்ள செய்திக் குறிப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.


ஆசிரியத் தொழில் மிகவும் உயர்வான புனிதமான தொழிலாகும். இறைவனால் சமூகத்துக்கு சேவையாற்றுவதற்கு கிடைத்த சந்தர்ப்பமாக இதனைக் கருதி மிகுந்த சமூகப் பொறுப்புடன் தமது பணிகளை ஆசிரியர்கள் மேற்கொள்ள வேண்டும்.

எமது சமூகத்தின் எதிர்காலச் சிற்பிகளாகவும், விலை மதிக்க முடியாத மூலதனங்களாகவும் உள்ள மாணவச் செல்வங்களை கல்வி அறிவுடையவர்களாகவும், கலாசார , சமய, பண்பாட்டு விழுமியங்களைப் பேணி நடப்பவர்க ளாகவும் நல்லொழுக்கமும் நேர்மையான மனப்பாங்கும் உடையவர்களாகவும் உருவாக்குவது அவசியமாகும்.

தன்னலம் கருதாத சமூக உயர்வுக்காக தம்மை அர்ப்பணித்த ஏணிகளாக எமது சமூகத்தை உயர்த்தி நிற்கும் ஆசிரியர்களாகிய உங்களின் புனிதமான பணி தொடரட்டும். விலைமதிக்கமுடியாதசேவையை வழங்கும் உங்களுக்கும் , குடும்ப உறுப்பினர்களுக்கும் இறைவன் ஒளிமயமான எதிர்காலத்தை வழங்க வேண்டிப் பிரார்த்திப்பதுடன், இன்றைய நாளில் ஆசிரியர்களின் சேவையைப் பாராட்டி வாழ்த்துக்களை தெரிவிக்கிறேன் எனக் குறிப் பிடப்பட்டுள்ளது. (வ-5)

போரினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு

## மன்னாரில் வீடுகள் கையளிப்பு



மன்னார், ஒக்.5

மன்னார் நெடுங்கண்டல் கிராமத்தில் போரினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு வீடுகள் கையளிக்கப்பட்டன.

மன்னார் மாந்தை மேற்கு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட நெடுங்கண்டல் கிராமத்தில் போரினால் பாதிக்கப்பட்டு மீள் குடியமர்ந்த மக்களுக்கு "போர்த்துக்கல் கரித்தாஸ் இலங்கை செடேக்" அமைப் பின் ஊடாக வழங்கிய நிதியுதவியுடன் மன்னார் வாழ்வோதயம் தலா 6லட்சம் ரூபா செலவில் அமைத்துக் கொடுத்த 55 வீடுகள் பயனாளிகளிடம் கையளிக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் மன்னார் மறைமாவட்ட ஆயர் இராயப்பு யோசேப்பு ஆண்டகை, போர்த்துக்கல் நாட்டு கரித்தாஸ் நிறுவனத் தலைவர் பொன்சேகா, கரித்தாஸ் இயக்குநர் அருட்பணி. ஜோர்ஜ் சிகாமணி அடிகளார், மன்னார் வாழ்வோதய இயக்குநர் அருட்பணி ஜெயபாலன் அடிகளார் ஆகியோர் கலந்துகொண்டனர். (க-12)

## எழுதுமட்டுவாழில் மாட்டுவண்டில் சவாரி மீண்டும் நாளை



தென்மராட்சி, ஒக்.5

எழுதுமட்டுவாழ் தரவைப் பகுதியில் மாட்டுவண்டிச் சவாரிப் போட்டி நாளை ஞாயிற்றுக் கிழமை ஒரு மணிக்கு மீண்டும் நடைபெறுமென ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

கடந்த வாரம் போட்டி நடைபெற்றபோது ஏற்பட்ட அசம்பாவிதத்தால் போட்டி இடை நிறுத்தப்பட்டது. போட்டியைக் காண பெருமளவு ரசிகர்கள் கூடியிருந்த போதிலும் தவிர்க்க முடியாத நிலையில் இடை நிறுத்தவேண்டி எற்பட்டது. சவாரி நடைபெறும் பகுதி சீர் செய்யப்பட்டு நாளை போட்டி நடத்தப்படவுள்ளதாக வும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த வாரம் மாட்டுவண்டிச் சவாரி இடம்பெற்றபோது போட்டியாளர் ஒருவர் வீழ்ந்து காயமடைந்ததையடுத்து போட்டி இடைநிறுத்தப்பட்டமை குறிப் பிடத்தக்கது. (வ-9)

## நூலகர்களுக்கான இருநாள் பயிற்சி

யாழ்ப்பாணம், ஒக்.5

பொது நூலகங்களில் பணியாற்றும் நூலகர்களுக்கான இரு நாள் பயிற்சி வகுப்புகள் எதிர்வரும் 24, 25 ஆகிய தினங்களில் கொழும்பு சுதந்திர சதுக்கம் இல. 14 இல் உள்ள தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபையின் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளன.

தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபை இலங்கை நூலக சங்கம், ஆசிய பவுண்டேசன் நிறுவனம் ஆகியவை கூட்டாக இந்த இருநாள் பயிற்சி நெறியை நடத்தவுள்ளன. (வ-9)

## ஐந்து இடங்களில் 'பண்பாடு' வீதி நாடகம்

யாழ்ப்பாணம், ஒக்.5

வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் தெல்லிப்பழை பிரதேச செயலகக் கலாசாரப் பிரிவால் மக்களிடையே கலாசார விழிப்புணர்வை ஏற்படுத்துவதை நோக்காகக் கொண்டு 'பண்பாடு' விழிப்புணர்வு வீதி நாடகம் நடத்தப்படவுள்ளது.

குறித்த வீதி நாடகம் நாளை ஞாயிற்றுக்கி ழமை அளவெட்டி கிழக்கிலும் நாளை மறுதினம் திங்கட்கிழமை கட்டுவன் புலம் மகா வித்தியாலயம், எதிர் வரும் 11 ஆம் திகதி மாவிட்டபுரம், பட்டிக் கடவை, எதிர்வரும் 14 ஆம் திகதி தந்தை செல்வாபுரம் ஐக்கிய வாலிபர் சனசமூக நிலையம், எதிர் வரும் 15 ஆம் திகதி மல்லாகம் பழம்பதி பிள்ளையார் ஆலயம் ஆகிய இடங்களிலும் நடை பெறவுள்ளது. (வ)

## வடக்கில் 1,200 வெற்றிடங்கள் கமநல அபிவிருத்தி திணைக்களத்தில்

யாழ்ப்பாணம், ஒக்.5

கமநல அபிவிருத்தித் திணைக்களத்தில், வட பகுதியில் நிலவும் ஆயிரத்து 200 வெற்றிடங்களை நிரப்புவதற்காக திறந்த போட்டிப் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

கமநல அபிவிருத்தித் திணைக்களத்தில் விவசாய ஆராய்ச்சி உற்பத்தி உதவியாளர் III ஆம் வகுப்புக்கே திறந்த போட்டிப் பரீட்சை நடத்தப்படவுள்ளது.

இந்தப் போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்கான கல்வித் தகைமையாக கணிதம் மற்றும் மேலும் இரு பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஒரே தடவையில் 6 பாடங்களில் ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சையில் சித்தி பெற்றிருக்க வேண்டும். அத்துடன் ஜி.சீ.ஈ உயர்தரப் பரீட்சையில் ஆகக் குறைந்தது ஒரு பாடத்திலாவது சித்தியடைந்திருக்க வேண்டும்.

எழுத்து மூலப் போட்டிப் பரீட்சையூடாகவே ஆள் சேர்ப்பு இடம்பெறவுள்ளது. எழுத்துப் பரீட்சைக்குரிய பாடப் பரப்புக்கள், பொது உளச் சார்பு பரீட்சை மற்றும் விவசாயம் தொடர்பான பொதுவான அறிவுரைகளை உள்ளடக்கியதாக அமையும்.

விண்ணப்பப் படிவங்களை இந்த மாதம் 28 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்புமாறும், விண்ணப்பப் படிவம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினத்தன்று விண்ணப்பதாரர்களின் வயது 18 இற்குக் குறையாமலும் 30 இற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் தற்போது அரச சேவையில் மற்றும் மாகாண அரச சேவையில் உள்ளவர்களுக்கு இந்த வயதெல்லை ஏற்புடையதல்ல என்றும் நேற்று வெளியிடப்பட்டுள்ள வர்த்தமானி அறிவித்தலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-5)

## அநேகமான பாடசாலைகளில் திங்களன்றே ஆசிரியர் தினம்

தென்மராட்சி, ஒக்.5

உலக ஆசிரியர் தினம் ஒக்ரோபர் 5 ஆம் திகதி என பிரகடனப்படுத்தப்பட்டுள்ள போதிலும், இன்று சனிக்கிழமை என்பதால் பல பாடசாலைகளில் நாளை மறுதினம் திங்கட்கிழமை ஆசிரிய தின நிகழ்வுகள் நடத்தப்படவுள்ளன. பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்களை மாணவர்கள் மாலை அணிவித்து மலர் தூவி ஊர்வலமாக அழைத்து வந்து கௌரவிப்பு செய்வது வழக்கமாகும்.

இன்று சனிக்கிழமை என்பதால் ஆசிரியர்கள் மாணவர்களால் கௌரவிக்கப்படுவது இரு தினங்கள் பிற்போடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. இதேவேளை தனியார் கல்வி நிறுவனங்களில் இன்று ஆசிரியர் தின நிகழ்வுகள் இடம்பெறுமெனவும் தெரிவிக்கப்பட்டது. (வ-9)

## இலங்கைப் பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவுக்கு பத்து வருட நிறைவு

இலங்கைப் பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு நிறுவப்பட்டு இம்மாதம் 15 ஆம் திகதி 10 வருடங்கள் பூர்த்தியடைவதை முன்னிட்டு பல நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

2003 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 15 ஆம் திகதி பத்திரிகைத்துறையினரால் ஏற்படுத்தப்பட்ட இந்த ஆணைக்குழு கடந்த 10 வருடங்களாக இந்நாட்டின் ஊடகத் தொழில் துறையின் தரத்தை மேம்படுத்தவும் பொறுப்புணர்வு மிக்க ஊடகச் செயற்பாட்டை உறுதிப்படுத்தவும் பல நடவடிக்கைகளை முன்னெடுத்து வந்துள்ளது.

செய்தி மற்றும் தகவல் வெளியீடுகளின் போது ஊடக சுதந்திரத்தை மதிக்கும் வகையில் பொறுப்புணர்வுடன் செய்தி மற்றும் தகவல்களை வெளியிடலுக்கு ஊடகவியலாளர்களை வழிகாட்டும் வகையில், பத்திரிகைத்துறையினருக்கான தொழில்சார் நடைமுறைக் கோவையான ஊடக ஒழுக்கக் கோவை பற்றி அறிவூட்டல், ஊடகங்களால் தவறுகள் விடப்படும் போது ஊடக நிறுவனங்கள் அல்லது ஊடகவியலாளர்களுடன் முரண்பாடுகளை ஏற்படுத்திக் கொள்ளாதவாறு ஊடகப் பிணக்குகளை தீர்த்துக் கொள்ளும் வழிமுறை தொடாபாக பொது மக்களுக்கு அறிவூட்டல் போன்ற செயற்பாடுகள் ஆணைக் குழுவின் கடந்த கால செயற்பாடுகளில் முக்கியமானவையாகும்.

வடக்கு கிழக்கு உட்பட நாட்டின் சகல பகுதிகளிலும் உள்ள ஊடகவியலாளர்களுக்கு இத்துறையில் பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளதுடன் பொதுமக்களுக்கும் அறிவூட்டும் நிகழ்ச்சிகளும் நடத்தப்பட்டுள்ளன.

அத்துடன் 10 வருட நிறைவை முன்னிட்டு ஆணைக்குழு ஏற்பாடு செய்துள்ள சர்வதேச ஊடக மாநாடு எதிர்வரும் நவம்பா மாதம் 10 ஆம் திகதி முதல் 12 ஆம் திகதி வரை இலங்கை பத்திரிகை ஸ்தாபனத்தில் நடைபெறும். இம்மாநாட்டின் ஆரம்ப நிகழ்வு 2013 நவம்பர் மாதம் 10 ஆம் திகதி மாலை 5.00 மணிக்கு இலங்கை மன்றக் கல்லூரியில் நடைபெறும். இம் மாநாட்டில் உள்ளநாட்டு வெளி நாட்டு பிரதிநிதிகள் பலர் கலந்து கொள்ளவுள்ளனர். (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாநாட்டை முன்னிட்டு வாகன பவனி நாளை

## மட்டக்களப்பு பஸ் நிலையத்துக்கு முன்பாக பொட்ஸ்வானா நாட்டு தேசியக்கீதம் இசைப்பு

(காத்தான்குடி நிருபர்)

எதிர்வரும் நவம்பர் மாதம் கொழும்பில் நடைபெறவுள்ள பொதுநலவாய மாநாட்டினை முன்னிட்டு நடத்தும் வாகனப் பவனி நாளை ஞாயிற்றுக்கிழமை மட்டக்களப்பு மாவட்டத்துக்கு வருகை தரவுள்ளது.

இந்தத் தகவலை தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் மட்டக்களப்பு மாவட்ட அலுவலக உதவிப் பணிப்பாளர் எம்.நைறுஸ் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:

வடக்கு, கிழக்கு மாகாணாங் களிலுள்ள மாவட்டங்களுக்குச் சென்று வரும் இந்த வாகனப் பவனி மாவட்டங்களுக்கு வரும் போது ஒவ்வொரு மாவட்டங்களிலும் பொதுநலவாய நாடுகளில் இடம் பெற்றுள்ள ஒவ்வொரு நாடுகளின் தேசிய கீதம் இசைக்கப்படவுள்ளது.

அந்த நாட்டைப் பற்றிய குறிப் பொன்றை மும்மொழிகளிலும் கூற வேண்டுமென்ற செயற்றிட்டத்திற்கு அமைவாக மட்டக்களப்புக்கு ஞாயிற்றுக்கிழமை வருகை தரவுள்ள வாகனப் பவனிக்கு மட்டக்களப்பு பஸ் நிலையத்திற்கு முன்பாக வைத்து பொட்ஸ்வானா நாட்டு தேசியக் கீதம் மட்டக்களப்பு மஹஜனக் கல்லூரி மாணவிகளால் இசைக்கப்படும்.

அதேகல்லூரி மாணவிகளால் தமிழ், ஆங்கிலம், சிங்களம் ஆகிய மூன்று மொழிகளிலும் அந்த நாட்டைப் பற்றிய குறிப் பொன்றும் கூறப்படவுள்ளது.

இந்தநிகழ்வில் பிரதி அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன், மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் பி.எஸ்.எம். சாள்ஸ் உட்பட பலர் கலந்துகொள்வர்.

இந்த வாகனப் பவனி பருத்தித்துறையிலிருந்து ஆரம்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

வாகனத்தை வாங்கும் போது

# மோசடிகளிலிருந்து தப்பிக்க வருகிறது புதிய முறைமை

வாகனமொன்றை ஒருவர் வாங்கும்போது மோசடிப் பேர் வழிகளிடம் அகப்பட்டுக் கொள்வதைத் தவிர்க்கும் நோக்கில் அரச இரசாயனப் பகுப்பாய்வுத் திணைக்களத்தினால் புதிய முறைமையொன்று நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

வானமொன்றைக் கொள்வனவு செய்யும் போது, வாகனங்களின் இலக்கம், அடிச்சட்ட இலக்கம் என்பவை போலியானவைகளா என்பது பற்றி பரிசீலித்து மிகச் சரியான நவீன தொழில்நுட்பப் பரிசோதனை அறிக்கையொன்றைப் பெற்றுக் கொடுப்பதே அந்த நவீன முறைமையாகும் என்று அரச இரசாயனப் பகுப்பாய்வாளர் சரத் குணதிலக்க தெரிவித்தார்.

வாகனமொன்றைக் கொள்வனவு செய்வதற்கு முன்னர் கொள்வனவு செய்யப்படவுள்ள அந்த வாகனத்தின் அடிச்சட்ட இலக்கத்தை அரச இரசாயனப் பகுப்பாய்வுத் திணைக்களத்துக்குச் சமர்ப்பிக்க வேண்டும். அரசினால் அறவிடப்படும் கட்டணங்களைச் செலுத்தி அந்த வாகனம் மோசடி செய்யப்பட்ட போலியான நிலைப்பாட்டைக் கொண்டுள்ள வாகனமொன்றா என்பதைப் பரிசீலனை செய்வித்து அது சம்பந்தமான அறிக்கையொன்றைப் பெறவேண்டும் என்று அவர் கூறினார். (ச-22)

## மரண அறிவித்தல்

### கந்தன் ஞானமுத்து

(ஓய்வுபெற்ற பரிசாரகர்,கோப்பாய் பிரதேச வைத்தியசாலை)

கைதடி மேற்கு, கைதடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தன் ஞானமுத்து நேற்று (04.10.2013) வெள்ளிக்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தன் - வள்ளி தம்பதியரின் அன்பு மகனும் சின்னத்தங்கம், கதிரன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் நாகேஸ்வரியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற பண்டாரி மற்றும் கந்தையா, சின்னத்தம்பி ஆகியோரின் மைத்துனரும் சுதர்சினி, சுகிர்தா, கிருபதீசன், நளினி, துவாரகா ஆகியோரின் அன்புத் தந்தையும் விஜயானந்தன், குபேந்திரன் ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (06.10.2013) ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக ஊரியான் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கைதடி மேற்கு. (சி12569-23) தகவல்: கிருபதீசன் (மகன்)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



தோற்றம் 20 - 02 - 1948 மறைவு 05 - 09 - 2013

அமரர்

### ஐயாத்துரை திருநாவுக்கரசு

அவரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (05.10.2013) சனிக்கிழமை மு.ப. 11 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தொடர்ந்து நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

குறிப்பு:- இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

டச்சு வீதி, உடுவில். (32332-23-14) குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### கனகர் கணேசன்



கோப்பாயைப் பிறப்பிடமாகவும் கோப்பாய் கிருஷ்ணர் கோயிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட கனகர் கணேசன் கடந்த 02.10.2013 காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகர்- நாகமுத்து தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை- மாரிமுத்து தம்பதியரின் அன்பு மருமகனும் சந்திரமலரின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற கிருஷ்ணப்பிள்ளையின் சகோதரனும் கண்ணன், தேவன், கமலன், வதனி, கோகுலா, ஜெகன், ஈசன், நகுலா, ரூபா, பக்தீஸ், கஜி ஆகியோரின் அன்புத் தந்தையும் மஞ்சரி, சித்திரா, கவி தா, றமேஷ், சிவா, நிருஷா, மதன், ராஜன் ஆகியோரின் அன்பு மாமனும் லக்ஷி, ஆரங்கன், ஆருஷன், குகா, அரி, சுகிர், தீபன், தர்ஷனா, கோகுலன், சுரேஷ், ஆஷா, ஆத்தி, அனோ, ஜெனித், நிஜந்,ஷயா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் ,இறுதிக்கிரியைகள் நாளை (06.10.2013) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோப்பாய் கந்தன் காடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கிருஷ்ணர் கோயிலடி,
கோப்பாய். 0770742704 (32338-23-14) தகவல்: குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### முருகேசு மாதவர்



மலேசியாவைப் பிறப்பிடமாகவும் மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசு மாதவர் (ஓய்வுபெற்ற பொலிஸ் உத்தியோகத்தர்) நேற்று (04.10.2013) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.10.2013) சனிக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பி.ப. ஒரு மணிக்கு பிப்பிலி இந்து மயானத்தில் அடக்கஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வடலித் தோட்டம்,
மானிப்பாய் கிழக்கு, மானிப்பாய். (32334-23-14) தகவல்: குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

திருமதி **நீக்கிலாப்பிள்ளை யாகப்பு விக்டோரியா** (மலர்)



89, கோவில் வீதி, யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும், 3ஆம் வட்டாரம், அல்லைப்பட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி. நீக்கிலாப்பிள்ளை யாகப்பு விக்டோரியா கடந்த (30.09.2013) திங்கட் கிழமை காலமானார்.

அன்னார் றப்பியேற்ப்பிள்ளை- செல்லம்மா தம்பதியரின் அன்புமகளும், நீக்கலாப்பிள்ளை யாகப்புவின் (அல்லைப்பிட்டி) அன்பு மனைவியும், சவரிமுத்து-திரேசாவின் (கனடா), அன்புச்சகோதரியும், டேவிட் எலிசபெத்தின்(கனடா) அன்பு மச்சாளும், குணசிங்கம் மேரி றெனிஜோசப்வின் (டென்மார்க்), அருட்சகோதரி கேமன் ஜோசவ் (திருக்குடும்ப கன்னியர் சபை), தங்கராசா ஆகியோரின் அன்பு அண்ணியும், பீற்றர் அலோசியஸ் ரவீந்திரன் (பிரான்ஸ்), மேரி றீற்றா (றஞ்சினி- சில்லாலை), நிர்மலா ஜெஸ்மின் (ராணி-கனடா), கொன்செப்ரா மாலினி (றோகினி-சில்லாலை), மேரி ஆன் யூலியற் (றாஜினி-டென்மார்க்) ஜொவிற்றா றஜனி (றஜனி-மன்னார்), அன்ரனிற்றா (றமனி-யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புத்தாயும். கலா, அன்ரன் தார்ஸியஸ், ரவி குண ராஜா, கொட்பிறி பல்லி, பால மனோகரன், விமலசூரியன் ஆகியோரின் அன்பு மாமியாரும் சிவா ஜெனிற்றி (கனடா), லின்டா, லிதியா, லொய்க், லெவன் (கனடா), ஸ்ரெபன், ஜொனத்தன், பயோனா, (பிரான்ஸ்), அரவிந் அலெக்ஸ், அனிஸ்ரன் (சில்லாலை), ஜெனிபர், மெலனி, நத்தர்ஷா (டென்மார்க்), ஆன்சிலி அருண், கஜீபன், அபிவர்னா (மன்னார்), மேரியூஜின், மேரிறீற்றா, நிறோஜன் (சில்லாலை), தர்மிலன் (பிரான்ஸ்), ஷறோன் ஷாலினி, மொறின் ஷாமினி, நிர்மலன் (யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், லில்லி ஆனின் (கனடா) பூட்டியும் ஆவர்.

அன்னாரின் நல்லடக்கம் இன்று (05.10.2013) சனிக்கிழமை பி.ப 2.30 மணியளவில் புனித யுவானியார் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு, கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:
94777 875409 - ஜேக்கப் (யாழ்ப்பாணம்). தகவல்: குடும்பத்தினர்

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 07 . 06 . 1928



மறைவு 05 . 09 . 2013

### வேலுப்பிள்ளை பூமணி

கடந்த 05.09.2013 அன்று சிவபதமடைந்த வேலுப்பிள்ளை பூமணி அவர்களின் 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய நிகழ்வும் இன்று (05.10.2013) சனிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற உள்ளதால் அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

சந்தம் புளியடி (புதுரோட்),
காரைநகர்.

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்,
பொப்பாட்டப்பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனேடிய தம்பதியரின் உடைமைகள் தப்பின

## நெடுந்தீவுக் கடலில் நீராடிய வேளையில் திருட்டில் ஈடுபட்ட 4 இளைஞர்கள்

யாழ்ப்பாணம், ஒக்.5

நெடுந்தீவு மேற்கு பனங்காணிப் பகுதிக் கடலில் நீராடிக் கொண்டிருந்த கனேடிய வெள்ளைக்காரத் தம்பதிகளின் பணம், புகைப்படக் கருவிகள் கொண்ட உடுப்புப் பொதி களவாடப்பட்டது. எனினும் அவர்கள் மேற்கொண்ட துரித செயற்பாடுகளால் பொருள்கள் மீண்டும் உரியவர்களுக்குக் கிடைத்தன.

கடந்த 2 ஆம் திகதி நடைபெற்ற இந்தச் சம்பவம் குறித்துத் தெரியவருவதாவது: குறித்த தம்பதிகள் தமது உடைமைகளைக் கடற்கரையில் வைத்துவிட்டு கடலில் நீராடிக் கொண்டிருந்தனர். நீராடும் போது ஒரு கமராவை தம்முடன் வைத்திருந்தனர்.

இதேவேளை கரையில் பொருள்கள் இருப்பதையும் கடலில் பொருள்களுக்குரியவர்கள் நீராடிக் கொண்டிருப்பதையும் அவதானித்த சில இளசுகள் நீராடிக் கொண்டிருப்பவர் தங்களை அவதானிக்க மாட்டார்கள் தானே என்ற நிலையில் 80 ஆயிரம் ரூபா பணம் மற்றும் புகைப்படக் கருவி அடங்கிய அவர்களது உடுப்புப் பொதியை எடுத்துக் கொண்டு நழுவிச் சென்றனர். கடலில் நீராடிக் கரைப் பகுதியை படம் பிடித்துக் கொண்டிருந்த அவர்களின் கமராவிலும் பொருள்கள் களவாடப்பட்ட விடயம் பதிவாகியுள்ளது.

> 80 ஆயிரம் ரூபா பணம் மற்றும் புகைப்படக் கருவி அடங்கிய அவர்களது உடுப்புப் பொதியை எடுத்துக் கொண்டு நழுவிச் சென்றனர்

உடனடியாக நீராடுவதை நிறுத்திவிட்டு கரைக்கு வந்த அவர்கள் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ததுடன் தமது நாட்டுத் தூதரகத்துக்கும் தெரியப்படுத்தியுள்ளனர். அதைத் தொடர்ந்து யாழ்ப்பாணத்தில் இருந்தும் பொலிஸார் நெடுந்தீவுக்கு வருகை தந்து நெடுந்தீவு பொலிஸாரதும் உதவியுடன் சம்பந்தப்பட்டவர்களைப் பிடித்து களவுபோன பொருள்களை மீட்டு உரியவர்களிடம் ஒப்படைத்தனர். களவுடன் தொடர்புடைய 4 இளைஞர்களும் ஊர்காவற்றுறை நீதிமன்றத்துக்குக் கொண்டு செல்லப்பட்டனர். (வ-7)

## பாடசாலைகளில் சமூக இணக்கப்பாட்டு செயற்பாடுகள்

யாழ்ப்பாணம், ஒக். 5

பாடசாலைகளில் சமூக இணக்கப்பாட்டுச் செயற்பாடுகள் நடத்தப்படுவதோடு அவை அறிக்கையிடப்படுவதுடன் கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

இதற்கமைவாக வட மாகாணப் பாடசாலைகளில் இடம் பெறும் சமூக இணக்கப்பாட்டுச் செயற்பாடுகள் தொடர்பான அறிக்கைகளை ஒவ் வொரு மாதமும் 10 ஆம் திக திக்கு முன்னர் மாகாண சமூக இணக்கப்பாட்டு செயற் பாட்டுக்கான இணைப்பாளருக்கு அனுப்பி வைக்க வேண்டும் எனவும் கல்வித்திணைக்களம் அறிவித்துள்ளது. (வ-14, 35)

## அறிவகத்தால் மேலும் ஒரு கணினி பயிற்சி சேவை

தென்மராட்சி, ஒக். 5

சாவகச்சேரி நகர் மாதர் கிராம அபிவிருத்திச் சங்க அலுவலகத்தின் அறிவகத்தால் மேலும் ஒரு கணினிப் பயிற்சி சேவை ஆரம்பிக் கப்பட்டுள்ளது.



ஜி.சீ.ஈ. உயர் தரப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கு விசேட கணினிப் பயிற்சிகள் கடந்த முதலாம்திகதிதொடக்கம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக சங்கத் தலைவி திருமதி ம.கீர்த்திநாதன் தெரிவித்தார்.

தகவல், தொடர்பாடல் அமைச்சின் 'நெனசல' திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட கணினிகளின் மூலம் பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன. (வ-9)

## தேர்தல் கடமைக்கான கொடுப்பனவுக்கு விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம், ஒக். 5

வடமாகாண சபைத் தேர்தலின் போது தேர்தல் கடமையில் ஈடுபட்ட பணியாளர்களுக்கு கொடுப்பனவு வழங்குவதற்காக உரிய அலுவலர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

தேர்தல் காலக் கடமையின் போது பணியாளர்களுக்கான படிகள், பயணச்செலவுகள் ஆகியவற்றை வழங்குவது தொடர்பான விண்ணப்பப் படிவங்கள் சகல திணைக்களங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இதற்கமைவாக எதிர்வரும் 13 ஆம் திகதிக்கு முன்னதாக உரிய திணைக்களங்களின் நிதிக் கிளையில் விண்ணப்பங்களை ஒப்படைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (வ-14,35)

## பழக்கடையிலும் சாராயம் கணவன் - மனைவி கைது

தென்மராட்சி,ஒக். 5

மது ஒழிப்புத் தினத்தன்று பழ வியாபார நிலையத்தினுள் மறைத்து வைத்து சாராயம் விற்பனை செய்த கணவனும், மனைவியும் பொலிஸாரிடமும் மதுவரித் திணைக்கள உத்தியோகத்தர்களிடம் அகப்பட்டனர்.

இந்தச் சம்பவம் நேற்று முன் தினம் சாவகச்சேரி பொதுச் சந்தையில் இடம்பெற்றது.

மது ஒழிப்புத் தினத்தை முன்னிட்டு நேற்று முன்தினம் மது விற்பனைநிலையங்கள் அனைத்தும் மூடப்பட்டிருந்தன. இந்த நிலையில் சாவகச்சேரி பொலிஸாருக்கு கிடைத்த இரகசியத் தகவலையடுத்து காலை 9 மணிக்கு அந்தப் பகுதிக்கு வந்த பொலிஸார் பழங்கள் விற்பனை செய்யும் கடைக்குள் பொதி செய்யப்பட்ட நிலையில் வைக்கப்பட்டிருந்த சாராயப் போத்தல்களை (1/2 போத்தல்) கைப்பற்றியதுடன் அந்த நபரையும் கைது செய்து பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் சென்றனர்.

பின்னர் பிற்பகல் 2 மணிக்கு பழ விற்பனை நிலையத் துக்கு வந்த சாவகச்சேரி மது வரித் திணைக்கள உத்தியோகத்தர்கள் தேடுதல் நடத்தியபோது மேலும் பொதி செய்யப் பட்ட நிலையில் வைக்கப் பட்டிருந்த பெருமளவு சாராயப் போத்தல்களைக் கைப்பற்றி கடையில் நின்ற பெண் ணுக்கு எதிராக வழக்குப் பதிவு செய்தனர். (வ-9)

## மது ஒழிப்பு தினத்தன்று நடமாடும் சாராய விற்பனை

### பெண் உட்பட சிலர் சிக்கினர்

தென்மராட்சி, ஒக். 5

மது ஒழிப்புத் தினமான நேற்று முன்தினம் நடமாடும் மது பான விற்பனையில் ஈடுபட்டவர்கள், வர்த்தகர்கள் ஆகியோர் சாவகச்சேரி மது வரித் திணைக்கள அதிகாரிகளிடம் மாட்டிக் கொண்டனர்.

மது ஒழிப்புத் தினத்தையொட்டி சகல மதுபான நிலையங்கள், கள்ளுத் தவறணைகள் அனைத்தும் நேற்றுமுன் தினம் மூடப்பட்டிருந்தன.

இந்த வேளையில் ரோந்து சென்ற மதுவரி நிலையத்தினர் மட்டுவில் பாடசாலையொன்றுக்கு முன்பாகவுள்ள கடையொன்றில் சாராய விற்பனை செய்தவரையும் கள் மற்றும் சாராயம் விற்பனை செய்த நடமாடும் வியாபாரிகளையும் கையும் மெய்யுமாகப் பிடித்தனர். அவர்களில் ஒருவர் சைக்கிளையும் சாராயத்தையும் கைவிட்டு தப்பி யோடியுள்ளார்.

அத்துடன் சாவகச்சேரி சந்தைக்குள் சாராயம் விற்பனை செய்த பெண்ணையும் கையும் மெய்யுமாகப் பிடித்தனர்.

குறித்த விற்பனையாளர்களுக்கு எதிராக நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யவுள்ளதாக மது வரித் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர். (வ-9)

### லயன்ஸ் கழகத்தின் ஏற்பாட்டில்

## முன்பள்ளிச் சிறார்களுக்கு சிறுவர் தின நிகழ்வு



தென்மராட்சி,ஒக். 5

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினர் சர்வதேச சிறுவர் தினத்தையொட்டி அன்றைய தினம் சாவகச்சேரி நகர்ப்பகுதியில் உள்ள மூன்று முன்பள்ளிகளில் சிறுவர் தின நிகழ்வுகளை நடத்தினர்.

சாவகச்சேரி கண்டுவில் ஒழுங்கை, புவேந்தன் முன்பள்ளி, சாவகச்சேரி தென்னிந்திய திருச்சபை முன்பள்ளி, சங்கத்தானை ஸ்ரீமுருகன் முன்பள்ளி ஆகியவற்றின் மாணவர்களுக்கு இனிப்புகளை வழங்கினர்.

சர்வதேச லயன்ஸ் கழக 306 பி 1 மாவட்ட ஆலோசகர் லயன் எஸ்.எஸ்.அருளானந்தம், சாவகச்சேரி லயன்ஸ் கழகப் பணிப்பாளர் லயன் கா.சற்குணதேவன் ஆகியோர் நிகழ்வில் கலந்துகொண்டு சிறுவர்களுக்கு இனிப்பு களை வழங்கினார். (வ-9)

## சுயதொழில் கடன் வழங்க செவ்வாயன்று நேர்முகம்

யாழ்ப்பாணம் , ஒக்.5

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் நிஸ்கோ பிரிவினரால் இளைஞர்களுக்கான சுயதொழில் கடன் வழங்கும் திட்டத்துக்கான நேர்முகத் தேர்வு எதிர்வரும் 8 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு நிஸ்கோ யாழ். அலுவலகத்தில் இடம்பெறவுள்ளது.

இளைஞர்களது சுயதொழில் முன்னேற்றத்துக்காக அரச வங்கிகளுடன் இணைந்து நிஸ்கோ பிரிவு இரண்டரை லட்சம் வரை யான கடன் உதவிகளை வழங்கி வருகிறது. இதற்கான விண் ணப்பங்கள் ஏற்கனவே கோரப்பட்டுள்ள நிலையில் புதிய விண்ணப்பதாரிகளும் நேர்முகத் தேர்வில் பங்குபற்றலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

18 தொடக்கம் 29 வயதுக்கு உட்பட்ட இளைஞர்கள் இதற்காக விண்ணப்பிக்க முடியும். தகுதியுடைய விண்ணப்பதாரிகள் ப.பஞ்சலிங்கம், பொது முகாமையாளர் நிஸ்கோ, தேசிய இளைஞர் சேவைகள் மன்றம், கச்சேரி கிழக்கு ஒழுங்கை, யாழ்ப்பாணம் எனும் முகவரியுடன் தொடர்பு கொள்ளலாம். (வ-14)

## முன்பள்ளிகளுக்குப் பால் விநியோகம்; இனி கால்நடை வளர்ப்போர் சங்கத்தால்

வடமராட்சி, ஒக். 5

பருத்தித்துறை வடமராட்சி வடக்கு கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம் குளிரூட்டப்பட்ட வாகனம் மூலம் கிராமம் கிராமமாகச் சென்று பசும்பாலைக் கொள்வனவு செய்கின்றது. அத்துடன் பால் உற்பத்திப் பொருள்கள், பால் விற்பனை மற்றும் முன்பள்ளிகளுக்கான பால் விநியோகம் என்பவற்றை விரைவில் மேற்கொள்ளவுள்ளது.

இதற்கென 'ஜெய்க்கா' அரச சார்பற்ற நிறுவனம் குளிரூட்டிய வாகனம் ஒன்றைச் சங்கத்துக்கு வழங்கியுள்ளது. 7 வருடங்களுக்கு முன்னர் மந்திகையில் பால் கொள்வனவு, விற்பனை, பால் பொருள்கள் உற்பத்தி விற்பனை என்பவற்றை இந்தச் சங்கம் மேற்கொண்டு வந்தது.

காலக்கிரமத்தில் பொது நிறுவனங்களின் நிதிப் பங்களிப்புடன் சங்கப் பரப்புக்குள் உள்ள முன்பள்ளிகளுக்கும் பசும்பாலை வழங்கி வந்தது. அதனைத் தொடர்ந்து முறையே தும்பளை, வல்வெட்டித்துறை, திக்கம் ஆகிய இடங்களிலும் சங்கத்தின் கிளை நிலையங்கள் ஆரம்பிக்கப்பட்டு இந்தப் பணிகள் விரிவுபடுத்தப்பட்டிருந்தன.

> **வடமராட்சி கிழக்கு, கப்பூது, தொண்டமானாறு ஆகிய பகுதிகளில் நடமாடும் சேவையை ஆரம்பித்து பால் கொள்வ னவு, பால் உற்பத்திப் பொருள்கள் விற்பனை, முன்பள்ளிகளுக்கு பால் விநியோகம் என்பவற்றை மேற்கொள்வதென சங்கம் தீர்மானித்துள்ளது.**

தற்போது குளிரூட்டப்பட்ட வாகனம் ஒன்று சங்கத்துக்கு கிடைத்ததைத் தொடர்ந்து வடமராட்சிப் பிரதேசத்தில் சங்கத்தின் கிளைகள் இல்லாத இடங்களில் குறிப்பாக வடமராட்சி கிழக்கு, கப்பூது, தொண்டமானாறு ஆகிய பகுதிகளில் நடமாடும் சேவையை ஆரம்பித்து பால் கொள்வ னவு, பால் உற்பத்திப் பொருள்கள் விற்பனை, முன்பள்ளிகளுக்கு பால் விநியோகம் என்பவற்றை மேற்கொள்வதென சங்கம் தீர்மானித்துள்ளது. இந்த நடமாடும் சேவையை விரைவாக நடைமுறைப்படுத்துவதற்கு பண்ணையாளர்கள் மற்றும் சிறுபண்ணையாளர்கள் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (வ-8)

### வீடமைப்பு அதிகார சபையிடம்

## கடனுக்கு விண்ணப்பித்த உத்தியோகத்தர் 120 பேருக்கு வவுச்சர்கள் கையளிப்பு

வலி.தென்மேற்கு. ஒக்.5

யாழ். மாவட்டத்தில் வீடு கட்டுவதற்கு, வீடு திருத்துவதற்கு தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையிடம் கடனுக்கு விண்ணப்பித்த 300 இற்கு மேற்பட்ட அரச உத்தியோகத்தர்களில் 120 பயனாளிகளுக்கு வங்கிகளில் பணத்தைப் பெறுவதற்கான கொடுப்பனவுச்சீட்டுகள் (வவுச்சர்கள்) யாழ்ப்பாணம் வை.எம்.சி.எ. மண்டபத்தில் வைத்து கடந்த புதன்கிழமை சம்பந்தப்பட்ட அதி காரிகளினால் வழங்கப்பட்டது.

அரச உத்தியோகத்தர்களின் நலன் கருதி தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையால் வீடு கட்டுவதற்கு, வீடு திருத்துவதற்கு 5 இலட்சம் ரூபா வரை கடன் வழங்கப்படுகிறது. குறித்த நிதி மக்கள்வங்கி, இலங்கைவங்கி, தேசிய சேமிப்பு வங்கி ஆகிய மூன்று வங்கிகள் ஊடாக வழங்கப்படுகிறது.

> **யாழ். மாவட்டத்திலுள்ள 300 இற்கும் அதிகமான அரச உத்தி யோகத்தர்கள் யாழ். மாவட்ட தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையிடம் கடனுக்கு விண்ணப்பித்திருந்தனர்**

யாழ். மாவட்டத்திலுள்ள 300 இற்கும் அதிகமான அரச உத்தியோகத்தர்கள் யாழ். மாவட்ட தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையிடம் கடனுக்கு விண்ணப்பித்திருந்தனர். இவர்களுக்குக் கடன் வழங்குவதற்கான பணம் மேற் படி மூன்று வங்கிகளிலும் ஒதுக்கப்பட்டு நான்கு மாதங்களுக்கு மேலாகியும் பயனாளிகளுக்கு வழங்கப் படாமல் வங்கியில் முடங்கிக் கிடந்தது.

இதனால் கடனுக்கு விண்ணப்பித்த அரச உத்தி யோகத்தர்கள் வீட்டு வேலையை ஆரம்பித்துவிட்டு அதை நிறைவு செய்ய முடியாமல் ஏங்கித் தவித்தனர்.

இந்த நிலையில் உலக வதிவிட தினத்தை முன்னிட்டு புதன் கிழமை கடனுக்கு விண்ணப்பித்தவர்களில் 120 பயனாளிகளுக்கு யாழ்ப்பாணம் வை.எம்.சி.எ. கட்டடத்தில் வைத்து முதற்கட்டமாக விண்ணப்பித்த தொகையில் 20 வீதமான பணத் தைப் பெறுவதற்குரிய வவுச்சர்கள் வழங்கப்பட்டுள்ளன. (வ-115)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரதமரை அவமதித்தார் ராகுல்- அத்வானி

புதுடில்லி, ஒக்.5
தண்டனை பெறும் நாடாளுமன்ற உறுப்பினர்களைக் காக்கும் அவசரச் சட்டத்தை அரசு திரும்ப பெற்றதற்கு குடியரசுத் தலைவர் பிரணாப் முகர்ஜியே காரணம் என்று பா.ஜ.க மூத்த தலைவர் எல்.கே.அத்வானி கூறியுள்ளார்.
இது தொடர்பாக சமூக வலைதளத்தில் கருத்து தெரிவித்துள்ள அவர்,
"பிரதமர் மன்மோகன் சிங்கை அவமரியாதை செய்யும் வகையில், அவசரச் சட்டத்திற்கு எதிராக பேசுமாறு ராகுல் காந்திக்கு அவரது தயார் சோனியா அறிவுரை வழங்கியுள்ளார். ஆனால் சட்ட மசோதாவை திரும்ப பெற ராகுல் காந்தியே காரணம் என்று செய்திகள் பரப்பப்படுகின்றது" என்று கூறியுள்ளார். (ற)

# தி.மு.க., அ.தி.மு.கவுடன் இனிக் கூட்டணி இல்லை

## அடித்துக் கூறுகின்றார் வைகோ

சென்னை, ஒக்.5
தி.மு.க. மற்றும் அ.தி.மு.கவுடன் இனி எந்தத் தேர்தலிலும் ம.தி.மு.க. கூட்டணி அமைக்காது என்று ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ தெரிவித்துள்ளார்.
மக்களைவத் தேர்தலுக்கான பரப்புரையை நேற்றுமுன்தினம் ஈரோட்டில் ஆரம்பித்து வைத்து உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அங்கு அவர் மேலும் கூறும் போது,
"ஒக்ரோபர் 3ஆம் திகதி ம.தி.மு.க. மற்றும் ஈழத் தமிழர்களுக்கு முக்கியமான நாள். என் மீது தேவையற்ற பழியை தி.மு.க. சுமத்திய நாள் இது. அதுபோல, விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரனை, புதுடில்லிக்கு அழைத்து வந்து மிரட்டி ஒப்பந்தத்தில் கையெழுத்திட காங்கிரஸ் அரசு முயற்சி செய்த நாள்.



மத்திய அரசு இப்போது ஆட்டம் கண்டு வருவதால் எனது கணிப்பின்படி பெப்ரவரியில் தேர்தல் வர வாய்ப்புள்ளது. மற்றக் கட்சிகளிடம் பண பலம் உள்ளது. ஆனால், ம.தி.மு.க.விடம் மக்களைத் திரட்டும் சக்தி, தன்னம்பிக்கை, அற நெறி உள்ளது.
காங்கிரஸ் கட்சி மீண்டும் ஆட்சிக்கு வரக்கூடாது என்பதில் ம.தி.மு.க. உறுதியாக உள்ளது. காவிரிப் பிரச்சினையில் கர்நாடகத்துக்கு மத்திய அரசு துணையாக இருக்கிறது. தமிழகத்துக்கு கிடைக்க வேண்டிய நீரைப் போராடிப் பெற வேண்டிய நிலை உள்ளது.
இலங்கையில் லட்சக்கணக்கான தமிழர்கள் கொலை செய்யப்படுவதற்கு காரணமாக இருந்தது மத்திய அரசு தான்.தி.மு.க., அ.தி.மு.க. இருக்கும் அணியில் ம.தி.மு.க. இடம்பெறாது என்று திட்டவட்டமாக அறிவித்து விட்டோம். தேர்தலுக்கு முன்பும், பின்பும் காங்கிரஸ் கட்சியுடன் கூட்டுச்சேரும் கட்சிகளுடன் ம.தி.மு.க. ஒருபோதும் கூட்டணி அமைக்காது" என்று தெரிவித்தார். (ற)


## பா.ஜ.க. தலைமையில் ம.தி.மு.க., தே.மு.தி.க.

சென்னை, ஒக்.5
எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் தமிழகத்தில் பா.ஜ.க. தலைமையில் ம.தி.மு.க.,- தே.மு.தி.க., கூட்டணி அமைவது, நூறு சதவீதம் உறுதி என்று காந்திய மக்கள் இயக்கத் தலைவர் தமிழருவி மணியன் தெரிவித்துள்ளார்.
இதுகுறித்து அவர் மேலும் கூறுகையில்,
"குற்றவாளிகளைப் பாதுகாப்பதற்காகவே தேசிய அரசியலில், காங்கிரஸ் கூட்டணி செயல்படுகிறது என்பதை அவசரச் சட்டம் தொடர்பாக அக்கட்சி எடுத்த முடிவுகள் காட்டுகின்றன.
சோனியா குடும்பத்தின் பிடியில் காங்கிரஸ் உள்ளது. ஆட்சித் தலைமை மீது கட்சித் தலைமை அதிகாரம் செலுத்தக் கூடாது என்ற நேருவின் எண்ணத்தை, ராகுல் தற்போது தகர்த்துள்ளார்.
இதற்கு முற்றுப்புள்ளி வைக்க, காங்கிரசுக்கு எதிரான சக்திகள் ஒன்றிணைய வேண்டும். முதல்வர் ஜெயலலிதா மீதான சொத்து குவிப்பு வழக்கின் போக்கு, தற்போது அவருக்கு அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.
அதேநேரத்தில் இதை எதிர்த்து வழக்குத் தொடர தி.மு.கவுக்கு தார்மீக உரிமை இல்லை. கடந்த 1969ஆம் ஆண்டுக்கு முன் கருணாநிதிக்கும், அவர் குடும்பத்தினருக்கும் இருந்த சொத்துக்கள் தற்போது அவர்களிடம் உள்ளசொத்துக்கள் விவரத்தை, அவர் வெளியிடுவாரா? இதுவரை இல்லாத அளவில் காங்கிரஸ் ஆட்சியில், ஊழல் மலிந்துள்ளது. அதற்குத் தற்போது ஒரு மாற்றம் தேவை. ம.தி.மு.க.- தே.மு.தி.க.வுக்கு தலா 10 சதவீதம் ஓட்டுக்கள் உள்ளன. இக்கட்சிகள் இணைந்தால், தி.மு.க.- அ.தி.மு.க.வுக்கு எதிராக மாற்று அணியை ஏற்படுத்த முடியும். தமிழகத்தில், நூறு சத விகிதம் இக் கூட்டணி அமைவது உறுதி. இதற்கான முயற்சியில் ஈடுபட்டுள்ளேன். இதற்காக விஜயகாந்த், வைகோ மற்றும் பா.ஜ. தலைவர் ராஜ்நாத் சிங்கிடம் பேசியுள்ளேன்" என்று தெரிவித்தார். (ற)

## பண்டிகை காலத்தில் தாக்குதல் அபாயம்

### எச்சரிக்கின்றது மத்திய அரசு

புதுடில்லி, ஒக்.5
பண்டிகை காலங்களில் தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தும் அபாயம் காணப்படுகின்றது என்று மாநில அரசுகளுக்கு இந்திய மத்திய அரசு எச்சரிக்கை விடுத்துள்ளது.
நாடு முழுவதும் மக்கள் அனைவரும் பண்டிகை கொண்டாட்டங்களுக்கு தயாராகி வருகின்றனர். இந்நிலையில் உள்துறை அமைச்சகம் மாநில அரசுகளுக்கு சுற்றறிக்கை ஒன்றை அனுப்பியுள்ளது.
"பண்டிகை நாள்களில் தீவிரவாதிகள் நாச வேலைகளில் ஈடுபடும் அபாயம் உள்ளது. எனவே பொதுமக்கள் அதிகமாக கூடும் பஸ் நிலையங்கள், ரயில் நிலையங்கள், வணிக வளாகங்கள் மற்றும் கோயில்களில் பாதுகாப்பை பலப்படுத்துமாறும் மாநில அரசுகளுக்கு அறிவுறுத்தப்படுகின்றது. பொதுஅமைதிக்கு பங்கம் விளைவிக்கும்வகையில்செயற்படுபவர்களை முன்னெச்சரிக்கைநடவடிக்கையாககைது செய்வதற்குகுரிய ஏற்பாடுகளை மேற்கொள்ளவும்" என்று கூறப்பட்டுள்ளது. (ற)




இன்று ஆரம்பமாகும் நவராத்திரி விழாவை முன்னிட்டு தமிழகம் எங்கும் கொலுப் பொம்மைகளின் வியாபாரம் கொடி கட்டிப் பறக்கின்றது. சென்னையின் கடைவீதிகளில் குவிக்கப்பட்டிருக்கும் கொலுப் பொம்மைகள் பரபரப்பாக விற்பனையாகும் காட்சி.

## இந்திய இராணுவம் காஷ்மீரில் அதிரடி: தீவிரவாதிகள் இருவர் சாவு

ஸ்ரீநகர், ஒக்.5
ஜம்மு-காஷ்மீர் எல்லைப் பகுதியில் ஊடுருவ முயன்ற தீவிரவாதிகள் இருவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர் என்று இந்திய இராணுவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.
இதுகுறித்து வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில்,
"ஜம்மு-காஷ்மீர் மாநிலம் குஜராத்தூர் எல்லைப் பகுதியில் தீவிரவாதிகள் ஊடுருவியுள்ளதாக பாதுகாப்பு படையினருக்கு ரகசிய தகவல் கிடைத்தது. அதனையடுத்துஅப்பகுதியை சுற்றி வளைத்த பாதுகாப்பு படையினர் தீவிரவாதிகள் மீது துப்பாக்கிச்சூடு நடத்தினர். இரு தரப்பினருக்கும் இடையே நீண்ட நேரம் நீடித்த இந்த துப்பாக்கிச் சண்டையில் 2 தீவிரவாதிகள் சுட்டுக் கொல்லப்பட்டனர். அப்பகுதியில் மேலும் பல தீவிரவாதிகள் பதுங்கி இருக்கலாம் என்பதால் பாதுகாப்பு படையினர் தீவிர தேடுதல் வேட்டையில் ஈடுபட்டுள்ளனர்" என்று கூறப்பட்டுள்ளது. (ற)

# உதயமானது தெலுங்கானா; எதிர்ப்புகளும் தீவிரம்

புதுடில்லி, ஒக்.5
ஆந்திராவை பிரித்து தெலுங்கானா மாநிலம் அமைக்க இந்திய மத்திய அமைச்சரவை ஒப்புதல் வழங்கியுள்ளது. அதையடுத்து இந்தியாவின் 29ஆவது மாநிலமாக தெலுங்கானா உதயமாகிறது.
தெலுங்கானா மற்றும் சீமாந்திராஆகியஇருமாநிலங்களுக்கும் 10 ஆண்டுகளுக்கு ஐதராபாத் தலைநகரமாக இருக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.
ஆந்திராவில் இருந்து தெலுங்கானா பகுதிகளை பிரித்து தெலுங்கானாமாநிலம்அமைக்கப்படும் என்று இந்திய மத்திய அரசு 2009ஆம் ஆண்டு அறிவித்தது. புதிய மாநிலம் அமைப்பதில் தாமதம் ஏற்பட்டதால் தெலுங்கானாவில் போராட்டங்கள் நடத்தப்பட்டன. அதையடுத்து கடந்த ஜூலை 30ஆம் திகதி ஐக்கிய முற்போக்கு கூட்டணி கட்சிக் கூட்டத்தில் தெலுங்கானா மாநிலம் அமைக்க ஒருமித்த ஆதரவு தெரிவிக்கப்பட்டது.
ஆனால் திடீர் திருப்பமாக ஆந்திராவைப் பிரிக்க கூடாது என்று சீமாந்திரா பகுதிகளில் போராட்டங்கள் வெடித்தன. இதன் காரணமாக, தெலுங்கானா மாநிலம் அமைப்பதா? வேண்டாமா? என்ற குழப்பத்தில் எந்த முடிவும் எடுக்க முடியாமல் மத்திய அரசு திகைத்தது.
தெலுங்கானா மாநிலம் அமைக்காவிட்டால் மீண்டும் போராட்டம் நடத்துவோம் என்று டி.ஆர்.எஸ். கட்சி தலைவர் சந்திரசேகர் ராவ் எச்சரித்தார். ஒருங்கிணைந்த ஆந்திராவைவலியுறுத்திபோராட்டம் நடத்தப்படும் என்று சொத்து குவிப்பு வழக்கில் கைது செய்யப்பட்டு அண்மையில் பிணையில் விடுதலையான வை.எஸ்.



ஆர். காங்கிரஸ் தலைவர் ஜெகன் மோகன் ரெட்டியும் அறிவித்தார். நிலைமை மோசமானதால் இனியும் தவிர்க்க முடியாது என்ற நிலையில் முடிவெடுக் கும் கட்டாயத்துக்கு இந்திய மத்திய அரசு தள்ளப்பட்டது.
பரபரப்பான நிலையில் நேற்றுமுன்தினம் பிரதமர் தலைமையில் மத்திய அமைச்சரவைக் கூட்டம் கூடியது. அதில் ஆந்திராவை பிரித்து தெலுங்கானா மாநிலம் அமைக்க ஒப்புதல் அளிக்கப்பட்டது. அமைச்சரவைக் கூட்டத்துக்கு பின் அதை உள்துறை அமைச்சர் சுசில் குமார் ஷிண்டே அறிவித்தார்.
தெலுங்கானாமாநிலம்அமைக்க மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்ததை தொடர்ந்து தெலுங்கானா பகுதிகளில் மக்கள் [illegible] வெடித்து [illegible]கொண்டாடினர்.
அதேநேரம், சீமாந்திரா பகுதிகளில் பல இடங்களில் போராட்டங்கள் வெடித்துள்ளன. இதனால், ஐதராபாத் உட்பட முக்கிய இடங்களில் பொலிசார் குவிக்கப்பட்டு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

### கடையடைப்பு

மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்ததை அடுத்து அம்மாநிலத்தில் நேற்று ஆந்திராவில் முழு அடைப்புப் போராட்டம் நடைபெற்றது. ஐக்கிய ஆந்திராவை வலியுறுத்தும் அமைப்புகள் அழைப்பு விடுத்துள்ள இந்த முழு அடைப்புப் போராட்டத்தால், கடலோர ஆந்திரா, ராயலசீமா உள்ளிட்ட பகுதிகளில் கடைகள், வர்த்தக நிறுவனங்கள் யாவும் மூடப்பட்டிருந்தன.
இந்த முழு அடைப்புப் போராட்டம் 2 நாள்களுக்கு நடைபெறும் என்று சீமாந்திரா பகுதி வழக்கறிஞர் சங்கம் அறிவித்துள்ள நிலையில், 3 நாள் முழு அடைப்புப் போராட்டத்திற்கு வை.எஸ்.ஆர். காங்கிரஸ் தலைவர் ஜகன் மோகன் ரெட்டி அழைப்பு விடுத்துள்ளார்.
அதேவேளை, தெலுங்கானா தனி மாநில உருவாக்கத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து ஐக்கிய ஆந்திராவை வலியுறுத்தும் காங்கிரஸ் தலைவர்கள் ஆலோசனையில் ஈடுபட்டுள்ளனர்.
ஹைதராபாத்தில் செய்தியாளர்களிடம் பேசிய இதன் ஒருங்கிணைப்பாளரும் மாநில கல்வி அமைச்சருமான சைலஜாநாத், "தனி தெலங்கானாவுக்கான மசோதா ஆந்திரப் பிரதேச சட்டமன்றத்தில் கொண்டுவரப்படும் போது அதனைக் கடுமையாக எதிர்க்கப் போகின்றோம்" என்று தெரிவித்துள்ளார். (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்திய எல்லையில் ஊடுருவலா?

### மறுக்கிறது பாக்.



இஸ்லாமாபாத், ஒக்.5
இந்திய எல்லைப் பகுதியைத் தாம் ஆக்கிரமிக்கவில்லை என்று பாகிஸ்தான் இராணுவம் தெரிவித்துள்ளது.
"எல்லைப் பகுதியில் ஊடுருவியதாக எழுந்த குற்றச்சாட்டு அடிப்படை ஆதாரமற்றது. ஜம்மு காஷ்மீர் மாநிலத்தில் எந்தப் பகுதியையும் நாங்கள் ஆக்கிரமிப்பு செய்யவில்லை." என்று பாகிஸ்தான் இராணுவ செய்தித் தொடர்பாளர் தெரிவித்துள்ளார்.
"ஜம்மு காஷ்மீரின் கேரான் பகுதியில் தீவிரவாதிகள் ஊடுருவல் நடைபெற்றுள்ளது. அங்கு சில கிராமங்களை அவர்கள் ஆக்கிரமிக்க முயன்றதை அடுத்து மோதல்கள் நடைபெற்றன" என்று இந்திய இராணுவம் தெரிவித்திருந்தது. அதற்குப் பதிலளிக்கும் வகையிலேயே பாகிஸ்தான் இராணுவம் இவ்வாறு கூறியுள்ளது. (ற)

# அதிர்ந்தது அமெ. நாடாளுமன்றம்

அமெரிக்க ஜனாதிபதியின் வாசஸ்தலமான வெள்ளை மாளிகை அலுவலக வளாகத்தின் வெளிக்கதவுகள் மீது பெண்ணொருவர் தனது வாகனத்தை மோதி பின்னர் நாடாளுமன்ற வளாகத்துக்கு வாகனத்தை ஓட்டிச் சென்றபோது தொடங்கியது துப்பாக்கி மோதல்.

வொஷிங்டன், ஒக்.5
அமெரிக்கத் தலைநகர் வொஷிங்டனில் உள்ள நாடாளுமன்றக் கட்டடத்துக்கு அருகே இடம்பெற்ற துப்பாக்கி மோதலால் அந்தப் பகுதி அதிர்ந்தது.
துப்பாக்கி மோதல் அமெரிக்க ஜனாதிபதியின் வாசஸ்தலமான வெள்ளை மாளிகை அலுவலக வளாகத்தின் வெளிக் கதவுகள் மீது பெண்ணொருவர் தனது வாகனத்தை மோதிப் பின்னர் நாடாளுமன்ற வளாகத்தை நோக்கித் தனது வாகனத்தைச் செலுத்தத் தெடங்கியதும் ஆரம்பமானது என்று பொலிஸார் கூறுகின்றனர்.
"வெள்ளை மாளிகை அலுவலக வளாக வெளிக் கதவில் மோதிய பெண் நாடாளுமன்றத்தை நோக்கி வாகனத்தைச் செலுத்தத் தொடங்கினார். அவரை விரட்டிப் பிடிக்கும் முயற்சியில் பொலிஸார் இறங்கியபோது, அந்தப் பெண் துப்பாக்கிச் சூட்டை நடத்தத் தொடங்கினார்" என்று கடமையில் இருந்த பொலிஸ் அதிகாரியொருவர் கூறினார்.



சுமார் அரைமணி நேரமாக நடைபெற்ற துப்பாக்கிச் சூட்டால் அந்தப் பகுதியே அதிர்ந்தது. நாடாளுமன்றக் கட்டடத்துக்குள் இருந்தவர்கள் எவரும் யன்னல்களின் அருகே வரவேண்டாம் என்று பொலிஸாரால் அறிவுறுத்தப்பட்டனர். அரைமணி நேரப் போராட்டத்தின் பின்னர் அந்தப் பெண் பொலிஸாரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.
"அந்தப் பெண் வாகனத்தை நாடாளுமன்றக் கட்டடத்துக்கு அருகே நிறுத்தி பொலிஸார் மீது துப்பாக்கிச் சூட்டை நடத்தினார். சுமார் அரை மணி நேரம் அங்கு துப்பாக்கிச் சூடு நடைபெற்றது. அந்தப் பகுதியில் இருந்த பொதுமக்கள் பாதுகாப்பாக வெளியேற்றப்பட்டனர். இறுதியில் அந்தப் பெண் பொலிஸாரால் சுட்டுக் கொல்லப்பட்டார். அவரது காரில் இருந்து ஒரு வயதுக் குழந்தை ஒன்று பாதுகாப்பாக மீட்கப்பட்டுள்ளது. இரு பொலிஸார் காயமடைந்துள்ளனர்.
இந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் ஒரு தனிப்பட்ட சம்பவம் என்றே கருதுகின்றோம். பயங்கரவாத அமைப்புகளுடன் தொடர்புபட்ட ஒன்றல்ல." என்று பொலிஸார் தெரிவித்துள் ளனர்.
குறித்த பகுதிக்கு தற்போது தீவிர பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது. (ற)

> சம்பவம் நடைபெற்ற பகுதிக்கு அருகே இருக்கும் கடற்படைத் தளத்தில்தான் இருவாரங்களுக்கு முன்னர் கடுமையான துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் நடைபெற்றது. அதில் 13 பேர் உயிரிழந்தனர்.

## அமெரிக்கா - ஜப்பான் அமைச்சர்கள் சந்திப்பு

நியூயோர்க், ஒக்.5
அமெரிக்கா வெளியுறவுத் துறை அமைச்சர் ஜோன் கெரி மற்றும் பாதுகாப்புதுறை அமைச்சர் சக் ஹகெல் ஆகியோர் ஜப்பானின் பாதுகாப்பு மற்றும் வெளியுறவுத் துறை அமைச்சர்களை சந்தித்து பேசியுள்ளனர்.
இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்துள்ள அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் ஜோன் கெரி,
"பாதுகாப்பு நெறிமுறைகளை மாற்றி அமைக்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. எதிர் வரும் 20 ஆண்டுகளுக்கு ஜப்பான் மற்றும் அமெரிக்கா இடையே பாதுகாப்புத் துறை தொடர்பாக ஏற்பட இருக்கும் உடன்பாடுகள் குறித்து விவாதிக்கப்பட்டது.
அதே போன்று இணையப் பாதுகாப்புக் குறித்த விவாதம் இந்த பேச்சுக்களில் முக்கிய இடத்தைப் பிடித்தது. ஜப்பானுடன் உறவை மேலும் விரிவுபடுத்த அமெரிக்கா விரும்புகின்றது" என்று தெரிவித்துள்ளார். (ற)

## நைஜீரியாவில் வீழ்ந்தது விமானம்

### 16 பேர் சாவு

லாகோஸ், ஒக்.5
நைஜீரியாவில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற விமான விபத்தில் 16 பேர் உயிரிழந்துள்ளனர்.
லாகோஸ் நகரில் உள்ள முர்டாலா முகமது சர்வதேச விமான நிலையத்தில் இருந்து வியாழக்கிழமை 20 பயணிகளுடன் புறப்பட்ட விமானமே விபத்துக்குள்ளாகியுள்ளது.
"விமானம் புறப்பட்ட சிறிது நேரத்தில் விமான இயந்திரத்தில் பழுது ஏற்பட்டது. அதையடுத்தே இந்த விபத்து இடம் பெற்றுள்ளது. இதுவரை 16 உடல்கள் மீட்கப்பட்டுள்ளன. மீட்புப் பணிகள் தொடர்ந்து நடந்து வருகின்றன" என்று விமான நிலைய அதிகாரிகள் கூறுகின்றனர்.
குறித்த விமானம் விமானங்களுக்கான எரிபொருள்கள் சேமித்து வைக்கும் பகுதியில் வீழ்ந்து நொருங்கியுள்ளது. எனினும் அதிர்ஷ்டவசமாக பெரும் தீ விபத்து தவிர்க்கப்பட்டுள்ளது என்று நைஜீரியத் தகவல்கள் கூறுகின்றன. (ற)


## பொதுநலவாய அமைப்பில் இருந்து திடீரென விலகியது கம்பியா

கம்பியன், ஒக்.5
ஆபிரிக்க ஒன்றிய நாடான கம்பியா பொதுநலவாய நாடுகள் அமைப்பின் அங்கத்துவத்தில் இருந்து விலகிக் கொள்வதாக அறிவித்துள்ளது.
கடந்த 48 வருடங்களாக பொதுநலவாய நாடுகள் அமைப்பில் அங்கம் வகித்திருந்த நிலையிலேயே கம்பியா இந்த முடிவை எடுத்துள்ளது.
இதுகுறித்துக் கருத்து வெளியிட்டுள்ள அந்நாட்டின் ஜனாதிபதி யாஹ்றா ஜெமி,
"பொதுநலவாய நாடுகளின் அமைப்பில் இருக்கும் நாடுகள் பிரித்தானிய காலனித்துவ நாடுகளாகவே நோக்கப்படுகின்றன. இந்தநிலையில் அடிமைத்தன நாடுகளை உள்ளடக்கிய அமைப்பாகவே பொதுநலவாய அமைப்பை எமது நாடு கருகின்றது. அதனாலேயே இத்தகைய முடிவை எடுத்தோம்" என்று தெரிவித்துள்ளார்.
"முடிவெடுக்கும் அதிகாரம் கம்பியாவினது என்றபோதிலும், இது ஒரு வருந்தத்தக்கதும் ஏமாற்றம் தருவதுமான முடிவு" என்று பிரித்தானியா கவலை வெளியிட்டுள்ளது.
இதுகுறித்துக் கருத்து வெளியிட்டுள்ள பொதுநலவாய அமைப்பின் செய்தித் தொடர்பாளர் கமலேஷ் சர்மா, "இந்த விடயங்கள் ஊடகங்கள் வாயிலாக தெரியப்படுத்தப்பட்டுள்ளன. எனினும் இதுகுறித்து கம்பியா உத்தியோகபூர்வமாக இதுவரை அறிவிக்கவில்லை" என்று தெரிவித்துள்ளார். (ற)



இத்தாலியில் லேம்பெதுசா தீவுக்கு அருகே தஞ்சம் கோரி வந்தவர்கள் பயணித்த படகு கவிழ்ந்ததில் 300 பேர் வரை இறந்திருக்கலாம் என்று அஞ்சப்படுகிறது. வட ஆபிரிக்காவில் இருந்து வந்த இந்த படகு தீவின் கடற்கரையிலிருந்து சுமார் ஒரு கிலோ மீற்றர் தொலைவில் பயணித்த போது தீப்பிடித்து பின்னர் கவிழ்ந்தது. இதுவரை 103 சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன. இந்தப் படகில் சுமார் 500 பேர் இருந்திருக்கலாம் என்று கருதப்படுகிறது. காணாமற் போயுள்ள 200 பேரும் இறந்திருக்கலாம் என்று மீட்புக் குழுவினர் அச்சம் தெரிவிக்கின்றனர். (ற)

## தீவாலாகும் அமெரிக்கா; எச்சரிக்கின்றார் ஒபாமா



நியூயோர்க், ஒக்.5
அமெரிக்காவில் நிதி நிலை அறிக்கை விவகாரம் மற்றும் கடன் உச்ச வரம்பை உயர்த்துதல் போன்ற விடயங்களில் தொடர்ந்தும் தேக்க நிலை காணப்படுமாக இருந்தால் அமெரிக்கா திவாலாகும் சூழல் ஏற்படும் என்று எச்சரித்துள்ளார் அந்நாட்டின் ஜனாதிபதி பராக் ஒபாமா.
வரவு - செலவுத் திட்டத்தை நிறைவேற்றுவதில் அரசியல் கட்சிகள் இடையே ஏற்பட்டுள்ள கருத்து வேறுபாட்டால் அமெரிக்காவில் மத்திய அரசு முடங்கியுள்ளது. இந்தநிலையில் அந்த நாட்டுக்கு மற்றொரு கண்டம் எதிர் வரும் 17 ஆம் திகதி காத்திருக்கின்றது.
எதிர்வரும் 17 ஆம் திகதிக்கு முன்னர் நாட்டின் கடன் உச்ச வரம்பை உயர்த்துவதற்கு இரு பிரதான கட்சிகளும் சம்மதிக்காது விட்டால் அமெரிக்காவின் கருவூலத்தில் வெறும் 30 பில்லியன் டொலரே கையிருப்பில் இருக்கும். வரலாற்றிலேயே முதல் முறையாக அமெரிக்கா தனது செலவுகளுக்குப் பணம் இல்லாமல் திண்டாடும் நிலை ஏற்படும்.
இந்தநிலையிலேயே ஒபாமா இவ்வாறு எச்சரிக்கை விடுத்துள்ளார். தற்போதைய முடக்க நிலையை முடிவுக்குக் கொண்டு வருவதற்காக குடியரசுக்கட்சித் தலைவர்களுடன் ஒபாமா நடத்திய பேச்சுக்களில் எந்த முடிவும் எட்டப்படவில்லை.
அதேவேளை, வோல் ஸ்டிரீட்டில் அமைந்துள்ள முக்கிய வங்கியின் பிரதிநிதிகளுடனும் அமெரிக்கா எதிர்கொண்டுள்ள சிக்கல்கள் குறித்து ஒபாமா கலந்துரையாடியுள்ளார்.
அமெரிக்காவின் கடன் உச்ச வரம்பை எதிர்வரும் 17ஆம் திகதிக்குள் உயர்த்த வேண்டிய கட்டாய தேவை உள்ள நிலையில், குடியரசுக்கட்சியினர் ஒபாமா கொண்டு வந்த புதிய மருத்துவ திட்ட சீரமைப்பிற்கான நிதி ஒதுக்கீடு விவகாரத்தில் தொடர்ந்து பிடிவாதம் காட்டி வருகின்றனர்.
நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலை காரணமாக ஆசியப் பிராந்தியத்துக்கு மேற்கொள்ளவிருந்த சுற்றுப் பயணத்தை ஒபாமா இரத்துச் செய்துள்ளார் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ற)

## மீன்களை பிடித்துத் தின்ற எலிகளை சமைத்து உண்டு பழிதீர்த்த மக்கள்



பீஜிங், ஒக்.5
குளத்தில் இருந்த மீன்களைக் களவாடிக் கபளீகரம் செய்த இராட்சத எலிகளைப் பிடித்த மக்கள், அந்த எலிகளைச் சமைத்து உண்டு பழிதீர்த்துக் கொண்டனர். இந்தச் சம்பவம் சீனாவில் இடம்பெற்றது.
ஹூனான் மாகாணத்தில் உள்ள ஷாவோயாங் என்ற ஊரில் குளத்தில் இருந்த மீன்கள் தினமும் குறைந்து வருவதை அவதானித்தனர் ஊர் மக்கள். இரவு பகலாகக் காவலிருந்தபோதும் மீன்கள் குறைவது நின்றபாடில்லை.
இறுதியில் மீன்களைக் கபளீகரம் செய்தவர்களைக் கண்டுபிடித்தனர் அவர்கள். அவை இரண்டு இராட்சத நீர் எலிகள். அந்த இரண்டு எலிகளும் சாதாரண எலிகளை விடப் பத்து மடங்கு பெரிதாக இருந்தன. ஒரு மீற்றர் நீளம் கொண்டவையாகவும் இருந்தன. அதில் ஒரு எலி 3 கிலோ எடையுள்ள மீனைப் பிடித்து, கரைக்கு இழுத்து வந்து ஒரே மூச்சில் உண்டு முடித்தது என்றால் கற்பனை செய்து பாருங்கள்.
ஆத்திரமடைந்த ஊர் மக்கள் பெரும் போராட்டத்தின் பின்னர் அந்த எலிகள் இரண்டையும் பிடித்தனர். பிடித்த பின்னரும் ஊராரின் போராட்டம் முடியவில்லை. அவற்றைக் கொல்லப் படாதபாடுபட்டனர். இரண்டு கத்திகள் உடைந்தன. பெரும் போராட்டத்தின் பின்னர் அவற்றைக் கொன்று சமைத்து உண்டனர் அவர்கள்.
"கோழிக்கறியை [illegible] யிருந்தது எலிக்கறி" என்று கூறுகின்றனர் அந்த ஊர் மக்கள். சீனாவில் எலிக்கறி என்பது சர்வசாதாரணமப்பா! (ற)

## சந்திக்கின்றனர் ஒபாமா-புடின்

மொஸ்கோ, ஒக்.5
சிரியாவின் தற்போதைய நிலவரம் குறித்துக் கலந்துரையாடுவதற்காக அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா மற்றும் ரஷ்ய ஜனாதிபதி விளா டிமிர் புடின் ஆகியோர் அடுத்த வாரமளவில் சந்திக்கவுள்ளனர்.
அடுத்தவாரம் இந்தோனேஷியாவில் ஆரம்பமாகவுள்ள பசுபிக் உச்சி மாநாட்டின் போதே அவர்கள் சந்தித்துப் பேசவுள்ளனர் என்று கூறப்படுகின்றது.
சிரியா வசமுள்ள இரசாயன ஆயுதங்களை அழிக்கும் நடவடிக்கையின் நிகழ்ச்சி நிரல் குறித்து அவர்கள் அந்த சந்திப்பில் ஆலோசிப்பார்கள் என்று கூறப்படுகின்றது.
இந்தத் தகவல்களை ரஷ்ய ஜனாதிபதி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. எனினும் வெள்ளை மாளிகை இது தொடர்பாக கருத்தெதனையும் தெரிவிக்கவில்லை. (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர் தினத்தில்
அந்தோனிப்பிள்ளை அகஸ்ரின் அவர்களை
அக மகிழ்ந்து வாழ்த்துகின்றோம்

தேசிய கல்வி நிறுவகத்தில்
இன்று நடைபெறும் சிறந்த
அதிபர், ஆசிரியர்களுக்கான விருது
வழங்கும் நிகழ்வில்
எமது பாடசாலை ஆசிரியர்
அந்தோனிப்பிள்ளை அகஸ்ரின்
அவர்கள் சிறந்த ஆசிரியராகத்
தெரிவு செய்யப்பட்டு மாண்புமிகு
ஜனாதிபதி அவர்களிடமிருந்து
"பிரதீபா பிரபா" விருதினைப்
பெற்றுக் கொள்கின்ற இந்நன்
நாளில் சகல நலன்களும் பெற்று
ஆசிரியப் பணியில் அகிலத்தில்
மேன்மேலும் சிறந்தோங்க உளமார
வாழ்த்தி நிற்கின்றோம்.



அதிபர், ஆசிரியர், மாணவர்கள்.
மணற்காடு றோ.க.த.க. பாடசாலை, குடத்தனை

பாராட்டி வாழ்த்துகின்றோம்

விசுவநாதர் ஆரம்பப்
பாடசாலையில்
2013-தரம் 5 புலமைப்பரிசில்
பரீட்சையில்
188 புள்ளிகளைப் பெற்று
சித்தியடைந்த
(மாவட்டத்தில் இரண்டாம் சித்தி)
ததீஸ்குமார் ஜென்சியா
தம்பதிகளின் செல்வப் புதல்வன்
ஜெராலின்
அவர்களைப் பாராட்டி
வாழ்த்துகின்றோம்.



வாழ்த்துபவர்கள்:
பெற்றோர், மாமா, மாமி, அத்தை,
சித்தி, சித்தப்பா, பெரியப்பா,
பெரியம்மா.

மயிலணி வடக்கு, சுன்னாகம்.

பாராட்டி வாழ்த்துகின்றோம்

அதி மேதகு ஜனாதிபதி அவர்களிடம்
இன்று (05.10.2013) சிறந்த
ஆசிரியருக்கான "பிரதீபா பிரபா"
விருதினைப் பெறும் எமது
பாடசாலையின் ஆசிரியர்
கனகரத்தினம் பிறேமானந்
அவர்கள் மேலும் பல பதவி
உயர்வுகளைப் பெறவும் பாராட்டி
வாழ்த்துகின்றோம்.



வாழ்த்துவோர்:
அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.
யா/தம்பாட்டி அ.த.க. வித்தியாலயம், ஊர்காவற்றுறை.
(சி/12568)(3.6.4)

பாராட்டி வாழ்த்துகின்றோம்



CONGRATULATION

யா/வண்ணை நாவலர் மகா
வித்தியாலய ஆசிரியை
செல்வி வசந்தி இரத்தினசபாபதி
உலக ஆசிரியர் தினமான இன்று
(05.10.2013) மகரகம தேசிய கல்வி
நிறுவகத்தில் இலங்கை பிரதம மந்திரி
கௌரவ டி.எம். ஜயரத்ன
அவர்களால் நல்லாசிரியருக்கான
"பிரதீபா பிரபா" விருது வழங்கிக்
கௌரவிக்கப்படுவதையிட்டுப்பாராட்டு
வதுடன், அவர் மேன்மேலும் பட்டங்கள்
பெற்று சிறப்புற வாழ வாழ்த்துவதுடன்
புங்குடுதீவு தல்லையபற்று சங்கரமூர்த்தி
முருக மூர்த்தி முருகப் பெருமானின்
அருளும் கிடைக்க வேண்டுகின்றோம்.

வாழ்த்துவோர்
சுந்தரலிங்கம் குடும்பம், ஏகாம்பரநாதன் குடும்பம், சச்சிதானந்தன் குடும்பம்,
சதானந்தன் குடும்பம், தயானந்தன் குடும்பம்.
(82274)(4.6.9)

# மின் தடை அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக்.5

உயர் அழுத்த மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக இன்று சனிக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.30 மணி வரை மட்டுவில், சரசாலை, மந்துவில், மீசாலை, கொடிகாமம், அல்லாரை, கச்சாய், பாலாவி, வரணி, புன்னாலைக்கட்டுவன், அச்செழு, ஈவினை, நிலாவரை, ஆவரங்கால், அச்சுவேலி, இடைக்காடு, சிறுப்பிட்டி, குட்டியப்புலம், கரந்தன், புத்தூர், வாதரவத்தை, வீரவாணி ஆகிய இடங்களிலும் -

நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.30 மணி வரை சுன்னாகம், மல்லாகம், ஏழாலை, தெல்லிப்பழை, மாவிட்டபுரம், அளவெட்டி, பன்னாலை, சிறுவிளான், ஸ்ரான்லி வீதிப்பிரதேசம், நாவலர் வீதியில் கச்சேரி நல்லூர் வீதியிலிருந்து கைலாய பிள்ளையார் கோயிலடி வரையான பிரதேசம் நல்லூர் குறுக்கு தெரு, செட்டித்தெரு வீதி ஆகிய இடங்களிலும் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று யாழ். பிரதேச மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார். (ஓ)

# ஆசிரியர் தின நிகழ்வுகள்

உலக ஆசிரியர் தினத்தையொட்டி வலிகாமம் கல்வி வலயத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள உலக ஆசிரியர் தினக் கொண்டாட்டங்கள் இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு வலிகாமம் கல்வி வலயக் கல்விப் பணிப்பாளர் செ.சந்திரராஜா தலைமையில் இணுவில் இந்துக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வட மாகாண கல்வி பண்பாட்டு விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன் கலந்து கொள்ளவுள்ளார்.

இந்த நிகழ்வில் வலிகாமம் கல்வி வலயத்துக்கு உட்பட்ட பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள் பாராட்டிக் கௌரவிக்கப்படவுள்ளதுடன் 2013ஆம் ஆண்டில் வலிகாமம் கல்வி வலயத்தில் இருந்து ஓய்வு பெற்றுச் சென்ற அதிபர்கள், ஆசிரியர்கள் நினைவுப் பரிசில் வழங்கிக் கௌரவிக்கப்படவுள்ளார்கள்.

மற்றும் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம் பெறவுள்ளன. (ந-86)

◆ ◆ ◆

கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரியின் ஆசிரியர் தினவிழா பாடசாலை மண்டபத்தில் இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது. நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக ஓய்வுநிலை ஆங்கில விரிவுரையாளர் எஸ்.விநாயகமூர்த்தி கலந்துகொள்வார். (ந-35)

## நகுலேஸ்வரத்தில் புரட்டாதிச் சனி பூஜை

கீரிமலை நகுலாதேவி சமேத நகுலேஸ்வரப் பெருமான் ஆலயத்தில் இன்று சனிக்கிழமையும், எதிர்வரும் 12 ஆம் திகதி சனிக்கிழமையும் புரட்டாதிச் சனி பூஜை மிகச் சிறப்பாக நடைபெறவுள்ளன.

காலை 8 மணியில் இருந்து சனீஸ்வரப் பெருமானுக்கு நீர் ஊற்றுதல், அர்ச்சனை செய்தல், எள்ளெண்ணெய் எரித்தல் என்பன இடம் பெறும். (ந)

## ஆன்மிக சொற்பொழிவு

வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் ஆலய இரண்டாம் திருவிழாவான இன்று 'இலக்கியங்கள் காட்டும் அன்பு' என்னும் தலைப்பில் மக்கள் வங்கி அலுவலர் ரி.ஹர்சன் சொற்பொழிவு ஆற்றுவார். (ந)



வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள்
வருடாந்த மகோற்சவம் - 2013
இன்று இரண்டாம் திருவிழா
சேஷ சயன சேவை

வேங்கடேசனே வெவ்வினை தீர்ப்பவனே
நீங்காமல் எம்மனதில் நிறைந்தவனே
நாங்களின்று படும் அல்லல் களைந்தே
தாங்கிடுவாய் தரணியில் நாம் வாழவே.
- தெல்லியூர்த் தேவி.

மாலை 7.30 தெய்வீகப் பேருரை
விடயம்: "இலக்கியம் காட்டும் அன்பு"
பேருரை ஆற்றுபவர்: T. ஹர்சன்

விளம்பர அனுசரணை:
சேகர் குளிர் ஊற்று
(A/10974)(7-6-3) 400, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

பாராட்டி வாழ்த்துகின்றோம்

எமது ஆசானும், யா/கோண்டாவில்
இராமகிருஷ்ண மகா வித்தியாலய
அதிபருமான, அஞ்ஞானத்தைப் போக்கி,
மெய்ஞ்ஞானத்தைப் புகட்டும்
பேராசானாகவும் திகழும்
ச வாமதேவன்
அவர்கள் சிறந்த அதிபர்களுக்கான
"பிரதீபா பிரபா" விருதினை இன்று
(05.10.2013) சனிக்கிழமை
கொழும்பில் கௌரவ பிரதம மந்திரி
தி.மு. ஜயரத்ன அவர்கள் முன்னிலையில்
பெறுகின்றார். அவரை மேலும் பல
விருதுகளைப் பெற்றுத்திகழ வேண்டுமெனப்
பாராட்டி வாழ்த்துகின்றோம்.



CONGRATULATION

வாழ்த்துபவர்கள்:
கொக்குவில் விக்னேஸ்வராக்கல்வி
நிலைய ஆசிரியர்கள், மாணவர்கள்.
(32288)(3.6.1)

பாராட்டி வாழ்த்துகின்றோம்





வீ.கணேசராசா
(அதிபர்)

க.சுவாமிநாதன்
(ஆசிரியர்)

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி அதிபர் வீ.கணேசராசா
அவர்களும் (இரண்டாவது தடவை) ஆசிரியர்
க.சுவாமிநாதன் அவர்களும் இன்று மகரகம தேசியகல்வி
நிறுவகத்தில் இலங்கைப் பிரதமர் கௌரவ
டி.எம். ஜயரத்ன அவர்களால் "பிரதீபா பிரபா" விருது
வழங்கி கௌரவிக்கப்படவுள்ளதையிட்டு
பாராட்டுவதுடன் மேன்மேலும் பட்டங்கள் பெற்று
சிறப்புற வாழ்த்துகின்றோம்.

ஆசிரியர் கழகம்
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி.
(32298)(4.6.3)

பாராட்டி வாழ்த்துகின்றோம்

முருகமூர்த்தி வீதி, சங்கானையைச் சேர்ந்த சிறீதரன் - சத்தியபாமா தம்பதியினரின்
இணைந்த புத்திரச்செல்வங்களான

Congratulations



செல்வன் சி. ரங்கன்
(179 புள்ளிகள்)

செல்வி சி. ரங்கா
(163 புள்ளிகள்)

(யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை மாணவர்கள்)

கல்வி என்னும் கடலில் கலம்விட்டு இன்று நலம் கண்டு, அறிவுப் பலத்தால்
பலரும் உமைக்கான சித்தி பலம் பெற்றீர். பெற்றது இது போதுமெனாது
மேலும் வெற்றிகள் கொண்டாட துறைகள் பலகடந்து கல்வி உலகில்
களம் கண்ட வீரர்களாக வலம்வர இறை அருளை வேண்டி வாழ்த்துகின்றோம்.
"வாழ்க! வளம் பெறுக"
அம்மம்மா, மாமாமார், மாமிமார், சித்தப்பாமார்,
சித்திமார், மச்சாள்மார், மச்சான், தம்பிமார்.
(32292)(7.6.3)

அக மகிழ்ந்து வாழ்த்துகின்றோம்



Congratulations எமது அதிபர்
கணபதிப்பிள்ளை மங்களேஸ்வரன்
(B.A.(Hon),Dip in Edu, MED, S.L.P.S.2.II)
இன்று (05.10.2013) மகரகம தேசிய கல்வி நிறுவகத்தில்
இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின்
பிரதம மந்திரி கௌரவ தி.மு.ஜயரத்ன அவர்களிடம்
சிறந்த அதிபருக்கான "பிரதீபா பிரபா" விருது
பெறுவதையிட்டு அகமகிழ்ந்து
பாராட்டுவதோடு மேலும் பல பட்டங்கள்
பெற்றுப் பாரினிலே புகழ்பெற வாழ்த்துகின்றோம்.

ஆசிரியர்கள், மாணவர்கள்,
கல்விசாரா ஊழியர்கள்
(யா/வரணி மகா வித்தியாலயம்)
(32269)(7.6.3)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்வெழுச்சி திட்ட நிகழ்வு நல்லூரில்

யாழ்ப்பாணம், ஒக். 5
வாழ்வெழுச்சித் திட்டத்தின் நல்லூர் பிரதேச செயலகப் பிரிவுக்கான நிகழ்வு எதிர் வரும் 11 ஆம் திகதி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் சில்வேஸ்திரி அலன்டீன் தலைமையில் மேற்படி பிரதேச செயலகத்தில் நடைபெறவுள்ளது.
அன்றைய தினம் ஒவ்வொரு கிராம அலுவலர் பிரிவுகளிலும் இது தொடர்பான நிகழ்வுகள் இடம்பெறும். நல்லூர் கிராம அலுவலர் பிரிவுகளில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சால்12ஆயிரம்பழமரக்கன்றுகள் வழங்கப்படவுள்ளன. (வ-7)

## வடமராட்சியில் புகையிலை நாற்றுமேடை அமைக்கும் பணி

வடமராட்சி, ஒக். 5
வடமராட்சிப் பிரதேசத்தில் புகையிலைச் செய்கைக்கென புகையிலை நாற்று மேடைகளை அமைக்கும் பணியில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர்.
மந்திகை, புலோலி, திக்கம், பொலிகண்டி, கரணவாய், கெருடாவில் ஆகிய இடங்களிலேயே புகையிலை நாற்று மேடைகள் விவசாயிகளால் அமைக்கப்பட்டு வருகின்றன. எதிர்வரும் நவம்பர், டிசெம்பர் மாதங்களில் புகையிலைச் செய்கைக்கான புகையிலை நாற்று நடுகை மேற்கொள்ளப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (வ-8)



நாவற்குழி செம்மணிப் பகுதியின் அருகில் உள்ள வயல்களில் விவசாயிகள் மழையை எதிர்பார்த்து நிலங்களைப் பண்படுத்தும் பணியில் ஈடுபட்டுள்ளனர். இந்த வயல்களில் டிரக்டரைப் பயன்படுத்தி உழுது வருவதுடன் புற்களை வெட்டி எரித்து உரமிட்டு விதைப்புக்கு ஆயத்தமாகி வருகிறார்கள். (வ-51)

# போரால் பாதித்த சிறுவர், முதியோருக்கு உதவி வழங்குவது அவசியமானதாகும்

### வலி.மேற்குப் பிரதேச சபைத் தவிசாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக்.5
வடக்கில் போரின் பின்னரான தாக்கத்துக்குச் சிறுவர்கள், முதியவர்கள், கர்ப்பிணிகள், தாய்மார்கள், பொதுமக்கள் என பல்லாயிரக்கணக்கான மக்கள் பாதிப்புக்குள்ளாகினர். எனினும் பெரும் பாதிப்புக்குள்ளாகி இன்று வரை உதவிகள் இன்றி இருப்போர் முதியவர்களும் சிறுவர்களுமே.
இன்றைய சிறுவர்- முதியோர் தினத்தில் திருநெல்வேலி வட்ட லயன்ஸ் (306-B1) கழகத்தினர் 60 ஆயிரம் ரூபா பெறுமதியான நுளம்பு வலைகளை 50 முதியவர்களுக்கு வழங்கியதை பாராட்டுகின்றோம்.

> போரின் பெரும் பாதிப்புக்குள்ளாகி இன்று வரை உதவிகள் இன்றி இருப்போர் முதியவர்களும் சிறுவர்களுமே.

இவ்வாறு வலி.மேற்குப் பிரதேச சபை தவிசாளர் திருமதி நா.ஐங்கரன் தெரிவித்தார்.
வலி.மேற்கில் 70 வயதுக்கு மேற்பட்ட 1000 பேரில் மிகக் கடுமையாகப் பாதிக்கப்பட்ட 50 முதியவர்களுக்கு திருநெல்வேலி வட்ட லயன்ஸ் கழகத்தினர் 50 நுளம்பு வலைகளை வழங்கினர்.
இந்த நிகழ்வில் கலந்து கொண்டு தொடர்ந்து உரையாற்றிய தவிசாளர் மேலும் தெரிவித்ததாவது:-
வலி.மேற்கில் போரின் தாக்கத்துக்கு உள்ளான சிறுவர்கள், முதியவர்களுக்கு தொண்டு நிறுவனங்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள், சர்வதேச நிறுவனங்கள் உதவுவதற்கு முன்வரவேண்டும்.
போரால் பாதிக்கப்பட்டவர்களின் விவரங்கள் எம்மிடம் உள்ளன. எனவே அவற்றை பெற்று உதவ முன்வரவேண்டும்.
அந்த வகையில் திருநெல்வேலி வட்ட லயன் கழகத் தலைவர் லயன் ஆ.அருள் ஜோதி, வலயம் 19 இன் தலைவர் லயன் வி.சிறிதரன், லயன். எஸ்.தனபாலசிங்கம், லயன் இ.பேரின்பநாதன், லயன் ஞ.ராகவன் ஆகியோர் இணைந்து எமது பிரதேச முதியவர்களுக்கு உதவியதை நாம் வரவேற்கின்றோம்- என்றார். (வ-50)

## பாடசாலைக்கு பசும்பால் விநியோகம்

நெல்லியடி, ஒக்.5
யாழ்.மாவட்ட பாடசாலை மாணவர்களுக்கு செம்ரெம்பர் மூன்றாம் வாரத்தில் 'மில்கோ' நிறுவனத்தில் கொள்வனவு செய்யப்பட்ட பசும்பால் விநியோகம் ஆரம்பிக்கப்பட்டது.
ஒவ்வொரு பால்பைக்கற்றும் 900மில்லிலீற்றர் அளவு கொண்டதாக மாணவர் தொகைக்கு அமைய கல்வி வலயங்களில் வைத்து அதிபர்களிடம் கையளிக்கப்பட்டன. ஒரு மாணவனுக்கு 150 மில்லிலீற்றர் பால் வழங்கப்பட்டது.
கடந்த வாரத்துக்கென வழங்கப்பட்ட பால் பைக்கற்றுக்கள் முடிவடைந்த பின்னர் இந்த வாரத்துக்கான பால் பைக்கற்றுக்கள் இதுவரை வலயக் கல்வி அலுவலகங்களுக்கு வழங்கப்படவில்லை. எதிர்பாராத நிதி நெருக்கடி காரணமாக பால் பைக்கற்றுக்கள் வழங்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-35)

## அபராதம்

தென்மராட்சி, ஒக்.5
சட்டவிரோத கசிப்பு வைத்திருந்த கொடிகாமம் வாசிக்கு சாவகச்சேரி நீதிமன்றில் 25 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.
கொடிகாமம் பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.
வழக்கை விசாரித்த நீதிவான் வழக் கில் எதிரி குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து 25 ஆயிரம் ரூபா அபராதம் விதித்தார். (வ-9)

## மரண அறிவித்தல்

### முருகேசு தியாகராசா



காரைநகர் பலகாட்டைப் பிறப்பிடமாகவும் 75.D-10 உருத்திரபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசு தியாகராசா 02.10.2013 புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.
அன்னார் காலஞ்சென்ற முருகேசு- வள்ளியம்மை தம்பதியரின் புதல்வனும், காலஞ்சென்ற நாகலிங்கம்-சின்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், கமலாதேவி யின் அன்புக் கணவரும், லவன், மயூரதி, லக்ஷன், பிரதீபன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், செல்வராணி, கிருஷ்ணமணி, நாகராசா ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (06.10.2013) ஞாயிற்றுக்கிழமை காலை 7.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக உருத்திரபுரம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

(37544)(10,6,3)

## வாகன இலக்கத்தகடு பெற்றுக் கொள்ளத் தவறியோருக்கு

யாழ்ப்பாணம், ஒக். 5
யாழ்.மாவட்ட மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்துக்கு 01.07.2012 ஆம் திகதிக்கு முன்னர் மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தின் தலைமைக் காரியாலயத்திலிருந்து அனுப்பி வைக்கப்பட்ட புதிதாக பதிவு செய்யப்பட்ட, உடைமை மாற்றத்துக்காக விண்ணப்பித்து வாகனப் பதிவுப் புத்தகம் கிடைக்கப் பெற்றும் இது வரைக்கும் வாகன இலக்கத் தகடுகளைப் பெற்றுக் கொள்ளாத வாகனங்களின் உரிமையாளர்கள் மோட் டார் போக்குவரத்துத் திணைக்களத்தின் 2013. 09.17 ஆம் திகதிய கடிதத்துக்கு அமைவாக 31.10.2013 க்கு முன்னர் யாழ்.மாவட்ட மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்துடன் தொடர்பு கொண்டு தங்களுடைய வாகன இலக்கத் தகடுகளை அலுவலக நாள்களில் பி.ப.2.00 மணி தொடக்கம் பி.ப.4.00 மணி வரை பெற்றுக் கொள்ளுமாறு யாழ்.மாவட்ட மோட்டார் போக்குவரத்துத் திணைக்கள வாகனப் பரிசோதகர் அறிவித்துள்ளார்.

## மரண அறிவித்தல்

### மரியாம்பிள்ளை சிங்கராசா

(இளைப்பாறிய பிரதம தபால் அதிபர்)



சிறுவிளான் இளவாலையைப் பிறப்பிடமாகவும், கல்கிசையில் வசித்து வந்தவருமாகிய மரியாம்பிள்ளை சிங்கராசா (28.09.2013) அன்று இறைபதம் அடைந்தார்.
அன்னார் காலஞ்சென்ற மரியாம்பிள்ளை -ஞானம்மா தம்பதியினரின் அன்பு மகனும், அன்னம்மாவின் (அற்புதம்) அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான சுவாம்பிள்ளை, மேரி திரேசா மற்றும் இராஜநாயகம்,மேரி யோசேப்பின் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும், றஜனி வேர்ஜினியா (கனடா), சாம்நெவில் ஆகியோரின் பாசமிகு தந்தையும், ராஜ்குமார் (கனடா), அமிலா றொஹானி ஆகியோரின் மாமனாரும், ரவீன், றுபேசன், றேனியா, துஷான், ஜெனுஷன் ஆகியோரின் அன்புப் பேரனாரும் ஆவார்.
அன்னாரின் பூதவுடல் இன்று (05.10.2013) சனிக்கிழமை இளவாலையில் உள்ள அன்னாரின் இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, நாளை (06.10.2013) ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியளவில் புனித அன்னம்மாள் சேமக் காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச் செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

T.P: 077 779 1064
011 273 4918

தகவல்:
குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

### கந்தையா வேலுப்பிள்ளை

(ஓய்வுபெற்ற பரிசோதகர், மீன்பிடித் திணைக்களம்)



சுழிபுரம், நெல்லியானைப் பிறப்பிடமாகவும், வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா வேலுப்பிள்ளை நேற்று (04.10.2013) வெள்ளிக்கிழமை காலமானார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா-இளையபிள்ளை தம்பதியரின் ஏக புத்திரனும், காலஞ்சென்றவர்களான கனகசபை- கதிராசிப்பிள்ளை தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்ற மகேஸ்வரியின் (ஓய்வுபெற்ற அதிபர்) அன்புக் கணவரும், மங்கயர்க்கரசியின் அன்புச் சகோதரனும், வேல்விழி (உதவிக் கல்விப்பணிப்பாளர், வவுனியா தெற்கு வலயம்), மான்விழி, கயல்விழி (லண்டன்), தண்விழி (சுவிஸ்), காலஞ்சென்ற மாயவிழி மற்றும் தர்மவிழி, சாந்தஸ்ரீ (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், சூரியகுமார் (பொலிஸ் சார்ஜன், வவுனியா), தயாபரன், சூரியகுமார் (லண்டன்), மணிமாறன் (சுவிஸ்), மாஜினி (சுவிஸ்), நகேந்திரம் ஆகியோரின் பாசமிகு மாமனும், சிந்து, நிருபன், சொரூபன், கிருபன், லக்சிகா, சுவர்ணிகா, முரளிவாசன், கர்சன் (லண்டன்), வெண்ணிலா (சுவிஸ்), பவித்திரா, பவித்திரன், அபி ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.10.2013) சனிக்கிழமை வவுனியா சூரியகுமாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பூந்தோட்டம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வவுனியா,
077 929 7923

(32295)(10,6,3)

தகவல்:
வேல்விழி சூரியகுமார்.

## புறொயிலர் கோழி விலையில் சரிவு

வடமராட்சி, ஒக். 5
வடமராட்சிப் பிரதேசத்தில் புறொயிலர் கோழி இறைச்சியின் விலை சரிவடைந்துள்ளது.
இதுவரை காலமும் சுத்தம் செய்யப்பட்ட புறொயிலர் கோழி இறைச்சி கிலோ 560 ரூபா வாக விற்பனை செய்யப்பட்டு வந்தது. தற்போது இதன் விலை 60 ரூபாவால் கீழிறங்கி கிலோ 500 ரூபாவாக விற்பனை செய்யப்பட்டு வருகின்றது. (ஒ-8)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
07.03.1939

மறைவு
17.09.2012

### அமரர் கந்தையா நாகப்பு

(ஆளுநர் விருது, கலாபூஷணம்,கலைவாரிதி)

(திதி: 5.10.2013 சனிக்கிழமை)

நிமிர்ந்த நன்நடையும் நேர்கொண்ட
பார்வையும் ஞானச் செருக்கும் அவ்னியில்
எவர்க்கும் அஞ்சாது அன்பாலும் பண்பாலும்
அனைவரையும் அரவணைத்த எம் அன்புத் தெய்வமே!
கண்மூடித் திறக்கும் நேரத்தில் எங்களைத் தவிக்கவிட்டு நிரந்தரமாகப் பிரிந்தீர்களே!
உங்களுக்கு நிகர் இனி எங்களுக்கு யார்?
ஆண்டு ஒன்று ஆனாலும் அணையாதே உங்கள் நினைவுகள்

சிந்துபுரம்,
வட்டுமேற்கு, வட்டுக்கோட்டை.

என்றும் உங்கள் நினைவுகளுடன்
குடும்பத்தினர்.

(32171)
(3.6.11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மது ஒழிப்புத் தினத்தில் மதுவுடன் இருவர் கைது

மட்டக்களப்பு.ஒக்.5
அம்பாறை ,ஆலையடிவேம்பு, ஒலுவில் பிரதேசங்களில் மது ஒழிப்புத் தினமான வியாழக் கிழமை கஞ்சா போதைப் பொருள் மற்றும் சட்டவிரோத மாக மதுபானம் விற்ற பெண் உட்பட இருவரை அக்க ரைப்பற்று பொலிஸார் கைது செய்துள்ளனர்.
பொலிஸாருக்கு கிடைத்த தகவல் ஒன்றையடுத்து, அக்க ரைப்பற்று, சாகாம வீதியில் சட்டவிரோதமாக மதுபானம் விற்ற பெண் ஒருவரை வியா ழக்கிழமை கைது செய்த துடன், மதுபானமும் கைப்பற் றப்பட்டது.
இதேவேளை ஒலுவில் சந்தி யில் கஞ்சாபோதைப் பொரு ளுடன் பாலமுனை, 4 ஆம் பிரிவு மைதான வீதியைச் சேர்ந்த ஒருவரை கைது செய் ததுடன் அவரிடம் இருந்து 6 கிராம் கஞ்சா போதைப் பொருள் மீட்கப்பட்டுள்ளது
இந்தச் சம்பவங்களில் கைது செய்யப்பட்டவர்களை நீதிமன் றத்தில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள் ளது என்று பொலிஸார் கூறி னர். (ச)

## மீனவர்களுக்கு சைக்கிள்கள்

மட்டக்களப்பு.ஒக்.5
அக்கரைப்பற்று இழுக்குச் சேனை, நீத்தை பிரதேச நன் னீர் மீன்பிடியில் ஈடுபடும் மீன வர்களின் நன்மை கருதி சைக் கிள் வழங்கும் நிகழ்வு இடம் பெற்றது.
இந்த நிகழ்வில் கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி அமைச்சர் எம்.எஸ்.உதுமா லெப்பை பிரதம விருந்தினரா கக் கலந்து கொண்டு நன் னீர் மீன்பிடியில் ஈடுபடும் மீனவர் களுக்கான சைக் கிள்களை வழங்கினார்.
இந்த நிகழ்வில் அக்கரைப் பற்று பிரதேச செயலர் எம்.வை.சலீம், பிரதேச சபை தவிசாளர் எம்.ஏ.றா ஸிக், கூட்டுறவு உதவிஆணையா ளர் ஏ.எல்.எம்.பதுறுதீன் உட்பட பலர் கலந்துகொண்டனர். (ச)



கல்முனை மாநகர முதல்வர் சிராஸ் மீராசாஹிப் ஒரு தொகுதி விளையாட்டு உபகரணங்களை கல்முனை லெஜன்ஸ் விளையாட்டுக் கழகத்துக்கு வழங்கினார்.

### ஒரு வருடத்தைப் பூர்த்தி செய்யாத நிலையில்

# அரசியல் செல்வாக்கால் ஆசிரியர்கள் இடமாற்றம்

திருகோணமலை.ஒக்.5
திருகோணமலை மாவட்டத் தில் ஆசிரியர்களாக நியமனம் செய்யப்பட்டு ஒருவருடம் பூர்த்தியாகாத நிலையில் பல ஆசிரி யர்கள் வசதியான இடங்க ளுக்கு இடமாற்றம் பெற்றுச் செல்கின்றனர்.
இந்த முரணான செயற்பாடு களுக்கு அரசியல்வாதிகளும், அதிகாரிகளுமே காரணமாக இருந்து வருகின்றனர் என்று இலங்கை ஆசிரியர் சங்கம் குற்றம் சுமத்தியுள்ளது.
இது தொடர்பில் சங்கம் மேலும் தெரிவித்துள்ளதாவது:-
போரால் பாதிக்கப்பட்ட எத்த னையோ பாடசாலைகள் இன் னமும் தற்காலிக அகதி முகாம்க ளிலேயே இயங்கி வருகின் றன.
அதிகஷ்ட, கஷ்டப் பிரதேசப் பாடசாலைகளில் பத்து வருடங் களுக்கு மேலாகவும் பணி யாற்றுகின்ற ஆசிரியர்களுக்கு இடமாற்றம் வழங்கப்படுவ தில்லை. ஆனால் ஆசிரியர்க ளாக நியமனம் செய்யப்பட்டு ஒருவருடமேயாகாத பல ஆசி ரியர்கள் வசதியான இடங்க ளுக்கு இடமாற்றம் பெற்றுச் செல்கின்றனர்.

> அதிகாரிகள் தம் கடமைகளை உணர்ந்து செயலாற்ற வேண்டும். அதன் போதே பிரச்சினைகளை தீர்க்க முடியும்.

இது போன்றே மூதூர் கல்வி வலயத்தில் 120 பேர் ஆசிரியர் வெற்றிடங்களுக்கு அண்மை யில் நியமனம் செய்யப்பட் டனர். அவர்களில் 42 பேர் இர ண்டு வாரங்களில் இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ளனர்.
அரசியல்வாதிகளதும், அதிகா ரிகளதும் பக்கச் சார்பான நடத்தை காரணமாக இது நிகழ்ந்துள்ளது. இவை இடமாற்றச் சபைக் குப் புறம்பான இடமாற்றங்கள்.
காலத்துக்குக் காலம் கல்வி அமைச்சினால் சுற்றறிக்கை கள் அனுப்பப்படுகின்ற போதும், ஆசிரியர்களின் பதவியுயர் வுகள் தாமதமாகவே மேற் கொள்ளப்படுகின்றன.
ஆசிரியர்களின் கோவை பூரணப்படுத்தப்படவில்லை என்று காரணம் வேறு கூறு கின்றனர்.
கோவைகளில் காணப்படும் பிரச்சினைகளை இனங் கண்டு உரிய காலத்தில் சம் பந்தப்பட்ட ஆசிரியர்களுக்கு அறிவித்து பூரணப்படுத்தும் பணியை அதிகாரிகளே செய்ய வேண்டும்.
பல வருடங்களாக பதவியுயர் வுகள் வழங்கப்படவில்லை. அத னால் ஆசிரிய ஆலோசகர் பத விக்கு விண்ணப்பிக்க முடி யாத நிலை காணப்படுகிறது.
பல ஆசிரியர்களுக்கு நீண்ட காலமாக சம்பள நிலுவை வழ ங்கப்படவில்லை. ஆசிரியர் கள் பத்து மாதக் கடனுக்குவிண் ணப்பித்துபலவருடங்களாகியும் கட னைப் பெற முடியா துள்ளது.
அதிகாரிகள் தம் கடமைகளை உணர்ந்துசெயலாற்றவேண்டும். அதன்போதேபிரச்சினைகளைதீர்க்க ப்படும்.-என்று சங்கம் தெரி வித்துள்ளது. (ச-4)

## மண் ஏற்றியவர் சிக்கினார்

அம்பாறை, ஒலுவில் களி யோடை ஆற்றில் நிபந்த னையை மீறி ஆற்று மண் ஏற்றிய ஒருவரை வியாழக் கிழமை காலை அக்கரைப் பற்று பொலிஸார் கைது செய் துள்ளனர்.
பொலிஸாருக்குக் கிடைத்த தகவல் ஒன்றையடுத்து களி யோடை ஆற்றில் ஆற்று மண்ணை நிபந்தனையை மீறி ஏற்றிய பாலமுனையைச் சேர்ந்த ஒருவரைப் பொலி ஸார் கைது செய்தனர்.
கைது செய்யப்பட்டவரை நீதி மன்றத்தில் முன்னிலைப்ப டுத்த நடவடிக்கை எடுக்கப்பட் டுள்ளது என்று பொலிஸார் கூறினர். (ச)

## தமிழர் ஆசிரியர் சங்கத்தின் ஆசிரியர் தினம் திருமலையில்

யாழ்ப்பாணம்.ஒக்.5
இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் உலக ஆசிரியர் தினவிழா திருகோணமலை கோணேஸ்வரா இந்துக் கல் லூரியில் இன்று சனிக்கிழமை நடைபெறவுள்ளது.
சங்கத்தின் தலைவர் ரி.சகா தேவராஜா தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வுக்கு மூதூர் வலயக் கல்விப் பணிப்பாளர்அ.விஜயானந்த மூர்த்தியும், திருகோணமலை வலயக் கல்விப் பணிப்பாளர் என்.விஜேந்திரனும் விருந்தி னர்களாகக் கலந்து கொள்வர்.
நிகழ்வில் கலந்துகொள்ளும் அதிபர்கள், ஆசிரியர்கள் இந்த முறை புலமைப்பரிசில் பரீட்சை யில் சித்தி பெற்ற மாணவர் களின் ஆசிரியர்கள் கௌரவிக் கப்படவுள்ளனர். நிகழ்வில் அனைவரையும் கலந்து கொள் ளுமாறு சங்கத்தின் பொதுச் செயலாளர் சரா புவனேஸ் வரன் கேட்டுள்ளார். (ச-4)

## 'மின்சார சிக்கனம்' விழிப்புணர்வு நிகழ்வு




இலங்கை செஞ்சிலுவைச் சங் கத்தின் காத்தான்குடிக் கிளை யின் ஏற்பாட்டில் மின்சாரத்தை எவ்வாறு சிக்கனமாக உப யோகிப்பது என்ற தொனிப் பொருளிலான விழிப்புணர் வூட்டும் நிகழ்வு புதன்கிழமை மாலை புதிய காத்தான்குடி பல்நோக்கு மண்டபத்தில் நடைபெற்றது.
இந்தநிகழ்வில் இலங்கை மின் சார சபையின் காத்தான்குடி மின் பொறியியலாளர் ஏம்.ஏ. சீ. எம்.நௌபல், உடலுக்கு பாதிப்பில்லாமல் எவ்வாறு மின்சாரத்தை உபயோகிப் பது. மின்சாரத்தை எவ்வாறு சிக்கனமாக உபயோகிப்பது போன்ற தலைப்புக்களில் கருத்துரை வழங்கினார்.

> மின்சாரத்தை எவ்வாறு சிக்கன மாக உபயோ கிப்பது என்பது தொடர்பில் கருத்துரை வழங்கப்பட்டது.

இந்த நிகழ்வில் இலங்கை செஞ்சிலுவைச் சங்க காத்தான் குடிக்கிளை தொண்டர் இணைப் பாளர் எம்.ஐ.எம்.சலீம், செஞ் சிலுவைச் சங்க மட்டக்களப்புக் கிளையின் தொண்டர் இணைப் பாளர் எஸ்.கணேஷ் உட்பட பலர் கலந்து கொண்டனர். (ச)

## மணல் அகழத் தடை




மட்டக்களப்பு.ஒக்.5
மட்டக்களப்பு,செங்கலடி பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட கிரான் புல்கட்டுப் பிரதேசத்தில் மணல் அகழ்வதற்கான அனு மதியை தடை செய்வது என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது.
செங்கலடி பிரதேச செயலர் பிரிவில் மணல் அகழ்வில் ஈடுபடுபவர்களுடனான முக் கிய கலந்துரையாடல் புதன் கிழமை நடைபெற்றது. இதன் போதே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.
செங்கலடி பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட பகுதிகளில் மணல் அகழ்கின்றபோது, அத னால் ஏற்படுகின்ற பிரச்சினை கள் மற்றும் அவர்களால் மேற் கொள்ளப்பட்டு வருகின்ற நடவ டிக்கைகள் தொடர்பிலும் அங்கு விரிவாக ஆராயப்பட்டன.
இந்தக் கலந்துரையாடலின் இறுதியில் பல தீர்மானங் களும் நிறைவேற்றப்பட்டன.
ஏறாவூர்பற்று உதவிப் பிரதேச செயலர் திருமதி ந.முகுந்தன் தலைமையில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில் கிழக்கு மாகாண சபை உறுப் பினர் சிவநேசதுரை சந்திர காந்தன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளு மன்ற உறுப் பினர்களான பொன். செல்வ ராசா, பி.அரியநேத்திரன் உட் படப் பலர் கலந்து கொண் டனர். (ச)

## பிடிவிறாந்து பிறப்பிக்கப்பட்ட நால்வர் வசமாக மாட்டினர்

மட்டக்களப்பு.ஒக்.5
அக்கரைப்பற்று, அட்டாளைச்சேனை பிரதேசங்களில் நீதி மன்ற பிடிவிறாந்து பிறப்பிக்கப்பட்ட 4 பேரை வியாழக்கிழமை அக்க ரைப்பற்று பொலிஸார் கைது செய்துள்ளனர்.
கடந்த காலங்களில் பிரதேசத் தில் பல்வேறு குற்றச்செயல்கள் தொடர்பாக கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் வழக்கு தொட ரப்பட்டு பின்னர் பிணையில் வெளிவந்த நிலையில் நீதிமன் றத்தில் விசாரணைகளுக்கு முன்னிலையாகாமல் தொடர்ந்து தலை மறைவாகி வந்தவர்களை கைது செய்ய பொலிஸார் விசேட நடவடிக்கையை வியாழக்கிழமை மேற்கொண்டனர்.

# நவராத்திரி காலத்தில் பரீட்சையை நடத்தாதீர்

## கிழக்குக் கல்விப் பணிப்பாளரிடம் வேண்டுகோள்

மட்டக்களப்பு.ஒக்.5
கிழக்கு மாகாண பாடசாலை களில் நவராத்திரி விழா இடம் பெறும் காலத்தில் பரீட்சை நடத் துவதை பிற்போட வேண்டும். இவ்வாறு தமிழ் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப் பினர் சீனித்தம்பி யோகேஸ் வரன் கிழக்கு மாகாண கல் விப் பணிப்பாளரிடம் மனு மூலம் கோரிக்கை விடுத்துள்ளார்.
இந்த மனுவில் மேலும் தெரி விக்கப்பட்டிருப்பதாவது:-
இந்துக்களின் புனித வழி பாட்டு விழாவான நவராத்திரி விழா இந்து மாணவர்களைக் கொண்ட பாடசாலைகளில் கொண்டாடப் பட்டு வருவது அனை வரும் அறிந்த விடயம்.
இந்தக் காலங்களில் கிழக்கு மாகாண பாடசாலைகளில் கல்வி பயிலும் 11 ஆம் ஆண்டு மாண வர்களுக்கு விசேட பரீட்சை ஒன்றை நடத்த ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது.
அதற்கான சுற்ற றிக்கை பாட சாலைகளுக்கு அனுப்பப்பட் டுள்ளது என்று சில பாடசாலை அதிபர்கள் எனது கவனத்துக் குக் கொண்டு வந்துள்ளனர்.
இந்த விடயம் இந்து மக்களை வேதனைப்படுத்தியுள்ளது.
எனவே நவராத்திரி விழா கிழக்கு மாகாண பாடசா லைகளில் மேற்கொள்ள தீர் மானித்த பரீட்சை நடத்தும் செயற்பாட்டை நிறுத்தி, நவ ராத்திரி விழா முடிவடைந்த பின் னர் நடத்துவதற்கு ஒழுங்கு செய்ய வேண்டும்.- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
இந்த மனுவின் பிரதிகள் மட்டக் களப்பு மாவட்டத்தி லுள்ள கல்குடா கல்வி வலயம், மட்டக்களப்பு கல்வி வலயம், பட்டிருப்பு கல்வி வலயம், மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயம் ஆகிய வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எப்போதும் அரசை காக்கும் விசுவாசிகள் முஸ்லிம்களே!

## பெருமிதத்துடன் கூறுகிறது முஸ்லிம் காங்கிரஸ்

"இந்த நாட்டின் முஸ்லிம்கள் எப்போதும் அரசுகளுக்கு விசுவாசமாக இருந்துள்ளனர். சர்வதேசத்தின் முன்னிலையில் இலங்கையைக் குற்றவாளிக் கூண்டில் நிறுத்த முற்பட்ட சக்திகளுக்கு எதிராக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் மற்றும் முக்கியஸ்தர்களும் ஜெனிவா சென்று அரபு நாட்டுத் தலைவர்களின் ஆதரவைத் திரட்டிக் கொடுத்தனர். இதை சிங்கள சமூகத்தினர் மறந்து விடமாட்டார்கள்."

இவ்வாறு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதித் தலைவரும் கிழக்கு மாகாண விவசாயக் கால்நடை, மீன் பிடி அபிவிருத்தி, சிறு கைத்தொழில், உல்லாசப்பயணத்துறை அமைச்சருமான ஹாபிஸ் நஸீர் அஹமட் தெரிவித்துள்ளார்.

"முஸ்லிம் மக்கள் மீது கொண்டகாழ்ப்புணர்ச்சி காரணமாகத் தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளைச் சுமத்தி வருகிறது. அவ்வியக்கத்தின் பொதுச் செயலாளர் கலாநிதி வசந்த பண்டார, "முஸ்லிம்கள் கையிலும் ஆயுதம். அதற்கே முஸ்லிம் காங்கிரஸார் ஆயத்தம்" என்ற செய்தியை ஊடகங்களுக்குத் தெரிவித்திருப்பதும் இனக்குரோத செயலாகும்" என்றும் ஹாபிஸ் நஸீர் அஹமட் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது,

நாட்டிற்குத் தற்போது சர்வதேசத்திலிருந்து அழுத்தங்களுக்கு மேல் அழுத்தங்கள் வந்துகொண்டிருக்கின்றன எனவும், அதிலும் குறிப்பாக, அமெரிக்கா முதல் ஐக்கிய நாடுகள் வரை தொடர்ந்தும் அழுத்தங்கள் வருகின்றன என கலாநிதி வசந்த பண்டார தெரிவித்துள்ள கருத்துகள் அவரைப் போன்ற இனவாதிகளின் பேச்சினாலும் செயற்பாடுகளினாலுமே என்பதை அவர் மறைக்கவோ மறுக்கவோ முடியாது.

இந்த நாட்டில் மன்னர் ஆட்சி நடைபெற்ற காலத்திலிருந்து சுதந்திரத் தைப் பெற்றுக்கொண்ட காலம்வரை முஸ்லிம்கள் அரசுகளுக்கு விசுவாசமாக இருந்துள்ளனர் என்பதை வசந்த போன்றவர்கள் வரவேற்றுச் சான்றுகளைத் தூசிதட்டிப் பார்க்கவேண்டும்.

முஸ்லிம்கள் பிரிவினைவாதிகளாக இருந்திருந்தால் இணைந்திருந்த வடக்கு, கிழக்கு மாகாணசபையை அப்போதைய முதலமைச்சர் வரதராஜப் பெருமாள் தனி ஈழமாகவும் சபையை ஈழத்தின் நாடாளுமன்றமாகவும் பிரகடனப்படுத்தியபோது அதிலிருந்து விலகியவர்கள் முஸ்லிம் காங்கிரஸ்காரர்கள் என்பதை எவரும் இலகுவில் மறந்துவிட முடியாது.

சர்வதேசத்தின் முன்னிலையில் இலங்கையைக் குற்றவாளிக் கூண்டில் நிறுத்த முற்பட்ட சக்திகளுக்கு எதிராக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் மற்றும் முக்கியஸ்தர்களுமான அரபு நாட்டுத் தலைவர்களிடம் சென்று இலங்கைக்கு ஆதரவு திரட்டிக் கொடுத்ததை ஜனாதிபதியும், ஆளும் தரப்பும், எதிர்த்தரப்பும் நன்றியுள்ள பௌத்த, சிங்கள மக்களும், மகாநாயக்க தேரர்களும் ஒரு போதும் மறந்துவிட மாட்டார்கள்.

முஸ்லிம்கள் கோழைகள் அல்லர். அவர்கள் இந்த நாட்டு மன்னர்களைக் காப்பதற்காகவும், குடியேற்றவாசி களுக்கு எதிராகவும் நாட்டு மக்களுடன் இணைந்து ஆயுதம் ஏந்திப் போராடி தமது இரத்தத்தையும் சிந்தியுள்ளனர்.

முஸ்லிம் தாய்மார் கூட சிங்கள மன்னன் என்று பாராமல் தனது அரசன் என்ற ரீதியில் தனது இன்னுயிரையும் இழந்து அரசனைக் காப்பாற்றிய வரலாறுகள் இன்னும் அழிந்துபோகவில்லை" என்று தெரிவித்துள்ளார்.

## சர்வதேச தரத்தில் கடவுச்சீட்டு

2014 ஆம் ஆண்டிலிருந்து சர்வ தேச தரம் வாய்ந்த புகைப்படத் தன் மையுடன் கடவுச்சீட்டு விநியோகிக்கப் படும் என இலங்கை குடிவரவு - குடிய கல்வு கட்டுப்பாட்டு ஆணையாளர் சூலானந்த பெரேரா தெரிவித்துள்ளார்.

அடுத்த வருடம் முதல் குடிவரவு - குடியகல்வு திணைக்களத்தால் அங்கீகாரம் பெற்ற நிலையங்களில் மாத்திரமே கடவுச்சீட்டுக்கு புகைப்படம் எடுக்க முடியும். மேலும், புதிய புகைப்பட நிலையங்களை பதிவுசெய்யும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

ஒக்டோபர் 15ஆம் திகதி வரை இதற்கான விண்ணப்பங்களைப் பெறமுடியும். இது குறித்து 0115 731028 என்ற தொலைபேசி இலக்கத்திற்கு அழைத்து மேலதிக தகவல் அறிய முடியும் என்றும் சூலானந்த பெரேரா தெரிவித்தார்.



2013 ஐந்தாந்தர புலமைபரிசில் பரீட்சையில் ஆகக்கூடுதலான புள்ளிகளைப் பெற்ற 19 மாணவர்கள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டனர். இந்த 19 பேரில் 194 புள்ளிகளைப் பெற்று அகில இலங்கை ரீதியில் தமிழ்மொழி மூலமும் வடமாகாணத்தில் முதலிடத்தையும் பெற்ற ஏழாலை சன்மார்க்க வித்தியாலய மாணவன் பரமாந்தம் தனுராஜும் காணப்படுகிறார்.

## நாடுகடத்தப்பட்டவர்களை சந்திக்க சுவிஸுக்கு அனுமதி

சுவிற்ஸர்லாந்தில் இருந்து நாடு கடத்தப்பட்டு, இலங்கையில் கைது செய்யப்பட்ட இருவரையும் பார்வையிட சுவிஸ் அதிகாரிகளுக்கு அரசு அனுமதி அளித்துள்ளது. குடியேற்றத்துக்கான சுவிஸ் சமஸ்டிப் பணியகம் இந்த தகவலை வெளியிட்டுள்ளது.

கடந்த 2011ஆம் ஆண்டில் புகலிடம் மறுக்கப்பட்ட இரு தமிழர்களை சுவிட் ஸர்லாந்து திருப்பி அனுப்பியிருந்தது. இவர்கள் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து, விடுதலைப் புலிகளுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தில், இலங்கைப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இதையடுத்தே, புகலிடக் கோரிக்கை நிராகரிக்கப்பட்டவர்களை இலங்கைக்குத் திருப்பி அனுப்புவதை, சுவிஸ் அரசு கடந்த ஒகஸ்ட் 26ஆம் திகதி இடைநிறுத்தியது.

இந்தநிலையில், தற்போதும் இலங்கை அரசால் தடுத்து வைக்கப்பட்டுள்ள இரு தமிழர்களையும், சுவிஸ் அதிகாரிகள் சந்திப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. குறிப்பிட்ட இருவரினதும், புகலி டக் கோரிக்கை விண்ணப்பங்கள் பரிசீ லிக்கப்பட்டதில் குறைபாடுகள் இருந்தி ருக்கலாம் என்றும் சுவிஸ் அரசு தெரிவித்துள்ளது.

# வெற்றி மோகம் கொள்ளாமல் நேர்மையாகச் செயற்படுங்கள்

## ஜனாதிபதி மஹிந்த கோரிக்கை

"மாகாணத் தேர்தல்களில் வெற்றி பெற்ற அனைவரும் நேர்மையாக செயற்பட வேண்டுமேயன்று வெற்றி மோகத்தில் செயற்படக்கூடாது. பழி வாங்கும் செயல்கள் தவிர்க்கப்பட வேண்டும். இன, மத, குலம் மற்றும் குறுகிய அரசியல் நோக்கங்களின்றி அனைத்து மக்களுக்கும் சமமான சேவைகளை வழங்குவது அவசியம்" என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

ஜனாதிபதி செயலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற மத்திய மற்றும் வடமேல் மாகாண முதலமைச்சர்கள், அமைச்சர்களுக்கு சத்தியப் பிரமாணம் வழங்கிவைத்து வாழ்த்துக் கூறி உரையாற்றுகையிலேயே ஜனாதிபதி மேற் கண்டவாறு தெரிவித்தார். ஜனாதிபதி மேலும் தெரிவித்ததாவது:

"உங்கள் வெற்றியை நான் நாட்டு மக்களின் வெற்றியாகவே பார்க்கிறேன். மக்கள் வெற்றி என்பது எமது வெற்றியாகும். அதனால் மக்களின் வாழ்த்துகளை வெற்றிபெற்ற அனைவருக்கும் தெரிவித்துக் கொள்கிறேன்.

உங்கள் அனைவரதும் அர்ப்பணிப்பும் உழைப்பும் வெற்றிக்கு முக்கிய காரணமாகியுள்ளது. அதனால்தான் எம்மால் அமோக வெற்றியைப் பெறமுடிந்துள்ளது. வெற்றி பெற்ற அனைவரும் நேர்மையாக செயற்பட வேண்டுமேயன்று வெற்றி மோகத்தில்

> இன, மத, குலம் மற்றும் குறுகிய அரசியல் நோக்கங்களின்றி அனைத்து மக்களுக்கும் சமமான சேவைகளை வழங்குவது அவசியம்"

செயற்படக்கூடாது என கேட்டுக்கொள்கிறேன்.

தோல்வியுற்றபோது அதன் விளைவாக நீதிமன்றம் சிறைச்சாலை, வைத்தியசாலைகளுக்குச் சென்ற அனுபவம் எமக்குள்ளது. [illegible] [illegible] இருந்தாலும் எமது அரசமைப்பிற் கிணங்க நான்கு அமைச்சர்களையே நியமிக்க முடியும். நாடாளுமன்றமெனில் பல அமைச்சுப் பதவிகள் உள்ளன. மாகாண சபையில் அப்படியல்ல. வெற்றி பெற்றவர்களின் தகைமை அமைச்சுப் பதவிகள் குறித்து நீண்ட பேச்சுகளுக்குப் பின்னர் எடுக்கப்பட்ட தீர்மானமே இது.

முதலமைச்சர்கள் மற்றும் அமைச்சர்கள் ஒரு தொகுதிக்கு மட்டுப்படுத்தப்பட்டவர்களல்லர். அவர்கள் முழு மாகாணத்துக்கும் சேவை செய்யக் கூடியவர்கள். மாகாணத்திலுள்ள சகல தொகுதிகளுக்கும் சேவைகள் பகிரப்பட உதவ வேண்டும். சகல உறுப்பினர்களுக்கும் இது பகிர்ந்தளிக்கப்பட வேண்டியது முக்கியம். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அல்லது ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியைச் சேர்ந்த மக்களே உங்களுக்கு வாக்களித்துள்ளனர். அரச கட்சிக் கூட்டங்களுக்கு தவறாது சமுகமளியுங்கள். உங்கள் கருத்துகளை அங்கு வெளிப்படுத்துங்கள். அங்கு அதற்கு [illegible]" என்றார்.

## போதையாக பாலியல் மருந்துகள் அதிக பாவனையில் மாணவர்கள்

பாலியல் ரீதியாக பலவீனமானவர்கள் பயன்படுத்தும் பாலியல் மருந்து களை பாடசாலை மாணவர்கள் அதிகளவில் பயன்படுத்தி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பாலுறவுப் பிரச்சினைகளை எதிர்நோக்கி வரும் நபர்கள் பயன்படுத்தும் மருந்து மாத்திரைகளை பாடசாலை மாணவர்கள் போதைக்காகப் பயன்படுத்தி வருவதாக அழகுசாதன மற்றும் மருந்துப்பொருள் கட்டுப்பாட்டு அதிகாரசபை குறிப்பிட்டுள்ளது. இது ஓர் ஆபத்தான நிலைமை என குறித்த நிறுவனம் சுட்டிக்காட்டியுள்ளது.

பாலியல் ரீதியாக பலவீனமான வர்கள் பயன்படுத்தும் மருந்து வகைகள் பக்க விளைவுகளை ஏற்படுத்தக் கூடியவை என்ற காரணத்தினால், மருத்துவ ஆலோசனையின்றி இதனைப் பயன்படுத்தக் கூடாது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. சட்ட ரீதியாகவும் சட்டவிரோதமான முறையிலும் இந்தப் பொருட்கள் நாட்டுக்குள் கொண்டுவரப் படுவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

மருந்துப்பொருள்களை தடை செய்வதன் மூலம் பிரச்சினைக்கு தீர்வு காண முடியாது எனவும், மருந்தகங்க ளுக்கு போதிய விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட வேண்டுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 'தினுஜ புத்தா' படகிலிருந்தோரை மீட்டது சாகர

மாலைதீவு மற்றும் இலங்கை கடற்பரப்பிற்கு இடையில் பழுதடைந்த படகில் இருந்தவர்களை இலங்கை கடற்படையினர் மீட்டுள்ளனர். 'தினுஜ புத்தா' என்ற படகில் இருந்த நபர்கள் தற்போது கரை நோக்கி அழைத்து வரப்படுகின்றனர் என கடற்படை ஊடகப் பேச்சாளர் கோசல வர்ண குலசூரிய தெரிவித்துள்ளார்.

இலங்கையின் தென் மேற்கு கடற்பரப்பில் 215 கிலோமீற்றர் தொலைவில் 65 பேருடன் பயணித்த படகு ஒன்று தொழில்நுட்ப கோளாறு காரணமாக கடந்த வியாழக்கிழமை மாலை பழுதடைந்தது. இந்தப் படகில் பயணித்தவர்களை மீட்க இலங்கைக் கடற்படையினரின் சாகர எனும் கப்பல் அப்பகுதிக்கு விரைந்து சென்றது. அதன்படி நேற்று முன்தினம் இரவு கடற்படையின் கப்பல் படகு இருந்த இடத்தை அடைந்ததுடன், படகில் இருந்தவர்கள் மீட்கப்பட்டுள்ளனர் என்றும் அவர் குறிப்பிட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## கொழும்பு பொதுநலவாய மாநாடு; காம்பியா கொடுத்துள்ளது கிள்ளல்

இலங்கையில் நடைபெறுவதற்கு ஏற்பாடாகி உள்ள பொதுநலவாய உச்சி மாநாட்டை பகிஷ்கரிக்கப் போவதாக கனடா அச்சுறுத்தி வருகிறது. பெரும்பாலும் அந்த நாடு அதனைச் செயலில் காட்டும் என்று பிந்திய தகவல்கள் கசிந்து வருகின்றன.

கனடா மட்டும் அன்றி இந்தியாவும் அதே வழியைக் கைக்கொள்ளலாம் என்று சொல்லப்படுகிறது. அதனை நாடி தமிழ் நாட்டிலிருந்து இந்திய மத்திய அரசு மீது பெரும் அழுத்தம் பிரயோகிக்கப்பட்டு வருவதாகச் சொல்லப்படுகிறது. பாரதப் பிரதமர் மன்மோகன் சிங் எந்தப் பக்கம் நிற்பார் என்று கடைசி வாரங்களிலேயே நிச்சயமாகும் எனவும் கூறப்படுகிறது.

இத்தகைய நிலையில் பொது நலவாய அமைப்பின் அங்கத்துவ நாடுகளில் ஒன்றான காம்பியா தான் அதிலிருந்து விலகிக் கொள்வதாக அறிவித்துள்ளது.

காம்பியாவின் ஜனாதிபதி யஹ்யா ஜம்மே பொதுநலவாய அமைப்பிலிருந்து காம்பியா விலகிக்கொள்வதாக அறிவித்ததுடன், பொதுநலவாய அமைப்பு மீது அது நவீன காலனித்துவ அமைப்பு என்றும் குற்றஞ்சாட்டியுள்ளார்.

இருபது ஆண்டுகளுக்கு முன்னர் காம்பியாவில் ஆட்சியைக் கைப்பற்றியவர் யஹ்யா ஜம்மே. 2003 இல் பொதுநலவாய அமைப்பிலிருந்து சிம்பாப்வே வெளியேறியது. அந்த அமைப்பு தொடர்ந்தும் பலம் வாய்ந்த அமைப்பாக இயங்க முடியுமா என்ற பலவகைச் சந்தேகங்களை மீண்டும் உருவாக்கும் வகையில் செயற்பட்டுள்ளார் காம்பிய அதிபர் யஹ்யா ஜம்மே.

மனித உரிமை மீறல்கள், அதிகார துஷ்பிரயோகம் ஆகிய குற்றச்சாட்டுகளின் பேரில் 2002இல் சிம்பாப்பேயின் உறுப்புரிமையை பொதுநலவாய அமைப்பு இடைநிறுத்தியது. இதனால் கோபமடைந்த ரொபர்ட் முகாவே அந்த அமைப்பிலிருந்து சிம்பாப்வே வெளியேறுவதாக 2003 இல் அறிவித்தார். அதேபாணியில் 1971இல் பங்களாதேஷை ஒரு சுதந்திர நாடாக பொது நலவாய உறுப்பு நாடுகள் அங்கீகரித்தபோது அதனை ஆட்சேபித்து சுல்பிஹார் அலி பூட்டோ பாகிஸ்தானை வெளியேற்றினார். எனினும், 1989இல் பாகிஸ்தான் மீண்டும் பொதுநலவாய அமைப்பில் இணைந்துகொண்டது.

எயிட்ஸ் நோய்க்குத் தாம் மருந்தொன்றைக் கண்டுபிடித்திருப்பதாகக் கூறி ஆபிரிக்க நாடுகளில் ஒரு சமயம் பரபரப்பை ஏற்படுத்தியவர் யஹ்யா ஜம்மே. நாட்டிலுள்ள சூனியக்காரர்களுக்கும் மந்திரவாதிகளுக்கும் எதிராக தேசியப் போராட்டம் ஒன்றை ஆரம்பித்ததன் மூலம் மனித உரிமைகளை மீறினார் என்று பரவலாகக் குற்றச்சாட்டுகள் உள்ளன.

ஐ.நா. பொதுச் சபையில் இவர் கடந்த மாதம் உரையாற்றுகையில், ஓரினச் சேர்க்கையாளர்களைக் கடுமையாகத் தாக்கிப் பேசினார். அதன் பின்பு ஓரினச் சேர்க்கையாளர்களை காம்பியாவிலிருந்து வெளியேறுமாறும், தமது உத்தரவை மீறுவோரின் தலை துண்டிக்கப்படும் என்றும் அறிவித்தார்.

பொதுநலவாய அமைப்பிலிருந்து வெளியேறுவதாக காம்பியா வெளியிட்ட அறிவிப்பு குறித்து ஆச்சரியம் தெரிவித்துள்ளது லண்டனில் உள்ள பொதுநலவாய அலுவலகம். பொதுநலவாய அமைப்பிலிருந்து வெளியேறுவது சம்பந்தப்பட்ட அரசுகளைப் பொறுத்தது. எனினும், காம்பியாவோ அல்லது வேறு எந்த ஓர் உறுப்பு நாடோ வெளியேறுவது கவலையளிக்கிறது - என்றும் தெரிவித்துள்ளது அது.

ஆகவே, காம்பியாவின் வெளியேற்றம் பொதுநலவாய அமைப்புக்கு பின்னடைவைத் தரும் என நம்பலாம். இப்படி ஒவ்வொரு நாடாக வெளியேறுமானால் பொதுநலவாய அமைப்பு சிறுத்துவிடும். அதற்கு தற்பொழுதுள்ள சர்வதேச அங்கீகாரமும் இல்லாது போய்விடும்.

ஜனநாயகம், சர்வதேச புரிந்துணர்வு, பரஸ்பர நல்லுறவு ஆகியவற்றை முன்னிலைப்படுத்தி 1949இல் அமைக்கப்பட்ட பொதுநலவாய அமைப்பு அறுபது வருடங்களைக் கடந்து விட்டது. அடுத்த மாதம் 15ஆம் திகதி ஆரம்பமாவது 22ஆவது உச்சி மாநாடு.

கொழும்பு மாநாட்டைப் பகிஷ்கரிக்குமாறு உறுப்பு நாடுகளுக்கு மனித உரிமைகள் கண்காணிப்பகம் அனுப்பியுள்ள கடிதம், பொறுப்புக்கூறும் விடயத்தில் இலங்கை தவறிவிட்டது என்ற நவநீதம்பிள்ளையின் குற்றச்சாட்டு ஆகியவற்றுக்கு மத்தியில் கொழும்பில் நடைபெறவுள்ள மாநாடு. காம்பியாவின் விலகல் அறிவிப்பால் மேலும் பல கரும்புள்ளிகளை குத்திக்கொள்ள வழி செய்யும் வாய்ப்பு உண்டு.

# விழிப்படைந்து விட்டனர் மக்கள் இனியும் வேண்டாம் திருகுதாளம்

ராஜராஜன்

முதலமைச்சராகப் பொறுப்பேற்கவிருக்கும் சி.வி.விக்னேஸ்வரன். ஒன்றுபட்ட இலங்கையின் கீழ் தமிழர்களுக்கு உரிமைகளை வழங்க வேண்டுமென ஏற்கனவே தெரிவித்துள்ள நிலையில் இந்தச் சந்தேகம் நியாயமற்றதாகவே காணப்படுகின்றது. எனவே பெரும்பான்மையின மக்கள் உண்மை நிலையை உணர்ந்து கொள்ளவேண்டும் தம்மைத் தவறான வழிகளில் இட்டுச் செல்பவர்களின் வார்த்தைகளைப் புறம் ஒதுக்கவேண்டும்.

வடக்கு மாகாண சபைத் தேர்தல் முடிவுகள், இனவெறியைக் கக்குவதையே தமது தொழிலாகவும், வாழ்வாகவும் கொண்டவர்களிடத்தில் பேரச்சத்தை ஏற்படுத்தியுள்ளதைத் தெளிவாகப் புரிந்து கொள்ள முடிகின்றது. அமைச்சர்கள் மட்டத்திலிருந்து மத குருமாரெனக் கூறிக்கொள்வோர்வரை, தேர்தலின் தோல்வியால் குளிரெடுத்த நிலையில் வாயில் வந்ததையெல்லாம் உளறிக் கொண்டிருக்கின்றனர். குறிப்பாக வட மாகாண சபையின் முதலமைச்சராகத் தெரிவு செய்யப்பட்ட சி.வி.விக்னேஸ்வரனே இவர்களின் பிரதான இலக்காகக் காணப்படுகின்றார். ஆயுதங்களின் உதவியுடன் போரிட்ட புலிகளின் தலைவர் பிரபாகரனை விட இவர் அபாயகரமானவரென அவர்கள் ஏனோ கணித்து வைத்துள்ளனர். இதனால் ஏற்பட்ட பீதி காரணமாக மீண்டும் இனவாதத்தைக் கக்குவதில் இவர்கள் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

இத்தனைக்கும் ஏனைய எட்டு மாகாண சபைகளுக்கும் தேர்தல் இடம்பெற்றமை போன்றே வடமாகாண சபைக்கும் தேர்தல் இடம்பெற்றுள்ளது. அங்கும் மாகாண சபை உறுப்பினர்கள்தான் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். இங்கும் அதே நிலைதான். ஆனால் ஒரேயொரு வித்தியாசம் மட்டுமே காணப்படுகின்றது. தமிழர் ஒருவர் முதலமைச்சராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார். இவரைக் கண்டு தான் அவர்கள் கிலி கொள்கின்றனர். புலியைக் கண்டதுபோன்று நடுநடுங்குகின்றனர்.

### 13ஆவது திருத்த சட்டமும் மாகாண சபையும்

இலங்கையின் அரசமைப்பில் மேற்கொள்ளப்பட்ட 13 ஆவது திருத்தத் தின் பிரகாரம் மாகாண சபைகள் இங்கு உருப்பெற்றன. ஆனால் விரும்பியோ விரும்பாமலோ இந்தியா, இலங்கை என்ற தம்பதிகள்தான் இவற்றின் தாய்-தந்தையென்பதை எவரும் மறுக்க முடியாது. அப்போதைய இலங்கை அரசுத் தலைவரான ஜே.ஆர்.ஜெயவர்த்தனா புலிகளை அழித்தொழிப்பதற்கே இந்தியாவின் உதவியை நாடியிருந்தார். ஆனால் மாகாண சபைகள் இங்கு அமைவதை அவர் ஒருபோதுமே விரும்பியதில்லை. ஆனால் இந்தியாவைச் சமாளிக்கும் பொருட்டு அரை மனதுடன் அதனை ஏற்றுக் கொண்டார். பின்னர் பார்த்துக் கொள்ளலாம் என்ற நரிதந்திரம் அவரது மனதில் அப்போது ஓடிக்கொண்டிருந்தது.

உண்மையில் கூறுவதாயின், இலங்கை போன்றதொரு சிறிய நாட்டுக்கு இந்த மாகாண சபை முறைமை தேவையில்லைத்தான். ஆனால் வடக்கு, கிழக்கு தமிழ் மக்களுக்கு ஏதோ செய்கின்றோம் என்ற நினைப்பில் இந்தியா இதனைத் திணித்தது. வடக்கு, கிழக்கு மாகாணங்கள் ஒன்றாக இணைக்கப்பட்டன. இவையெல்லாம் பெரும்பான்மையின மக்களுக்கு மகிழ்ச்சி தரக் கூடிய விடயங்கள் அல்ல. இந்தியா கூட இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் பிரகாரம் உருவாக்கப்பட்ட வடக்கு, கிழக்கு மாகாணங்களின் இணைப்பு, மாகாண சபைகளுக்குரிய அதிகாரம் ஆகியவற்றின் சட்ட வலுவை நிலை நிறுத்துவதில் தவறிவிட்டது. இதன் காரணமாகவே இணைந்திருந்த வடக்கு, கிழக்கு மாகாணங்கள் ஒரு நீதிமன்றத் தீர்ப்பின் பிரகாரம் இதுவாகப் பிரிக்கப்பட்டன. மேலும் மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்ட பொலிஸ், காணி அதிகாரங்களையும் பிடுங்கி எடுப்பதற்கான நடவடிக்கைகளும் திரைமறைவில் மேற்கொள்ளப்பட்டன. ஆனால் இலங்கையின் உயர் நீதிமன்றம் ஒருபடி மேலே சென்று காணி அதிகாரங்கள் மத்திய அரசுக்கே உரியனவெனத் தீர்ப்பு வழங்கிவிட்டது. இப்போது எஞ்சியிருப்பது பொலிஸ் அதிகாரம் மட்டும்தான். அதுவும் இன்றோ நாளையோ கழற்றி விடப்படலாம். இந்த நிலையில் பற்கள் எல்லாம் பிடுக்கப்பட்ட ஒருவனின் முன்னால் எலும்புகளுடன் கூடிய இறைச்சியை வைத்த நிலைதான் மாகாண சபைகளுக்கு ஏற்படப் போகின்றது.

### மூன்றில் இரண்டு பெரும்பான்மை வெற்றி

இதை அப்போதே உணர்ந்த விடுதலைப் புலிகள் இந்தச் சபைகளை ஏற்றுக் கொள்ளாது தூக்கி வீசிவிட்டனர். இணைந்த வடக்கு-கிழக்கு மாகாண சபைக்கான முதலாவது தேர்தல் இடம் பெற்றபோது இந்திய விசுவாசிகள் சிலரே அதில் போட்டியிட்டதுடன் பதவிப் பொறுப்புக்களிலும் அமர்ந்து கொண்டனர். ஆனால் அவர்களால் உருப்படியாக எதனையும் சாதிக்க முடியவில்லை. இந்த மாகாண சபை மூலமாக மக்களின் தேவைகள் எவையும் நிறை வேற்றப்படவில்லை. பெயரளவுக்கு ஒரு மாகாண சபை இருந்தது; அவ்வளவு தான்.

ஆனால் சுமார் 25 வருடங்களுக்குப் பிறகு வடக்கு மாகாண சபைக்கான தேர்தல் இடம்பெற்றுள்ளது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வரலாறு காணாத பெரு வெற்றியைப் பெற்று மாகாண சபை நிர்வாகத்தை மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் கைப்பற்றிக் கொண்டது.

### மக்கள் சிந்திக்கத் தொடங்கி விட்டார்கள்

தேர்தலின்போது அரச தரப்பினரின் ஆசீர்வாதத்துடன் இங்கு அரங்கேற்றப்பட்ட எதனையும் மக்கள் கண்டுகொள்ளவில்லை. அவர்கள் எதற்கும் சோரம் போகாத உணர்வும், அறிவும் ஒன்று சேர்ந்த நிலையில் தமது வாக்களிக்கும் பொறுப்பை உன்னதமாக நிறைவேற்றியுள்ளனர். வடபகுதித் தமிழ் மக்கள் சிந்திக்க ஆரம்பித்து விட்டார்கள் என்பது இதன் மூலமாகத் தெரிய வருகின்றது. இனிமேல் இவர்களின் சிந்தனையில் தடைகள் ஏற்படாது.

ஆனால் பெரும்பான்மையினத்தைச் சேர்ந்த இனவெறியர்கள் அங்குள்ள அப்பாவி சிங்கள மக்களின் மனங்களில் விஷ வித்துக்களைத் தூவி வருகின்றனர். இப்போது வடமாகாண சபை, பின்னர் தனிநாடு என்ற ரீதியில் இவர்களின் பொய்ப் பிரசாரங்கள் முழு வீச்சில் இடம்பெற்று வருகின்றன. சிங்கள மக்களும் இதனை நம்புவதாகத் தெரிகின்றது. இதன் பின் விளைவுகள் பயங்கர மானவை என்பதை இவர்கள் ஏனோ மறந்து விடுகின்றனர்.

### ஐக்கியத்தை வெளிப்படுத்த வேண்டியவர்கள் இனவெறியைத் தூண்டுகிறார்கள்

இந்த நாட்டில் வாழுகின்ற இனங்களுக்கிடையில் ஐக்கியத்தை ஏற்படுத்த வேண்டியவர்கள். இவ்வாறு கீழ்த் தரமான செயல்களில் ஈடுபடுகின்றமை இனங்களிடையே மேன்மேலும் பிளவுகள் அதிகரிக்கவே வழிவகுக்கும்.

தமது அரசியல் அபிலாசைகளை நிறைவேற்றுவதற்காக இனவெறியைத் தூண்டி மக்களுக்கிடையே பேதங்களை உருவாக்கும் செயற்பாடு இந்த நாட்டுக்கு ஒன்றும் புதியதல்ல. சுதந்திரமடைந்த நாளிலிருந்து இதுதான் இங்கு நடந்து கொண்டிருக்கின்றது. எத்தனையோ தடவைகள் இந்த நாட்டில் இரத்த ஆறு ஓடியபோதிலும், உரியவர்களிடத்தில் மனமாற்றத்தைக் காணமுடியவில்லை. முள்ளிவாய்க்காலின் பின்னராவது இவர்கள் திருந்துவார்கள் என எதிர்பார்த்திருந்தவர்களுக்கு ஏமாற்றமே கிடைத்துள்ளது.

மேலும் வடக்கு மாகாணசபை இயங்குவதற்கும் தனி நாட்டுக்கும் எவ்வித தொடர்புகளும் இல்லை. முதலமைச்சராகப் பொறுப்பேற்கவிருக்கும் சி.வி.விக்னேஸ்வரன் ஒன்றுபட்ட இலங்கையின் கீழ் தமிழர்களுக்கு உரிமைகள் வழங்கப்படவேண்டுமென ஏற்கனவே தெரிவித்துள்ள நிலையில் இந்தச் சந்தேகம் நியாயமற்றதாகவே காணப்படுகின்றது. எனவே பெரும்பான்மையின மக்கள் உண்மை நிலையை உணர்ந்து கொள்ள வேண்டும். தம்மைத் தவறான வழிகளில் இட்டுச் செல்பவர்களின் வார்த்தைகளைப் புறம் ஒதுக்க வேண்டும். இல்லையேல் இந்த நாடு பாரதூரமான விளைவுகளை எதிர்கொள்ள நேரிடும்.

### அமைச்சர்களை நியமிப்பதில் இழுபறி, மக்கள் அதிருப்தி

இதேவேளை, வடமாகாண சபைக்கான அமைச்சர்களை நியமிப்பதில் நிலவும் இழுபறி நிலை, பல்வேறு இன்னல்களுக்கு மத்தியில் வாக்களித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வெற்றிக்கு வித்திட்ட தமிழ் மக்களுக்கு கடும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது. கட்சித் தலைவர்கள் தாம் விரும்பியவர்களுக்கே அமைச்சர் பதவி வழங்க வேண்டுமென ஒற்றைக் காலில் நிற்பதால், இந்த நிலை தோன்றியிருப்பதாகத் தகவல்கள் கசிந்துள்ளன. ஈழத் தமிழர்கள் ஒற்றுமையாக இணைந்து நிற்கின்றனர் என்ற கருத்தை இந்த இழுபறி நிலை சிதைத்து விடுமோ என்ற அச்சமும் மக்களிடையே ஏற்பட்டுள்ளதை அவதானிக்க முடிகின்றது.

ஒரு மாகாண சபையின் சிறிய தொகையினரான அமைச்சர்களை நியமிப்பதில் ஓர் இணக்கப்பாட்டுக்கு வர முடியாத இவர்கள், எதிர்காலத்தில் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு எவ்வாறு தீர்வு காணப் போகின்றார்கள் என்ற கேள்வியும் மக்களிடையே எழுந்துள்ளது. எனவே இனியும் காலத்தை விரயம் செய்யாது ஆக்கபூர்வமானதொரு முடிவை எடுக்க வேண்டிய அவசியம் இப்போது தோன்றியுள்ளது. இது தவறவிடப்படுமேயானால் தமிழ் மக்களின் மனங்களில் ஏற்படக் கூடிய மாற்றங்களை எம்மைப் படைத்த இறைவனால் கூட தடுத்து நிறுத்த முடியாது என்பதுதான் யதார்த்தமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடேசு தயாளன் (அதிபர்)

# மகத்தானது ஆசிரியத்துவம்

மாணவர்களுக்கு ஒழுங்கமைந்த முறையில் அறிவைப் புகட்டுபவரே ஆசிரியராவார். கல்வித்தர உறுதிப்பாட்டுக்கும், கல்விக் கொள்கைகளை வினைத்திறனான முறையில் நடைமுறைப்படுத்துவதற்கும் ஆசிரியரது பங்களிப்பு இன்றியமையாததாகும். ஆசிரியரது அர்ப்பணிப்பு மனோபாவம், ஆளுமைத்திறன், அவருடைய புலமைச் சுமை, பாடசாலையில் அவர் பெற்றுக்கொண்டுள்ள முக்கியத்துவம் என்பன ஓர் ஆசிரியர் தொடர்பான புலக்காட்சியை ஏற்படுத்தும் காரணிகளாகும். பாடசாலை என்பது பிள்ளையினது நடத்தைப் பாங்கினையும் எதிர்காலக் கல்வியின் வெற்றி வாய்ப்புக்களையும் ஒழுங்கமைக்கும் தன்மையுடையதாகும். அந்தச் செயன்முறையை வெற்றிகரமாக முன்னெடுக்க வேண்டுமானால் விளைதிறன் மிக்க ஆசிரியர் சமூகமொன்று வளர்த்தெடுக்கப்படுதல் அவசியமாகும். ஒவ்வொரு நிலைக்குமுரிய தேர்ச்சிகளை அளவு ரீதியிலும், பண்பு ரீதியிலும் விருத்தி செய்து கொள்ளும் ஆசிரியரே விளைதிறனுடைய ஆசிரியராவார். அவர் தான் உருவாக்கிக் கொண்ட சகல குறிக்கோள்களையும் உயரிய மட்டத்தில் அடையும் திறனுடையவராகவும் விளங்குவார்.

பாடசாலை என்ற சமூக நிறுவனமானது, மாணவர்களை மையப்படுத்தியதான கற்றல் கற்பித்தல் செயற்பாட்டுடன் மாணவர்களது சமூகமயப்படுத்தல் செயற்பாட்டுக்கும் பங்காற்ற வேண்டும். இதற்கு ஆசிரியரானவர் தொழில்சார் செயற்பாடுகளுடன் சமூகத்தின் எதிர்பார்ப்புக்களுக்கும் ஏற்ற வகையில் செயலாற்ற முன்வருதல் அவசியமாகும். இதற்காக ஒவ்வொரு ஆசிரியரும் ஆசிரியத்துவம் தொடர்பான எதிர்பார்ப்புக்கள், அது தொடர்பிலான சமூக எதிர்பார்ப்புக்கள் பற்றியும் அறிந்திருத்தல் அவசியமாகும்.

பூரண மனிதனை உருவாக்குவதற்கு அவசியமான சமநிலை ஆளுமை வளர்ச்சியுடன் சமூக அபிவிருத்தியின் அடையாளமாகவும் விளங்கக்கூடிய சமூகமொன்றை உருவாக்குவதற்கு வேண்டிய வழி காட்டுதல்களையும் ஆலோசனைகளையும் வழங்குபவராகவும் முன்மாதிரியான நடத்தைப் பாங்குடையவராகவும் அவர் விளங்குதல் அவசியமாகும்.

ஆசிரியர் பிள்ளையிடம் நேரானதும் எதிரானதுமான நடத்தைப் பாங்குகளை காவிச் செல்பவராக விளங்குகின்றார். ஆசிரியர்கள் தமது தொழிலை நேசிப்பதன் மூலமே சிறந்த செயற்றிறனினை விருத்தி செய்து கொள்ள முடியும். பிள்ளைகளுக்கான சிறந்த சூழலையும் கட்டியெழுப்ப முடியும். ஆசிரியர்கள் பிள்ளைகள் இரண்டாம் நிலைப் பெற்றோராகவும் விளங்குகின்றனர். ஏனெனில் வீட்டுக்கு அடுத்ததாக அதிக நேரத்தைப் பிள்ளைகள் பாடசாலையிலேயே செலவிடுகின்றனர். உண்மையிலேயே சிறந்த ஆசிரியர்களானவர்கள் நீண்டகால அனுபவங்களூடாகவே கட்டியெழுப்பப்படுபவர்களாகவுள்ளனர். இவ்வாறான ஆசிரியர் எவ்வாறு உளவியல் தத்துவ விதிமுறைகளை வகுப்பறைகளில் கையாள வேண்டும் என்பதனைத் தெரிந்தவராக இருப்பதோடு அதனைப் பயன்படுத்தக்கூடிய நிலையிலும் உள்ளமையினால் வகுப்பறைகளில் அமைதி நிலையை உருவாக்க அவரால் முடிகின்றது. ஆசிரியரானவர் அதிகளவிலான வகைகூறலுக்கு உட்பட்டவராகவுள்ளார். ஏனெனில் மாணவர்கள் அவர்களில் தங்கி வாழ்பவர்களாகவே வகுப்பறைகளில் உள்ளனர். ஆசிரியரது கோபமும், மகிழ்வும் மாணவரிடையே தாக்கத்தினை உண்டு பண்ணுகின்றது. ஏனெனில் மாணவர்களிடையே சமூக நடத்தையைக் கட்டியெழுப்புபவர்களாக ஆசிரியர்கள் உள்ளமையே இதற்கான காரணமாகும்.

ஆசிரியரானவர் உன்னதமானதும் வெளியீட்டினை ஏற்படுத்தக் கூடியதுமான சமூகச் சூழலைக் கட்டியெழுப்புபவராக விளங்குதல் வேண்டும். சிறந்த ஆசிரியரானவர் ஒவ்வொரு மாணவர்களதும் நம்பிக்கையின் பங்காளியாக விளங்குவார். தமது மாணவர்கள் தொடர்பான தகவல் தெரிந்தவராக ஆசிரியர் விளங்குவதோடு, ஒவ்வொரு நாளும் மாணவர்கள் அறியாத புதிய மனப் பாங்குகளை மாணவர்களுக்குக் கற்றுக் கொடுப்பவராகவும் விளங்குதல் வேண்டும். வகுப்பறையில் இடம்பெறும் கற்பித்தலினால் பிள்ளைகள் கவரப்படுவார்களாயின், விரைவாகக் கற்கக்கூடிய நிலையும் உருவாகும். இதனைக் கருத்தில் எடுத்துச் செயற்படும்போதே கற்றல் கற்பித்தல் வெற்றியடையும். ஆசிரியர்கள் மாணவர்களுக்கு உரிய அந்தஸ்து நிலையினைப் பெற்றுக் கொடுக்க வேண்டும். அப்போதுதான் ஆசிரியருக்கு மதிப்புக் கொடுக்கும் நிலையும் மாணவரிடம் உருவாகும். வேறுபட்ட மாணவர்கள், வேறுபட்ட பாரம்பரியங்கள் பழக்க வழக்கங்கள் உடையவர்கள் என்பதனை இந்த இடத்தில் ஆசிரியர்கள் கருத்திற் கொள்வது அவசியமானதாகும்.

ஆசிரியர்கள் திறந்த மனமுடையவர்களாக இருக்க வேண்டியது அவசியமானது ஆகும். அப்போதுதான் மாணவர்களது பல்வகைமையினைப் புரிந்து கொண்டு, அவர்களது மனப்பாங்குகளையும் வளர்த்துக்கொள்ள முடியும் என்பதோடு மாணவர்களுடனான முரண்பாடுகளையும் தவிர்த்துக் கொள்ள முடியும். மாணவர்களது உணர்வு நிலைகள் எவ்வாறு உள்ளன. என்பது தொடர்பில் ஒரு நல்லாசிரியரின் கவனம் இருத்தல் அவசியமானதாகும். மாணவர்களது உணர்வு நிலைகள் தொடர்பில் ஆசிரியர்கள் முன்னுரிமை கொடுத்தல் அவசியமாகும்.

ஆசிரியரானவர் பிள்ளைகளது ஆக்கத்திறன்களை இனங்கண்டு பாராட்டுவதோடு அந்தத் திறன்களை விருத்தியடையச் செய்வதற்கான செயன்முறைகளை முன்னெடுப்பதனூடாக ஆக்கத்திறனுள்ள சமூகத்தினை உருவாக்கும் செயன்முறையின் பங்காளியாக தன்னைக் காட்சிப்படுத்த முடியும். பிள்ளையின் ஆக்கத்திறனை வளர்த்தெடுக்க முற்படும் போது, வகுப்பில் முன்னணியிலுள்ள மாணவர்களை மட்டுமல்லாது ஏனைய மாணவர்களையும் கருத்திற்கொண்டதாகவே செயற்றிட்டங்களை முன்னெடுத்தல் அவசியமானதாகும். பிள்ளைகளிடம் பொறுப்புக்களைப் பிரித்துக் கொடுக்கும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும், ஓர் சீரான சுற்றோட்டச் செயன்முறையைப் பின்பற்றுதல் அவசியமாகும். இவ்வாறு செய்வதன் மூலம் தனிநபர்களுக்கிடையிலான உறவு நிலை வலுப்பெறுவதோடு பிள்ளைகளிடம் ஆர்வம் தூண்டப்படுவதற்கும் வாய்ப்பினை வழங்கி பிள்ளைகள் வகுப்பறையில் ஒதுங்கி இருக்கும் நிலையும் தவிர்க்கப்படும்.



உளரீதியான, உடல் ரீதியான தண்டனைகள் மாணவர்களது தனித்துவ நிலையில் தாக்கத்தினை உண்டுபண்ணும் என்பதால், அவற்றை மேற்கொள்வதனைத் தவிர்த்துப் பல்வேறு தந்திரோபாய உத்திகளூடாக மாணவர்களை நெறிப்படுத்துவதற்கு ஆசிரியர்கள் தம்மைத் தயார்ப்படுத்துதல் வேண்டும். ஏனெனில் தேவையற்ற வேளையில் வழங்கப்படும் தேவையற்ற தண்டனைகள், மாணவர்களிடையே தேவையற்ற விளைவுகளை உண்டுபண்ணுவதால் இது தொடர்பில் கூடிய கவனம் செலுத்தப்படுதல் அவசியமாகும்.

இன்றைய உலகில் சிறியோர் முதல் பெரியோர் வரை மன அழுத்தத்துக்குள்ளான நிலையில் வாழ்வதால், வகுப்பறையில் மன அழுத்தத்துக்கு உள்ளாகும் பிள்ளையையோ, பிள்ளைகளையோ இனங்காணலும் அவர்களது மன அழுத்தத்துக்கான காரணிகளை இனங்கண்டு அதனை இல்லாது செய்வதற்கு முன்வருவதன் மூலம் சிறந்த ஆரோக்கியமான சமூகத்தினைக் கட்டியெழுப்பும் சிற்பியாக ஆசிரியர் தம்மை இனங்காட்ட முடியும். இதனூடாகப் பிள்ளை, சமூகத்தில் ஆரோக்கியமான பிரசையாகவும் தன்னுடைய தனி அடையாளத்தைச் சமூகத்தில் வெளிக்காட்டுவதற்குமான சரியான வழிகாட்டுதல்களை ஆசிரியர்கள் வழங்குதல் வேண்டும்.

ஆசிரியத்துவம் என்பது மிகவும் மதிப்புடையதாகும். தொழில் ரீதியான தகுதியான உறவுக் கோலத்தினைக் கட்டியெழுப்புதலானது, ஆசிரியத்துவத்துக்குப் பெருமை சேர்ப்பதாக இருக்கும். அந்த வகையில், ஆசிரியர் ஒரு வாண்மையாளராக, அறிவுறுத்துநராக, வழிகாட்டியாக, நண்பனாக, தலைமைத்துவப் பாங்குடையவராக, ஊக்குவிப்பாளராக, நெறிப்படுத்துநராக, மதிப்பீட்டாளராக, சமநிலை ஆளுமை இயல்புடையவராக, விளங்குதல் வேண்டும். இதனூடாகவே மாணவர்களது நலனை மையமாகக் கொண்ட ஓர் உன்னத ஆசிரியராக சமூகத்தில் விளங்க முடியும்.

---

# முதுமையின் திறவுகோல்



முதியவர்களின் பிரச்சினைகள் அதிகரிக்கப்போகின்றன. இதன் விளைவாக குடும்பங்களில் சிக்கல்கள் தோன்றப்போகின்றன. இவற்றை எதிர்கொள்ள இந்த விடயங்களை உள்வாங்கப் போகின்றோமா?

த.கிருபாகரன்,
அத்தியட்சகர்,
அரச முதியோர் இல்லம், கைதடி.

முதியவர்கள் இன்று எமது நாட்டில் மிகுந்த பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றார்கள். சனத்தொகையின் பரிணாம வளர்ச்சியும் சவாலாகி வருகிறது. இதில் முதியோரின் சதவீதம் கணிசமான இடத்தை பெறுகின்றது. இந்த நிலையில் முதியவர்களின் சேவைகளை மேம்பாடு அடையச் செய்வதும், முதியவர்களின் பராமரிப்புச் சேவையை வினைத்திறனாக்குவதும் காலத்தின் தேவையாக உள்ளது. சமூகத்தில் வைத்தே முதியவர்கள் பராமரிக்கப்பட வேண்டும் என்ற எடுகோளின் அடிப்படையில், இத்துறைசார் வல்லுநர்களின் கருத்துக்கள் பரிமாறப்பட்டன. அதன் உண்மைத்தன்மைகள் அனுபவங்களினூடாக உய்த்துரைக்கப்பட்டன. இவற்றை இங்கு பகிர்ந்து கொள்வதும், இவற்றை உள்வாங்கிச் செயற்படுத்துவதும் எம் ஒவ்வொருவரின் கடமையும் பொறுப்புமாகும்.

முதியவர்களில் சகலருக்கும் பராமரிப்புசேவை தேவைப்படுகின்றது. தனிக்குடும்ப வாழ்க்கை முறையில் இத் தேவையை நிறைவேற்ற குடும்பங்கள் சிரமப்படுகின்றன. வசதி யான குடும்பங்கள் முதியோர் பராமரிப்பு சேவைத் தொண்டர்கள் மூலமாக இதை பூர்த்தி செய்து கொள்ளலாம். வறுமை நிலையில் வாழ்பவர்களுக்கு முதியோர் இல்லங்கள் உதவுகின்றன. இதைவிட முதியோர் சங்கங்கள், முதியோர் பகல் நிலையங்கள், யாழ். மாவட்ட மூத்த பிரஜைகள் பேரவை போன்ற சமூகக் கட்டமைப்புகள் பல வீனமாக உள்ளன. இவற்றை வலுப்படுத்துவதன் மூலம் இத்தகைய தீர்வுகளுக்கான தேடலில் விடியலை ஏற்படுத்தலாம்.

முதியோர்களுக்கான சேவைகள் தொடர்பில் சமூகசேவைத் திணைக்களத்தால் பொதுசன மாதாந்த உதவிப் பணம் 70 வயதின் மேல் விசேட திட்டத்தில் மாதாந்தம் 1000 ரூபா மற்றும் மாற்றுவலுவுள்ளோருக்கான உபகரணங்கள் முதியோர் அடையாள அட்டை சேவைகளில் முன்னுரிமை பெறுவதற்காகவென நலன் புரிப் பணிகள் வறிய முதியவர்களுக்காக ஏற்படுத்தப்பட்டுள்ளன. அத்தோடு நிர்க்கதியான நிலையில் வாழும் முதியவர்களுக்கு தோள் கொடுக்கும் அரச முதியோர் இல்லம் என இவை தொடர்கின்றன. இலங்கை வங்கி, ஹற்றன் நஷனல் வங்கி போன்றவற்றில் 55 வயதின் மேல் வைப்புகளுக்கு விசேட வட்டியும் ஏனைய வங்கிகளில் 60 வயதின் மேல் விசேட வட்டியும் என திட்டங்கள் உள்ளன. போக்குவரத்துப் பேருந்துகளில் இட ஒதுக்கீட்டுக்கான ஏற்பாடுகள் கொள்கையளவில் உள்ளன. இங்கும் முதியோர்களுக்கான சேவைகள் தொடர்பில் விழிப்புணர்வின்மை இடைவெளியாக உள்ளது. இதை நிரப்பும் பொறுப்பு ஒவ்வொரு பொது மகனிடமும் உள்ளது.

முதியவர்களின் பிரச்சினைகளுக்கு முதியோர் பகல் நிலையங்கள் சிறந்த தீர்வாகவுள்ளன. முதியவர்களுக்கு மனஉளைச்சல் குறைகின்றபோது பிரச்சினைகளும் குறையும். பகலில் இத்தகைய நிலையங்களில் ஒத்த வயதினரைச் சந்தித்து வருவது மனஉளைச்சல் நீங்க உதவுகிறது. குடும்பச் சண்டைகளும் யுத்த நிறுத்த உடன்பாட்டுக்கு வருகின்றன. முதியவர்களின் அனுபவங்களும், திறன்களும் சமூகத்துக்கு வலுவூட்ட வல்லனவாக வும் உள்ளன.

யதார்த்தத்தில் முதியவர்கள் மூன்று நிலைகளில் காணப்படுகின்றார்கள். 60 வயதின்மேல் இந் நிலை ஏற்படுகின்றது. முதல் வகையினர், தம்மைத் தாமே கட்டுப்படுத்தி அடக்கி வாசித்து வாழ்பவர்கள். இவர்கள் எங்கும் சுபமாக வாழ்ந்து விடுவார்கள். இரண்டாவது வகையினர், குறைகளை இனங்கண்டு பிரச்சினைகளில் வாழ்வை நிறைத்தவர்கள். இவர்களை இல்லங்களிலோ வீடுகளிலோ வைத்திருப்பது மிகுந்த சவாலானது. மூன்றாவது வகையினர், பிறரை உருவகப்படுத்தி கட்டுக் கதைகளைப் புனைந்து, பரப்பி கற்பனையில் வாழ்வார்கள். இவர்கள் மிகுந்த ஆபத்தானவர்கள். மற்றவர்களின் மனதைப் புண்படுத்துவதில் கைதேர்ந்தவர்கள். பிரச்சினைகளின் உருவாக்கத்துக்கு வித்திடுபவர்கள். முதுமையின் குணாங்களாக இவை காணப்படுகின்றன. இங்கு இக்குணாங் களை அனுசரித்து, நிர்வகிக்கும் திறனை முதியோர் சங்கங்கள் முனைப்பாக்குவதில் கரிசனை செலுத்தலாம். முதியவர்களில், பெண் முதியவர்களை சமூகம் அரவணைத்துள்ளமை ஆய்வு ஒன்றின் மூலம் தெரிய வந்துள்ளது. முதியோர் பராமரிப்பு என்பது திருமணத்தின் பின் பிள்ளைகளுக்கு சவால் நிறைந்த ஒன்றாகக் காணப்படுகின்றது.

இந்த நிலையில் முதியவர்களின் சேவை வினைத்திறனுக்கு முதியோர் பராமரிப்புச் சேவைத் தொண்டர்களை உருவாக்கி வைப்பதன் மூலம் சமூகத்திலுள்ள முதியவர்களை பராமரிக்கவும், வைத்தியசாலைகளில் முதியவர்களைப் பராமரிக்கவும் உள்ள தேவைகளை நிறைவாக்கலாம். அத்தோடு வருமானம் தரக்கூடிய பகுதிநேரத் தொழிலாகவும், ஆத்மதிருப்தியுடனான சமூக சேவையாகவும் இதனைச் செய்யலாம். இதன்மூலம் சமூகமயமாக்கலுடன் கூடிய தீர்வை முன்னகர்த்தலாம். கணிசமான தேவை நிலவும் இந்தத் தொழிலுக்கான பயிற்சியை கொழும்புத்துறை, இணுவில் பகுதியிலுள்ள தனியார் முதியோர் இல்லங்கள் வழங்குவதற்கு கொள்கையளவில் ஏற்பாடுகளை செய்துள்ளமையையும் அறிய முடிகிறது.

முதியவர்களின் பிரச்சினைகள் அதிகரிக்கப்போகின்றன. இதன் விளைவாக குடும்பங்களில் சிக்கல்கள் தோன்றப்போகின்றன. இவற்றை எதிர்கொள்ள இந்த விடயங்களை உள்வாங்கப் போகின்றோமா? அல்லது நமக்கென்ன என்று ஒதுங்கப் போகின்றோமா? நீங்களே முடிவெடுத்துக் கொள்ளுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நலன்கள் நல்கும் நவராத்திரி

இன்று (05.10.2013) நவராத்திரி விரதம் ஆரம்பமாகிறது. அதனையொட்டி இந்த ஆக்கம் பிரசுரமாகிறது.



சிவனுக்கு உகந்தது சிவராத்திரி. அவர்தம் தேவியர்க்கு உகந்தது நவராத்திரி. நவம்' என்ற சொல்லுக்கு மிகுந்த முக்கியத்துவம் உண்டு. நவ நவமாய் பெருகும்' என்று சான்றோர்கள் கூறுவார்கள். நவக்கிரகங்கள், நவரத்தினங்கள், நவதானியங்கள், நவயோகங்கள், நவரசங்கள், நவபாசாணங்கள், நவகற்பங்கள், நவமேகங்கள், நவநிதிகள் என ஒன்பதின் பெருக்கத்தை விசேஷமாகக் கூறுவார்கள். அந்த வகையில், நாடு முழுவதும் ஒன்பது நாள்களுக்கு விமரிசையாகக் கொண்டாடப்படும் நவராத்திரி பண்டிகை இந்துப் பண்டிகைகளுள் சிறப்பானதாகக் கருதப்படுகிறது. புரட்டாசி மாதம் அமாவாசைக்கு பின்னர் வரும் பூர்வ பட்ச பிரதமைத் திதியில் ஆரம்பித்து நவமித் திதியில் முடிவடையும் ஒன்பது இரவுகளே நவராத்திரி ஆகும்.

நவராத்திரி தினத்தில் முதல் மூன்று நாள்கள் வீரத்தை வேண்டி துர்க்கா தேவியையும், அடுத்த முன்று நாள்கள் செல்வத்தை வேண்டி இலக்குமியையும், இறுதி முன்று நாள்களும் கல்வியை வேண்டி சரஸ் வதியையும் வழிபடுவர்.

நவராத்திரி பண்டிகை முடிந்து வரும் தசமித் திதியை விஜயதசமி' என்று கொண்டாடி நவராத்திரி விரதத்தை நிறைவு செய்கிறோம். பிரதமை, அஷ்டமி, நவமி ஆகிய திதிகளை சுபகாரியங்கள் செய்ய விலக்கி வைக்கிறோம். அந்தத் திதிகளையும் சிறப்பிப்பதற்காகவும், சகல திதிகளிலும் இறைவனது அம்சம் உள்ளது என்பதை உணர வைப்பதற்காகவும், நவராத்திரியில் இந்தத் திதிகளுக்கு முக்கியத்துவம் தரப்பட்டுள்ளது. நவராத்திரியில் வரும் நவமி நாள் ஆயுத பூஜை என்றும் சரஸ்வதி பூஜை என்றும் கொண்டாடப்படுகிறது. மாணவர்கள் புத்தகங்கள், கொப்பி, பேனா, பென்சில் போன்றவற்றை வைத்து வணங்குவார்கள். கடைகள், அலுவலகங்கள், தொழிற்சாலைகள் என்று தொழில் துறைகளில் இருப்பவர்களும் ஆயுத பூஜையை விமரிசையாகக் கொண்டாடுவார்கள். நவராத்திரியில் வரும் தசமி நாள் விஜயதசமி எனக் கொண்டாடப்படுகிறது. இந்நாளில் தொடங்கப்படுகின்ற எந்த முயற்சியும் வெற்றி கரமாக முடியும் என்பது ஐதீகம். இந்நாளில் ஞானம், வித்தை, கல் விக்கு அதிபதியான சரஸ்வதி தேவியை வணங்குவதால் சகல வளங்களும், நலமும் வந்து சேரும். இந்நாளில் கல்வி கற்றலை ஆரம்பிக்கவும், புதுக் கணக்கு ஆரம்பிக்கவும், முக்கிய பேச்சு வார்த்தைகள், ஒப்பந்தங்கள் செய்வதற்கும் இயல், இசை, நாடகம், நாட்டியம் போன்ற கலைகள் விருத்தியடைய வழிபடுவதும் மிகவும் உகந்ததாகும். நவராத்திரி என்பது நமது பண்பாடு, கலை, கலாசாரம் போன்றவற்றை பிரதி பலிக்கும் விழாவாகத் தொன்று தொட்டு நிலவி வருகிறது. இது முக்கியமாக பெண்களை முன்னிறுத்திக் கொண்டாடப்படும் பண்டிகையாகும்.

சக்தி தேவியான அம்பாளைப் பிரார்த்தித்து, அவள் அருள் வேண்டி ஒன்பது இராத்திரிகள் விரதம் இருந்து வணங்குவதே இதன் சிறப்பு. இச்சா சக்தி, ஞானாசக்தி, கிரியா சக்தி (இச்சை என்றால் விருப்பம், ஞானம் என்றால் அறிவு, கிரியா என்றால் செய்தல்) என்ற முப்பெரும் தேவிகளை வணங்குவதே நவராத்திரியின் சிறப்பாகும்.

தாரணி

# கணினி பொறியியலாளராக வரவேண்டும் இதுவே எனது ஒரே இலட்சியம்

## தென்மராட்சி கல்வி வலயத்தில் முதலிடம் பெற்ற மாணவன்



தென்மராட்சி, ஒக்.5

வகுப்புகளில் சொல்லித் தருபவற்றை வீட்டில் மீட்டுப் பார்த்து உரிய விளக்கங்களைப் பெற்றதால் பிரதேசத்தில் அதிகூடிய புள்ளிகளைப் பெறமுடிந்தது. பிரபல ஆசிரியர்களால் வெளியிடப்பட்ட கைநூல்களும் எனக்குப் பெரிதும் உதவின.

இவ்வாறு தென்மராட்சி கல்வி வலயத்தில் ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் 190 புள்ளிகளைப் பெற்று வலய மட்டத்தில் முதலிடத்தையும் யாழ்.மாவட்ட மட்டத்தில் நான்காம் இடத்தையும் பெற்ற சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை மாணவன் ரவிக்குமார் தவினுகன் தெரிவித்தார்.

சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலையில் தரம் ஒன்று தொடக்கம் கற்று வருகிறேன். மாணவர்களின் கல்வி நிலையில் அர்ப்பணிப்புடன் சேவையாற்றும் பாடசாலை அதிபர் ஆசிரியர்களின் சேவையை மறக்க முடியாது. கடந்த வருடம் தொடக்கம் இந்த வருடம் பரீட்சை நடைபெறும் நாள் வரை ஒவ்வொரு மாணவ ரையும் உரிய முறையில் கவனித்து ஊக்குவித்து கற்பித்த ஆசிரியைகளுக்கும் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன். அத்துடன் எமது கல்வி வளர்ச்சியில் அக்கறை கொண்டு மாலை நேர வகுப்புகளை நடத்திய ஓய்வு பெற்ற ஆசிரிய ஆலோசகர் க.சர்வேஸ்வரன் அவர்களுக்கும் எம்மை ஊக்குவித்த ஆசிரியர் க.தவயோகராசா அவர்களுக்கும் என்றென்றும் நன்றியுடையவனாக இருப்பேன். இவர்களின் ஒட்டு மொத்த அர்ப்பணிப்பான சேவையினால் இந்தப் பாடசாலையில் 31 மாணவர்கள் பரீட்சையில் சித்தி பெற்றுள்ளதுடன் பல மாணவர்கள் வெட்டுப் புள்ளியை அண்மித்த புள்ளிகளையும் பெற்றுள்ளனர். வீட்டில் பாடத் திட்டம் தொடர்பான சந்தேகங்களுக்கு உரிய வகையில்விடையளித்து எனக்கு ஊக்க மளித்தவர்கள் எனது பெற்றோரும், சகோதரர்களுமே.

எதிர்காலத்தில் கணினிப் பொறியியலாளராகவர வேண்டும்என்பதே எனது இலட்சியமாகும்- என்றார். (ந-9)

# விஞ்ஞான வினாடி வினா போட்டி முடிவுகள்

வடமராட்சி, ஒக்.5

வடமராட்சி கல்வி வலய பாடசாலை மாணவர்களுக்கு இடையேயான விஞ்ஞான வினாடி வினா போட்டியில் தமிழ் ஆங்கில மொழி மூலமான மாணவர்களில் முதல் மூன்று இடங்களையும் பெற்றவர்களின் விவ ரம் வருமாறு:

**தமிழ் மொழி மூலம்**

**தரம் -6:** 1ஆம் இடம் - யோ.கஜனிகா (உடுப்பிட்டி மகளிர் கல்லூரி), 2 ஆம் இடம்- அ.அர்ச்சனா (வெற்றிலைக் கேணி பரமேஸ்வரா வித்தி.), 3 ஆம் இடம்- ர.சாணுஜா (உடுப்பிட்டி மகளிர் கல்லூரி).

**தரம் -7:** 1 ஆம் இடம் -சு.பிரணவன் (ஹாட்லிக் கல்லூரி), 2ஆம் இடம் -கா.அபிஷா (உடுப்பிட்டி மகளிர் கல்லூரி), 3ஆம் இடம் - பூ.நிரூஷா (மெதடிஸ்த பெண்கள் உயர் தரப் பாடசாலை).

**தரம் -8:** 1 ஆம் இடம் -சி.கோகுலன் (ஹாட்லிக் கல்லூரி), 2 ஆம் இடம் - ர.ஆர்த்திகா (வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி), 3 ஆம் இடம் -சி.சாரங்கன்(ஹாட்லிக் கல்லூரி).

**தரம் -9:** 1 ஆம் இடம் -சி.கோசலா (மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை), 2 ஆம் இடம் - வி.ஜதுஷன் (ஹாட்லிக் கல்லூரி), 3 ஆம் இடம்- சி.சிவதர்ஷன் (ஹாட்லிக் கல்லூரி).

**தரம் - 10 :** 1ஆம் இடம் - பு.கனி மருதன் (ஹாட்லிக் கல்லூரி), 2 ஆம் இடம் -அ.தவேந்திரன் (நெல்லியடி மத்திய மகா வித்தி), 3 ஆம் இடம் - சி. நிதர்சனா (விக்னேஸ்வரா கல்லூரி).

**தரம் - 11:** 1 ஆம் இடம்- எஸ்.சுபவாசினி (வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி), 2 ஆம் இடம் -சி.சிவகரன் (ஹாட்லிக் கல்லூரி), 3 ஆம் இடம் -சி.ஷோபிகா (மெதடிஸ்த பெண்கள் உயர் தரப் பாடசாலை).

**ஆங்கில மொழி மூலம்**

**தரம் -6:** 1 ஆம் இடம் - ஜெ.சயந் (ஹாட்லிக் கல்லூரி), 2 ஆம் இடம்- க.கஜந்தன் (ஹாட்லிக் கல்லூரி), 3 ஆம் இடம்- ரா.மாதுமை (மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை).

**தரம் -7:** 1 ஆம் இடம் -செ.கம்சாயினி (வட இந்து மகளிர் கல்லூரி), 2ஆம்இடம்ரா.விவேகா (நெல்லியடி மத்திய மகா வித்தி.), 3ஆம் இடம் - ஸ்ரீ.ஆரணன் (ஹாட்லிக் கல்லூரி).

**தரம் -8:** 1 ஆம் இடம் -கு.மாதங்கி (மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை), 2 ஆம் இடம் - கு.மாலன்பன் (ஹாட்லிக் கல்லூரி), 3 ஆம் இடம் -நி.விதுஷன் (ஹாட்லிக் கல்லூரி).

**தரம் -9:** 1ஆம் இடம் - ஜெ.மிதுர்ஷன் (ஹாட்லிக் கல்லூரி), 2 ஆம் இடம் - கு.நிதுஷா (மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை), 3ஆம் இடம் - பு.தயாபரன் -(ஹாட்லிக் கல்லூரி).

**தரம் -10 :** 1 ஆம் இடம் - கு.மாதுமை (மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை), 2 ஆம் இடம் -பு.துளசிகா (மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை), 3 ஆம் இடம் - வி.ஜானகி (வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி).

**தரம் - 11:** 1 ஆம் இடம்- ச.கஜானன் (ஹாட்லிக் கல்லூரி), 2 ஆம் இடம் - உ.சகானா (வட இந்து மகளிர் கல்லூரி), 3 ஆம் இடம் -ர.நிரோஜன்(ஹாட்லிக் கல்லூரி). (ந-422)

# தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை பெறுபேறுகள்

யாழ்ப்பாணம், ஒக்.5

தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைப் பெறுபேறுகள் கடந்த செவ்வாய்க்கிழமை பரீட்சைத் திணைக்களத்தால் உத்தியோக பூர்வமாக வெளியிடப்பட்டன. அதனடிப்படையில் பாடசாலை அதிபர்களால் அனுப்பி வைக்கப்பட்ட பரீட்சை பெறுபேறுகளின் விவரம் வருமாறு:-

**இளவாலை மாரீசன்கூடல் றோ.க.த.க.பாடசாலை**
நே.அன்ரனி றெபேட்-166, ப.டிசாந்தன்-162.

**யாழ்ப்பாண மத்திய கல்லூரி**
உ.ஜெனீஸ்ரன்-173, ர.மாதுளன்-172, சூ.கலையினியன்-169, ந.கவிஷன்-168, ஜீ.பிரணவன்-167, பா.தாருயன்-163, ஜெ.சாகித்தியன்-162, குதனஞ்சியன்-161, கோ.சுஞ்சை -160, அ.கௌரிசங்கர்-160, வ.வஜீகரன்-159, த.கௌசிகன்-158, உ.தர்மிகன்-155, ரா.கிருபாகரன்-155, வ.அபி ஷேக்-154.

**சென்.ஜேம்ஸ் றோ.க. மகளிர் வித்தியாலயம்**
ரா.சாளிக்கா-164.

**வவுனியா ஆண்டியா புளியங்குளம் முஸ்லிம் வித்தியாயலம்**
மொஹமட் ஹனீபா அன்பாஸ்-167, அஜ்மல் அன்பஸா-165.

**கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலயம்**
கை.பிருதுவி-18[illegible], ம.மதுரா-179, அ.அபிரா-178, பு.ரிலக்ஷிகா-177, எஸ்.ரமணிதன்-176, சு..கம்சிகா-175, இ.ஷாளினி-174, மு.சாருகா-172, இ.நிசானி-171, நி.பிரியங்கா-170, ஜே.கவிராஜ்-170 சி.சங்கீதா-169, சி.மோகனதாஸ்- 168, சி.புஸ்பாகர்-164, அ.அபிலசா-164, ந.பிருந்தன்-162, ஸ்ரீ.பதஞ்சலி-161, தெ.திவிசன்-161, சி.அபிநயன்-157, பா.திவிந்திரன்-155

**குடத்தனை கரையூர் அ.மி.த.க.பாடசாலை**
சி.விதுஷிகா-179.

**உடுத்துறை இந்து ஆரம்பப் பாடசாலை**
ஜெ.நபிகா-159.

**மருதங்கேணி இந்து தமிழ்க் கலவன் பாடசாலை**
த.சங்கவி-163.

**வெற்றிலைக்கேணி றோமன் கத்தோலிக்க த.க.பாடசாலை**
பெ.லோஜிதன்-173.

**கட்டைக்காடு றோமன் கத்தோலிக்க த.க.பாடசாலை**
மை.மேரிஜெரினா-154.

**ஆழியவளை சி.சி.த.க. பாடசாலை**
பி.சுஜிந்தா-164, ஜெ.சதுஜிதா-158, த.இளஞ்சுடர்-157.

**அம்பன் அ.மி.த.க. பாடசாலை**
கே.விபுதா-165, சி.கோபினி-162, பு.சதுர்ஷன்-159.

**கற்கோவளம் மெ.மி.த.க. பாடசாலை**
ம.சர்மிலா-163, நீ.அமிர்தறக்ஷன்-158.

**பருத்தித்துறை சித்தி விநாயகர் வித்தியாலயம்**
ஜெ.கானல்அழகி-189, சு.மிதுன்ராஜ்-180, இ.விவேகன்-179, வி.சாகித்தியன்-179, ந.அனுஷன்-176, வ.மதுஷன்-171, க.மிதுர்சன்-163, பி.புவிராஜ்- 160, ட.அபிதா-159, ப.பவிதரன்-155.

**புலோலி மெ.மி.த.க. பாடசாலை**
கை.தருணியா-180, செ.விதுர்சியன்-171, ச.ஜெரோமின்-165.

**திக்கம் சித்தி விநாயகர் வித்தியாலயம்**
சு.தக்ஷா-159, ம.மரினா-158, ச.நிஷாந்தன்-155.

**கிளிநொச்சி மத்திய ஆரம்ப வித்தியாலயம்**
ம.பவித்திரன் -188 (மாவட்ட நிலை 1), சு. சுவர்சனா- 186 (மாவட்ட நிலை 3), அ.அலெக்ஸ்-184, வி.சங்கீதா-183, வி.யோகடிலக்சிகா-180, க.மேதகையன்-177, சா.சஞ்சீபன்-172, சி.யாழ்மறவன்-170, கி.டானியல் குமணன்-169, ப.அபிலாஸ்-164, இ.லினுர்ஜன்-161, கு.தனுர்ஜன்-161, தி.தீபிகா -161, த.அருள்வெட்சி-158, கு.கபிசா-158, ஆ.புவனலோஜினி- 157, சி.தமிழருவி-157, க.நற்கீரன்-157, சி.சோலைப் பிரியன்-156, தோ.டிலக்சன்- 155, ஜே.ஹேதுசா-155, லோ.கீர்த்தனா-155, பி.றம்மியலக்ஸ்மி-153.

**கைதடி குருசாமி வித்தியாலயம்**
பா.அபிசாந்-186, வ.அபிநதா -174, ம.திருமாறன்-164.

**வரணி வடக்கு அ.த.க. பாடசாலை**
வ.நிரோஜன்-161.

**கட்டைவேலி ஞானசாரியார் கல்லூரி**
கி.லதுர்சன்-188, க.நிதர்சன்-154.

**தம்பசிட்டி மெ.மி.த.க. பாடசாலை**
இ.ரஜீவன்-167, சி.திருத்தணிகன்-167, ம.சிந்துஜன்-163, இ.விதுஷன்-162, கு.கனிகா-160, க.சிவராஜினி- 155, சோ.கார்த்திகாயினி-154.

**அல்வாய் வடக்கு றோ.க.த.க.பாடசாலை**
ரா.ரவிராஜ்-158.

**கொற்றாவத்தை அ.மி.த.க.பாடசாலை**
சி.தாட்சாயினி-171.

(ந-51-9-8-405-10)



தரம்-5 புலமைப் பரிசில் பரீட்சையில் மன்னார் மாவட்ட மட்டத்தில் 185 புள்ளிகளுடன் முதலிடம் பெற்றுக் கொண்டார் நடராஜா அருண். அருண் மன்னார் சித்தி விநாயகர் இந்து தேசியப் பாடசாலை மாணவன். நேற்றைய உதயனில் 9 ஆம் பக்கத்தில் வெளியான செய்தியில் அருணின் படம் மாறி வெளி வந்து விட்டது. தவறுக்கு வருந்துகின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பம்பைமடுவில் அகற்றப்பட்டது இந்து ஆலயம்

வவுனியா.ஒக்.5

வவுனியா பம்பைமடுப் பகுதியில் அமைந்திருந்த இந்து ஆலயம் ஒன்று அகற்றப்பட்டுள்ளதால் மக்கள் கடும் அதிருப்தியில் உள்ளனர்.

வவுனியா பம்பைமடுப் பகுதியில் அமைந்துள்ள வீட்டுத்திட்டத்தை அண்மித்துள்ள மரமொன்றின் கீழ் நீண்ட காலமாகவே இந்த இந்து ஆலயம் அமைந்திருந்தது. தற் போது திட்டமிடப்பட்ட வகையில் சில குழுக்களால் அந்த ஆலயம் அகற்றப்பட்டுள்ளது.

அங்கு வைக்கப்பட்டிருந்த சிலைகளையும் காணவில்லை. அந்தப் பகுதியில் குடியேற்றத் திட்டமொன்றுக்கான கட்டடப் பணிகள் இடம் பெற்று வருகின்ற நிலையில் இந்த ஆலயம் அகற்றப்பட்டுள்ளமை மக்கள் மத்தியில் கடும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

திட்டமிடப்பட்ட வகையில் இந்த ஆலயம் அகற்றப்பட்டதானது ஏற்கனவே உரிய சில அதிகாரிகளுக்குத் தெரிய வந்த போதிலும் அதனைத் தடை செய்வதற்கு எவரும் முன்வரவில்லை. மீண்டும் அந்த இடத்தில் அகற்றப்பட்ட ஆலயம் அமைக்கப்படாது எனக் கூறப்படுவதுடன் ஆலயம் அமைந்திருந்த இடம் தற்போது எரியூட்டப்பட்டமையானது இந்து மக்கள் மத்தியில் கடும் விசனத்தை ஏற்படுத்தியுள்ளது. (க-402)

# வவுனியாவில் கடும் வறட்சி; குடிதண்ணீர் தட்டுப்பாடு

வவுனியா.ஒக்.5

தொடர்ந்து நீடிக்கும் கடுமையான வறட்சி காரணமாக வவுனியாவில் பல குடும்பங்கள் பாதிக்கப்பட்டதுடன் குடிதண்ணீருக்கும் தட்டுப்பாடு நிலவி வருகின்றது.

பருவகால மழை பெய்யுமென எதிர் பார்த்து பெரும்போகச் செய்கைக்கென வயல் நிலங்களைப் பண்படுத்திய விவசாயிகள் நெல் விதைப்பை மேற்கொள்ள முடியாத நிலையில் அவஸ்தைப் படுகின்றனர்.



இதேவேளை வவுனியா மாவட்டத்தில் அமைந்துள்ள 24 பெரிய குளங்களில் நீர்மட்டம் குறைவடைந்ததால் கிணறுகள் வற்றிய நிலையில் காணப்படுகின்றன. இதனால் தண்ணீரை தேடி மக்கள் அலைந்து திரிகின்றனர். ஆனால் இவர்கள் நீண்ட தூரம் செல்கின்ற போதிலும் நீரைப் பெற முடியாத நிலையில் காணப்படுகின்றனர்.

இந்த நிலையில் தமக்கு குடிதண்ணீர் விநியோகத்தை மேற்கொள்வதற்கு அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள் முன்வரவேண்டுமென மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதேவேளை குளங்களில் நீர்வற்றியதால் அங்கு காணப்பட்ட மீன்கள் இறந்து வருவதால் குளத்து மீன்களுக்கும் இங்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இதனால் குறைந்த விலையில் குளத்து மீன்களை வாங்கிய வறிய மக்கள் பாதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-402)

# சமையலறை இல்லாத இந்திய வீடுகள்

## நிதி போதாததால் பயனாளிகள் நெருக்கடியில்

அக்கராயன்.ஒக்.5

கிளிநொச்சி மாவட்டம் பச்சிலைப் பள்ளியின் கரந்தாய்க் கிராமத்தில் இந்திய அரசின் நிதியுதவியுடன் அமைக்கப்பட் டுள்ள 50 வீடுகளுக்கு சமையலறை வசதியில்லாததால் அவ் வீடுகளின் பயனாளிகள் சிரமங்களை எதிர்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மேலும் வீடுகளில் புதிதாக சமையலறையை அமைப்பதில் சிரமங்கள் தோன்றியிருப்பதாகவும் தெரியவருகின்றது.



கரந்தாய்க் கிராமத்தில் 102 குடும்பங்கள் வசிக்கின்ற போதிலும் 50 குடும்பங்கள் மாத்திரமே இந்தியாவின் நிதியுதவியுடன் அமைக்கப்பட்ட வீடுகளில் சிரமங்களுக்கு மத்தியில் வாழ்ந்து வருகின்றன.

இதேவேளை இந்த வீடுகளை அமைப்பதற்கென வழங்கப்படும் நிதி போதாததால் வீட்டுப் பயனாளிகள் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (க-18)

# இரண்டு குளங்களை இணைத்து நீர்த்தேக்கம் அமைக்க கோரிக்கை

## புதிய வடமாகாண சபையிடம் விடுத்தனர் மக்கள்

அக்கராயன்.ஒக்.5

கிளிநொச்சி மாவட்டத்தில் அமைந்துள்ள வன்னேரிக்குளத்தையும், தேவன்குளத்தையும் இணைத்து நீர்த்தேக்கமொன்று அமைப்பதற்கு புதிதாகத் தெரிவு செய்யப்பட்ட வடமாகாண சபை முன்னுரிமை வழங்க வேண்டுமென இங்குள்ள மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

வன்னேரிக்குளத்தையும் தேவன் குளத்தையும் இணைத்து நீர் தேக்கம் ஒன்றை உருவாக்குவோம் எனக் கூறப்பட்டபோதிலும் அது நிறைவேறாததால் வன்னேரிக்குளம், ஜெயபுரம் கிராமங்களைச் சேர்ந்த மக்கள் கடந்த பல ஆண்டுகளாக ஏமாற்றப்பட்டு வருகின்றனர்.

வன்னேரிக்குளத்தின் கீழ் 400 ஏக்கர் நிலப் பரப்பில் நெற் செய்கை இடம் பெற்று வருகின்றது.

இந்த இரு குளங்களின் இணைப்புக்கு மிதிவெடிகளே காரணமெனக் கூறப் பட்ட போதிலும் ஜெயபுரம் மக்களுக்கு ஒதுக்கப்பட்ட 526 ஏக்கர் வயல் நிலம் எவ்வாறு துப்புரவு செய்யப்பட்டுள்ளன என்ற கேள்வியை மக்கள் தற்போது எழுப்புகின்றனர்.

வன்னேரிக்குளம், தேவன்குளம் இணைப்பு வேலைகளுக்கு மிதிவெடிகள் தடை எனக் கூறி எவ்வளவு காலத்துக்கு அதிகாரிகள் காலம் கடத்தப் போகின்றார்கள் என வன்னேரிக் குளம், ஜெயபுரம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மக்கள் குரல் எழுப்புகின்றனர்.

இந்த நிலையில் வன்னேரிக்குளத்தையும், தேவன்குளத்தையும் இணைக்கும் முயற்சியில் வடமாகாண சபை கவனம் செலுத்த வேண்டும் என்று மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

மேற்படி குளங்கள் இணைக்கப்பட்டால் 1000 ஏக்கருக்கும் மேலான வயல் நிலம் உருவாக்கப்படும். மேலும் உவராபத்தின் விளிம்பில் உள்ள வன்னேரிக்குளம், ஆனைவிழுந்தான், ஜெயபுரம் ஆகிய கிராமங்கள் பாதுகாக்கப்படும் எனவும் மக்கள் தெரிவிக்கின்றனர். (க-18)

# 45 ஆம் நாள் நினைவஞ்சலி

## திருமதி நேசமலர் தெய்வேந்திரம்

அன்னை மடியில் 04.11.1949 — ஆண்டவன் அழைப்பில் 22.08.2013



அன்போடு அரவணைத்து அறிவூட்டிய அம்மாவே!
உங்களைப் பிரிந்து நாற்பத்தைந்து நாள் ஆனாலும்
இன்றும் உம் பிரிவால் நெஞ்சுருகி கண்ணீர் சிந்துகின்றோம்
அம்மா அம்மா என்று உறவாட யாருமில்லை
அன்பான வார்த்தை பேசவும் நீங்கள் இல்லை
ஆயிரம் சொந்தங்கள் இருந்தாலும் - அன்பான
எங்கள் அம்மாவுக்கு நிகராகுமா!
உற்றாரை உறவினை சுற்றத்தை நண்பர்களை
பற்றுடன் வரவேற்று உபசரிக்கும் பண்புதான் மறப்போமா!
ஊரார் உறவோர் வாழ்த்திட கட்டிய மாளிகையில்
ஓராண்டு காலம்கூட நல்வாழ்வு வாழவில்லை
பாவியமனவன் ஏனுனை அழைத்தானம்மா...
தூய வாழ்க்கை நடத்தி வந்தீர்கள்
நமக்கெல்லாம் உற்ற துணையாய் - நிழலாய்
நம்மை அரவணைக்கும் ஓர் பாலமாய் இருந்தீர்கள்
காலமெல்லாம் உங்களுக்காக கண்ணீர்ப் பூக்கள் சொரிகின்றோம்.
உயிரோடு உயிராகக் கலந்த உறவே - எம் உயிர்
தங்கள் உயிரோடு சங்கமிக்கும் நன்நாள் வரும்வரை
உங்கள் நிஜமான நினைவுகள் - என்றும்
எம் உள்ளத்தில் வாழும் வளரும்
உங்கள் ஆத்மா சாந்தியடைய
அம்மனை மனமுருக வேண்டுகின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

சர்வோதயா வீதி,
ஆவரங்கால்.

நீங்கா நினைவுகளுடன்
குடும்பத்தினர்

(சி/12575) (7.6.3)

புலமைப் பரிசில் பரீட்சை

# துணுக்காய் கல்வி வலயத்தில் சித்தி வீதத்தில் உயர்வு

மாங்குளம்.ஒக்.5

இந்த ஆண்டு இடம்பெற்ற புலமைப் பரிசில் பரீட்சையில் மாணவர்களின் சித்தி வீதம் கடந்த ஆண்டை விட அதிகரித்துள்ளதாக துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

துணுக்காய் கல்வி வலயத்தில் கடந்த ஆண்டு கிடைத்த பெறுபேறுகளின் பிரகாரம் 2.23 வீதத்தினரே சித்திய டைந்துள்ளனர். ஆனால் இந்த ஆண்டு 5.88 வீதத்தினர் சித்தியடைந்துள் ளனர்.

ஆறுமுகம் வித்தியாலயத்தில் 4 மாணவர்களும், அனிஞ்சியன் குளம் தமிழ் கலவன் பாடசாலையில் 14 மாணவர்களும், சண்முகரட்ணம் வித்தியாலயத்தில் 13 மாணவர்களும், தண்டுவான் அ.த.க.பாடசாலையில் ஒரு மாணவனும், முத்தையன்கட்டு இடதுகரை அ.த.க.பாடசாலையில் ஒரு மாணவனும், கொல்லவிளாங்குளம் அ.த.க.பாடசாலையில் ஒரு மாணவனும், பாலிநகர் குமாரசாமி வித்தியாலயத்தில் 4 மாணவர்களும், திருமுறிகண்டி இந்து வித்தியாலயத் தில் இரு மாணவர்களும், பெரிய புளியங்குளம் அ.த.க.பாடசாலையில் ஒரு மாணவருமாக, துணுக்காய் கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலை களில் மொத்தமாக 34 மாணவர்கள் சித்தியடைந்துள்ளனர். இதனை விட 100 புள்ளிக்கும் 150 புள்ளிக்குமிடை யில் நூற்றுக்கும் அதிகமான மாணவர்கள் தேர்ச்சியடைந்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (க-422)

# முதியோர்களைப் பேணுவது தொடர்பான விழிப்புணர்வுச் செயற்பாடு வவுனியாவில்

வவுனியா சமூக சேவைகள் திணைக்களத்தினர் முதியோர் களைப் பேணுவது தொடர்பான விழிப்புணர்வுச் செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றனர்.

வவுனியா சமூக சேவைகள் திணைக்களத்தினர் முதியோர்களைப் பேணிப் பாதுகாக்க வேண்டிய தேவை குறித்து பாடசாலை மாணவர்கள் மத்தியிலும், பொது இடங்களிலும் பல்வேறு விழிப்புணர்வுச் செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றனர்.

இதனை யு.என்.எச்.சி.ஆர். நிறுவனத்தின் உதவியுடன் சமூக சேவைகள் திணைக்களத்தினர் முன்னெடுத்து வருகின்றனர்.

வவுனியா மாவட்ட சமூக சேவை திணைக்கள அதிகாரி தலைமையில் 25 பாட சாலைகள் தெரிவு செய்யப்பட்டு அப்பாடசாலைகளில் சிறுவர்கள் முதியோருடன் நடந்து கொள்ள வேண்டிய முறைகள் தொடர்பாகவும் அவர்களுக்கு வழங்க வேண்டிய சலுகைகள் குறித்தும் விளக்கவுரைகளும், விழிப்புணர்வுச் செயற்பாடுகளும் முன்னெடுக்கப்பட்டன.

கடந்த முதலாம் திகதி வவுனியா சைவப்பிரகாச மகளிர் கல்லூரி, வவுனியா தமிழ் மகா வித்தியா லயம் ஆகிய பாடசாலைகளில் இந்தச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன. மேலும் எதிர்வரும் 7 ஆம் திகதி தனியார் மற்றும் அரச பஸ்களில் முதியோர்களுக்கு ஆசன ஒதுக்கீடு செய்வது தொடர்பான ஸ்ரிக்கர்கள் ஒட்டப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (க-402)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவது
வித்தியா

## இன்றைய நாள்

### உங்களுக்கு எப்படி?

**மேடம்:** யதார்த்தமாகப் பேசி அனைவரையும் வியக்க வைப்பதுடன் தடைப்பட்ட காரியங்களையும் விரைந்து முடிப்பீர்கள். நண்பர்களின் வருகையுண்டு. வெளியூர் பயணங்கள் திருப்திகரமாக அமையும். ஆன்மிகத்தில் ஈடுபாடு அதிகரிக்கும். மாணவர்களின் நினைவுத்துறன் அதிகரிக்கும்.

**இடபம்:** மனக்குழப்பங்கள் விலகி தெளிவு பிறக்கும். வியாபாரத்தில் மகிழ்ச்சியுண்டு. வெளிவட்டாரத் தொடர்பு அதிகரிக்கும். அயல் வீட்டாரின் அன்புத் தொல்லைகள் விலகும்.

**மிதுனம்:** வெளியூர் பயணங்கள் திருப்திகரமாக இருக்கும். ஆன்மிகத்தில் ஈடுபாடு அதிகரிக்கும். அலுவலகத்தில் மதிக்கப்படுவீர்கள். வழக்குகளிலிருந்த தேக்க நிலைமாறும். ஆடம்பரச் செலவுகளை குறைத்து சேமிக்கத் தொடங்குவீர்கள்.

**கடகம்** : பிரியமானவர்களைக் கலந்தாலோசித்து முக்கிய முடிவுகளை எடுப்பீர்கள். உறவுகளுக்கு மத்தியில் மதிக்கப்படுவீர்கள். அரசியல்வாதிகளின் நட்புக் கிடைக்கும். நீண்டநாளாக நினைத்திருந்த காரியத்தை இப்பொழுது செய்து முடிப்பீர்கள்.

**சிங்கம்:** தன்னம்பிக்கையுடன் செயற்பட்டு சில காரியங்களை முடிப்பீர்கள். வெளி வட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். நட்பு வட்டாரம் விரிவடையும். வியாபாரத்தில் மறைமுகப் போட்டிகளை வெல்வீர்கள். வேலையாள்களின் ஆதரவு கிடைக்கும்.

**கன்னி:** பொறுமையை இழப்பீர்கள். அடுத்தவர்களைக் குறை கூறுவதை நிறுத்துங்கள். யாரையும் யாருக்கும் பரிந்துரை செய்ய வேண்டாம். புதியவர்களை நம்பி ஏமாறாதீர்கள். உத்தியோகத்தில் மற்றவர்களின் வேலையையும் சேர்த்துப் பார்க்க வேண்டி வரும்.

**நாளை**

புரட்டாதி-20 ஞாயிற்றுக்கிழமை 06.10.2013
திதி: துதியை பி.இ.04.59 வரை
நட்சத்திரம்: சித்திரை பி.ப.05.09 வரை
சுபநேரம்: 09.02 - 10.32 வரை
இராகுகாலம்: 04.32 - 06.02 வரை

**துலாம்:** எடுத்த வேலைகளை முழுமையாக முடிக்க முடியாமல் அவதிக்குள்ளாவீர்கள். திடீர் பயணங்கள், செலவுகளால் திணறுவீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களால் பிரச்சினைகள் வரும்.

**விருச்சிகம்:** புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள். நண்பர்களிடம் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். தெளிவான முடிவுகளை எடுத்து அருகிலிருப்பவர்களை அசத்துவீர்கள். ஆன்மிகத்தில் நாட்டம் அதிகரிக்கும். வெளிவட்டாரத்தில் மதிப்பு, மரியாதை கூடும்.

**தனுசு:** பணவரவு திருப்திகரமாக இருக்கும். அரச காரியங்களில் வெற்றியுண்டு. நல்லவர்களின் நட்பு கிடைக்கும். ஆடம்பரச் செலவுகளை தவிர்த்துவிட்டு சேமிக்கத்தொடங்குவீர்கள். பயணங்கள் மகிழ்ச்சி தரும்.

**மகரம்:** நீண்ட நாள்களாக மனதளவில் இருந்துவந்த பிரச்சினைகளுக்கு இன்று முடிவு கட்டுவீர்கள். உத்தியோகத்தில் மதிப்புக் கூடும். வியாபாரத்தில் மறைமுகப் போட்டிகளை வெல்வீர்கள். ஆன்மிகத்தில் நாட்டம் அதிகரிக்கும். கோபம் குறையும்.

**கும்பம்:** தெளிவான முடிவுகள் எடுக்க முடியாமல் குழம்புவீர்கள். மற்றவர்களைப் பற்றி வீண் விமர்சனங்களைத் தவிர்ப்பது நல்லது. உதவி செய்வதாக வாக்குக் கொடுத்தவர்கள் சிலர் இழுத்தடிப்பார்கள். உத்தியோகத்தில் மறைமுக எதிர்ப்புகள் வந்து நீங்கும்.

**மீனம்:** மன நிறைவுடன் காணப்படுவீர்கள். உத்தியோகத்தில் மதிக்கப்படுவீர்கள். பால்ய நண்பர்களைச் சந்தித்து மகிழ்வீர்கள். வியாபாரத்தில் பாக்கிகளை அதிரடியாகச் செயற்பட்டு வசூலிப்பீர்கள்.

## சுடோக்கு


### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 1 | | | | | 2 | | 5 |
| | | 3 | 4 | 2 | | 8 | | |
| 5 | | 4 | 1 | 8 | | | 7 | 9 |
| | | | | 1 | 2 | | 9 | |
| 4 | | | | 6 | | | | 3 |
| | 5 | | 3 | 4 | | | | |
| 6 | 4 | | | 3 | 1 | 9 | | 7 |
| | | 5 | | 9 | 4 | 1 | | |
| 7 | | 1 | | | | | 3 | |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | 1 | 8 | 2 | 5 | 4 | 7 | 9 | 3 |
| 4 | 5 | 2 | 3 | 7 | 9 | 1 | 6 | 8 |
| 3 | 9 | 2 | 8 | 6 | 1 | 4 | 5 | 2 |
| 5 | 3 | 6 | 4 | 8 | 7 | 2 | 1 | 9 |
| 8 | 7 | 9 | 6 | 1 | 2 | 5 | 3 | 4 |
| 1 | 2 | 4 | 5 | 9 | 3 | 8 | 7 | 6 |
| 7 | 8 | 1 | 9 | 4 | 3 | 3 | 2 | 5 |
| 2 | 6 | 5 | 7 | 3 | 8 | 9 | 4 | 1 |
| 9 | 4 | 3 | 1 | 2 | 5 | 6 | 8 | 7 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலி லும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப் பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என் பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.




இணுவில் திருப்பதி பத்மாவதித் தாயார் கோதை நாச்சியார் உடனுறை ஸ்ரீ வேங்கடேஸ்வரர் ஆலயம்

# விஜய வருஷ நூதன பிரம்மோற்ஸவம்

ஏழுமலையான் பக்த கோடிகளே!

நிகழும் ஸ்வஸ்தி ஸ்ரீ விஜய வருடம் புரட்டாதி மாதம் 19ஆம் நாள் (05.10.2013) சனிக்கிழமை முதல் 27ஆம் நாள் (13.10.2013) ஞாயிற்றுக்கிழமை வரை எமது ஆலயத்தில் பிரம்மோற்ஸவத்தை முன்னிட்டு அலங்கார உற்சவம் நிகழத் திருவருள் கைகூடியுள்ளமையால் பக்தப் பெருமக்கள் அனைவரும் வருகை தந்து எம்பெருமானின் திவ்ய வடிவங்களைத் தரிசித்து அவன் அருளுக்குப் பாத்திரமாகும் வண்ணம் திருவடி சாய்கின்றோம்.




## விழாக்கால நிகழ்வுகள்

தினமும் காலை 7 மணியளவில் திருமஞ்சனம்
காலை 9 மணியளவில் திவ்யதரிசன ஆராதனை
மாலை 6 மணியளவில் நவராத்திரி விசேஷ ஆராதனை இடம்பெறும்.

புரட்டாதி மாதம் 26 ஆம் நாள் (12.10.2013) அன்று ஜன்மாஷ்டமியன்று 108 கலச அபிஷேகமும் திவ்ய தரிசன ஆராதனையும் இடம்பெறும்.
மாலை 7 மணியளவில் திருவீதிப் புறப்பாடு இடம்பெறும்.

புரட்டாதி மாதம் 27ஆம் நாள் (13.10.2013) அன்று காலை சக்கரத்தாழ்வார் திருமஞ்சனமும் அலங்கார உத்சவமும் இனிதே நிறைவு பெறும்.



**விழாக்காலங்களில் வலம் வந்து அடியார்கள் புடைசூழ எம்பெருமானின் திருவிழாக் காண வாரீர்!**

திருப்பதி ஏழுமலையானே வேங்கட் ரமணா கோவிந்தா! கோவிந்தா!

**021 224 2300** **ஆதீன கர்த்தா ச. கணேசலிங்கம்**

(C/10978)(10,6,3)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணிகள் விற்பனைக்குண்டு

தெல்லிப்பழையில் உள்ள தபாற் கந்தோர் ஒழுங்கையில் உத்தேசம் முப்பத்தெட்டு பரப்பு விஸ்தீரணமுடைய நல்ல சுற்றாடலில் உள்ள காணி விற்பனைக்குண்டு.
தெல்லிப்பழையில் உள்ள டச்சுறோட்டில் உத்தேசம் முப்பது பரப்பு விஸ்தீரணமுடைய நல்ல சுற்றாடலில் உள்ள காணி விற்பனைக் குண்டு.
தொடர்பு: 075 039 5884 (32196) (7.6.3)

## வீடு, காணி விற்பனைக்கு

இருபாலை டச்சு வீதியிலுள்ள மூன்று பரப்புக் காணியில் அமைந்துள்ள நான்கு அறைகள், களஞ்சிய அறை, இரண்டு குளியலறை, கழிவறைகள், சுற்றுமதில் கொண்ட வீடு உடனடி விற்பனைக்குண்டு.
தரகர்கள் தேவையில்லை.
தொடர்பு: 077 841 6477 (32268) (7.6.3)

## உயர்தர பரீட்சைகளின் பின்

கணக்கியல்சார் தகைமை

Tally Financial Accounting Programme
Duration 3 Months

Quick Books Accounting Pakage
Duration 3 Months

CSC-ASIAN COMPUTER EDUCATION
AN ISO 9001 : 2008 CERTIFIED TRAINING INSTITUTION
Mega Special offer

| | |
|---|---|
| யாழ்ப்பாணம் 021 2225677 | சாவகச்சேரி 021 2270267 |
| கிளிநொச்சி 021 2283925 | வவுனியா 024 2226050 |

## நவராத்திரி விழா

யாழ்ப்பாணம், ஒக்.5
இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நடத்தும் நவராத்திரி விழா ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் மணிமண்டபத்தில் நடைபெறவுள்ளது.
இன்று சனிக்கிழமை தொடக்கம் எதிர்வரும் 14 ஆம் திகதி திங்கட்கிழமை வரை தினமும் பிற்பகல் 3 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை நடைபெறும் இந்த நிகழ்வு இந்து அபிவிருத்தி உத்தயோகத்தர் திருமதி அனந்தலட்சுமி மாணிக்கராஜா சர்மா தலைமையில் நடைபெறும்.
நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக கோப்பாய் கல்வியியற் கல்லூரி இணைப்பாளர் பா.தனபாலன் கலந்து கொள்வார்.
தினமும் சிறப்பு சொற்பொழிவும், அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெறும். (ந)

♦ ♦ ♦

சாவகச்சேரி கண்டுவில் ஒழுங்கை புவேந்தன் பாலர்பகல்பராமரிப்புநிலையத்தில்நவராத்திரிவிழா இன்று பூசைகளுடன் ஆரம்பமாகவுள்ளது. (ந-9)

## மெய்வன்மைப் போட்டி

புலோலி காந்தியூர் முன்பள்ளிச் சிறார்களின் மெய்வன்மைப் போட்டி இன்று சனிக்கிழமை பி.ப 2 மணிக்கு வீரபத்திரர் ஆலய முன்றலில் க.உதயராசா தலைமையில் நடைபெறவுள்ளது.
இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமராட்சி வலய ஆரம்பப் பிள்ளைப் பருவ அபிவிருத்திப் பிரிவு உதவிக் கல்விப் பணிப்பாளர் சி.தில்லைநாதன் கலந்துகொள்வார். (ஒ-8)

## நுளம்புக் கட்டுப்பாட்டு கூட்டம் இன்று

தேசிய நுளம்புக் கட்டுப்பாடு தொடர்பான கூட்டம் இன்று சனிக்கிழமை பிப 4 மணிக்கு வலி.வடக்கு தெல்லிப்பழை பிரதேச சபை மண்டபத்தில் தவிசாளர் சோ.சுகிர்தன் தலைமையில் நடைபெறவுள்ளது.
நாடு முழுவதும் தேசிய நுளம்புக் கட்டுப்பாட்டு வாரமாக அறிவிக்கப் பட்டுள்ள நிலையில் அந்தத் திட்டத்தை முன்னெடுக்கும் வகையில் சனசமூக நிலையங்கள், மயான அபிவிருத்தி சபைகள், கிராம அபிவிருத்தி சங்கங்கள் மற்றும் மாதர் கிராம அபிவிருத்தி சங்கங்களின் தலைவர், செயலாளர் மற்றும் பிரதிநிதிகள் இந்தக் கூட்டத்தில் கலந்து கொள்ளவுள்ளனர்.
தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி பா.நந்தகுமார் கருத்துரை வழங்குவார். (ந-86)

## வாகனங்கள் நிறுத்தப்படுவதால் போக்குவரத்துக்கு நெரிசல்

யாழ்ப்பாணம், ஒக். 5
யாழ்ப்பாணம் பண்ணைப் பகுதியில் வாகனங்கள் தரித்து நிற்பதால் அந்தப் பகுதியால் பயணிக்கும் பொதுமக்கள் பெரும் போக்குவரத்து நெரிசலை எதிர்கொள்வதாக யாழ். மாவட்ட போக்குவரத்து பொலிஸ் பிரிவினர் தெரிவித்தனர்.
இது குறித்து மேலும் தெரிவிக்கையில்:-
யாழ்.மாவட்டத்தில் ஏற்படும் விபத்துக்களுக்கு வீதி ஒழுங்குகளை பின்பற்றாமையும் ஒரு முக்கிய காரணமாக அமைகின்றது. பண்ணைப் பகுதியில் வாகனங்கள் நிறுத்தப்படுவதால் போக்குவரத்து நெரிசல்களும் விபத்துக் களும் இடம்பெறுகின்றன.
பொதுமக்கள் அவற்றை கருத்தில் கொண்டு செயற்பட்டால் விபத்துக்களைக் குறைக்க முடியும். குறிப்பாக பண்ணைப் பகுதிகளில் வாகனங்கள் தரிக்கப்படுவது நிறுத்தப்படல் வேண்டும் எனவும் தெரிவித்தனர். (வ-10)

## வீடு வாடகைக்கு

யாழ் கொக்குவில் பிரம்படி வீதியில் 4 படுக்கை அறைகள் மற்றும் சகல நவீன வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்குண்டு.
தொடர்பு: 077 654 4652 (32293) (7.6.3)

## UNIVERSITY OF JAFFNA, SRI LANKA
### Vacancies - Faculty of Graduate Studies

University of Jaffna will entertain applications up to 21st October 2013 from suitably qualified persons for the post of **Visiting Lecturer** for conducting lectures for the following course units for the Master of Education Course- 2011/12:

i. Theoretical foundation of Education
ii. Psychological foundation of Education
iii. Educational and Academic Management
iv. Issues and problems of Contemporary Education
v. Research Methodology

Qualifications:

a. A First or Second Class Honours degree, and

b. Postgraduate degree of two years full-time course of study( or an equivalent part-time course of study) in the **relevant field** with a research component by the way of thesis/dissertation or a doctoral degree in the relevant field , and

c. Not less than **six** years experience in one or more of the followings:
i. Teaching at University Level,
ii. Professional Experience,
iii. Research in a recognized Institution,
iv. Postgraduate Studies
and
d. Publications in the relevant field

Rate of Payment: **Rs.2,000/-** per hour for lecture

Application forms and other details may be obtained from the office of the Senior Assistant Registrar/ Academic Establishments, University of Jaffna, Sri Lanka, either in person or by post, on a payment of Rs.100/- per application form. Those who wish to obtain application forms by post are requested to send a Money Order/Postal Order drawn in favour of the **Bursar, University of Jaffna** together with a self - addressed stamped envelope 23x10 c.m. in size.

Applications for the above posts should be sent to the Senior Assistant Registrar/ Academic Establishments, University of Jaffna.

Applicants from the University System/Government Departments / Corporations and Statutory Board should channel their applications through the Head of the respective Institutions. Illegible, incomplete and late applications will be rejected without intimation. Only short listed applicants will be called for interview.

Registrar

2013.10.04 (C/12570)(10.6.3)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யா/பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலையைச் சேர்ந்த
குணராசா லக்சன்
என்பவர் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 167 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்தமையை இட்டு மனதாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.
Best Wishes
வாழ்த்துவோர்:
இரத்தினசிங்கம் குடும்பம்
பண்டத்தரிப்பு
(ச/12576)(4.6.3)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



செல்வன் தீ.கோபிசாந்
யாழ் இந்து ஆரம்ப பாடசாலையில் கல்விகற்று 2013இல் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் 186 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்த வைத்தியர் திரு.திருமதி தில்லையம்பலராஜா ஆனந்தி தம்பதியரின் செல்வப் புதல்வன் கோபிசாந் மேன்மேலும் கல்வியில் சிறந்து விளங்கி பல வெற்றிகளையீட்ட நயினை நாகபூஷனி அம்பாளை பிரார்த்தித்து வாழ்த்துகின்றோம்.
Congratulations
வாழ்த்துவோர்:-
அப்பா, அம்மா, அம்மம்மா, வினோ மாமா குடும்பம், சித்தி குடும்பம்
"பாக்கிய விலா"
கொக்குவில் கிழக்கு,
அம்மன் கோயிலடி வீதி, கொக்குவில்.
(32312) (7.6.3)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



எமது வித்தியாலய சக ஆசிரியை
செல்வி பொன்னையா யோகேஸ்வரி
அவர்கள் இன்றைய தினம் மகரகம தேசிய கல்வி நிறுவகத்தில் இலங்கைப் பிரதமர் கௌரவ டி.எம்.ஜயரத்ன அவர்களால் "பிரதீபா பிரபா" விருது வழங்கி கௌரவிக்கப்படுவதனையிட்டு நாம் பெருமகிழ்வடைவதோடு, அவர் மேன்மேலும் பல பட்டங்கள், பதவியுயர்வுகள் பெற்றுப் பல்லாண்டு காலம் வாழ்க வாழ்கவென வாழ்த்துகின்றோம்.
அதிபர்,
ஆசிரியர்கள், மாணவர்கள், கல்விசாரா ஊழியர்கள்.
யா/மட்டுவில் கமலாசனி வித்தியாலயம், சாவகச்சேரி.
(C/29652)(10.6.3)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



ஆசிரியர் "பிரதீபா பிரபா" விருது பெறும்
திருமதி தாரணி சிவகரன்
ஆசிரியர், யா/இராமநாதன் கல்லூரி, சுன்னாகம்.
இன்று மகரகம தேசிய கல்வி நிறுவகத்தில் 2013ஆம் ஆண்டின் ஆசிரிய கௌரவத்தை வழங்கும் பிரதீபா பிரபா விருதுபெறும் தாரணி சிவகரனை பல்சிறப்புகள் பெற பாராட்டி வாழ்த்துகின்றோம்.
அம்பலவாணர் வீதி, உடுவில்.
திருமதி அப்பாத்துரை குடும்பத்தினர்.
(32310)(10,6,3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கேள்வி அறிவித்தல்

கேள்வி : தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் கிளிநொச்சி நீர் வழங்கல் திட்ட ஊழியர்கள் தங்குவதற்கு வீடு ஒன்றினை வாடகைக்கு பெறுதல்.

கேள்வி இல.: O&M/JAF/RM/DE/KILI/QTS/2013/52

குறிப்பு : 1. விண்ணப்பப்படிவங்களை யாழ். காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
2. கேள்வி முடிவுத் திகதி 22.10.2013

தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை
யாழ்ப்பாணம்.

பிராந்திய முகாமையாளர் (யா)
யாழ்ப்பாணம்.

(சி/12683) (10,14)

# தினமும் 600 பேர் வரை இதயநோயால் பாதிப்பு

கொழும்பு, ஒக்.5

இலங்கையில் தினமும் 600 பேர்வரை இதய நோய்களுக்கு உள்ளாகின்றனர் என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதயம் சம்பந்தப்பட்ட நோய்களுக்கு உள்ளாவோரில் அதிகமானோர் அந்நோய் காரணமாக உயிரிழக்கின்றனர்.

ஆண்டொன்றில் 8,000 பேர் வரை இதயநோய்களால் உயிரிழக்கின்றனர் என்று சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

அதற்கமைய குறைந்த பட்சமாக நாளொன்றில் 20 பேர் களாவது இதய நோய்களினால் உயிரிழப்புக்கு உள்ளாகின்றனர் என்று அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

(ச-22)

## தவறிவிட்டது

நா.கௌரி சங்கர் ஆகிய எனது NIC, லைசன்ஸ், இன்சூரன்ஸ் ஆகிய ஆவணங்கள் அடங்கிய பேர்ஸ் மந்திகைக்கும் கலிகைச் சந்திக்குமிடையில் தவறிவிட்டது.
கண்டெடுத்தவர்கள் தந்துதவவும். 0779789326

## காணிகள் விற்பனைக்கு

கல்வயல் 4-6 எல்லைவீதியில் (குகன்மில் முன்பாக) கிணறு மலசலகூடத்துடன் 4 பரப்புக் காணியும், வேறு 4 பரப்பு வெற்றுக்காணியும், கொடிகாமம் கோயிலாமனை வீதியில் 20 பரப்பு தோட்டக் காணியும் விற்பனைக்கு உண்டு
தொடர்பு: செ. அருளம்பலம்
021 222 8706, 077 1122 651
(32352) (10,14)

# வேட்டையாட முற்பட்ட ஏழு பேர் கைது

மட்டக்களப்பு, ஒக்.5

திருக்கோவில், வட்டமடு மேய்ச்சல் தரைப் பிரதேசத்தில் மிருக வேட்டையாட முற்பட்ட 7 பேரை வெள்ளிக்கிழமை காலை விசேட அதிரடிப்படையினர் கைது செய்து பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

சாகாமம் விசேட அதிரடிப்படையினருக்கு கிடைத்த தகவல் ஒன்றினையடுத்து, இந்த 7 பேர் கொண்ட குழுவினர் கைது செய்யப்பட்டனர்.

அவர்களிடம் இருந்து துப்பாக்கி ஒன்றும், 9 தோட்டாக்களும் மீட்கப்பட்டன.

இந்தச் சம்பவத்தில் கைது செய்யப்பட்டவர்களை பொத்துவில் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ச)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யா/யாழ். இந்து ஆரம்பப் பாடசாலையில் தரம் 5F இல் கல்வி கற்கும் மாணவியும் திரு.திருமதி ரஞ்சித் டனிஷா தம்பதியரின் அன்பு புதல்வியுமான

### செல்வி. ரஞ்சித் நிதுஷா

2013 புலமைப் பிரிசில் பரீட்சையில் 189 புள்ளிகளைப் பெற்று பாடசாலையில் இரண்டாம் இடத்தினையும் யாழ். மாவட்டத்தில் 10ஆம் இடத்தினையும் பெற்று விஷேட சித்தி அடைந்ததையிட்டு மகிழ்ச்சியையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம். மேலும் அவர் பல கலைகளையும் கற்றுத் தேர்ந்து கல்வியில் உயர்வு பெற்றிட கல்வியங்காடு வீரபத்திரப் பெருமானின் அருளை வேண்டி வாழ்த்துகின்றோம். அவருக்கு ஊக்கமூட்டி கல்வி கற்பித்த வகுப்பாசிரியரான திரு.மு.வே.அன்பழகன் ஆசிரியர் அவர்களையும் பாடசாலையின் அதிபர், ஆசிரியர்களையும் பாராட்டி நன்றி தெரிவிக்கின்றோம். அத்துடன் இவரது பாடசாலையில் சித்தியடைந்த ஏனைய மாணவர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

**வாழ்த்துவோர்:**

அம்மப்பா- ந.துரைசிங்கம், அம்மம்மா- து.இரஞ்சிதம்லர்
மாமா- து.பிரசன்னா (லண்டன்), மாமி- பி.கீத்திகா (கனடா)

மலர் வாசம்
ஞா.பா.ச. வீதி.
கல்வியங்காடு. யாழ்ப்பாணம்.

## உளமார வாழ்த்துகிறோம்



அதிமேதகு ஜனாதிபதி அவர்களினால் வாழங்கப்படும் பிரதீபா பிரபா விருதுக்கு வலிகாமம் கல்வி வலயத்திலிருந்து தெரிவாகி இன்று (05.10.2013)சனிக்கிழமை மகரகம தேசிய கல்வி நிறுவகத்தில் உயரிய விருதினைப் பெறும் எம் அன்புக்குரிய

**லோப்பையா ஸ்ரனிஸ்லாஸ்**

(SP.Trd. Primary, B.A, Dip. in Edu)
உப அதிபர், யா/சில்லாலை றோ.க. வித்தியாலயம்,
அவர்களை

இனிதே வாழ்த்தி நிற்கும்
நண்பர்கள் வட்டம்.

(32315)(10.14)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



ஆசிரியர் பிரதீபா பிரபா விருதுக்கு யா/புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயத்திலிருந்து தெரிவாகி இன்று மகரகம தேசிய கல்வி நிறுவகத்தில் உயரிய விருதினைப் பெற்றுக்கொண்ட எங்கள் அன்புக்குரிய ஆசிரியர்

**திருமதி தி. டோமினிக் அல்பிரட்**

(B.Ed, SLTS -2.1)

அவர்களை பெருமையுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
பாடசாலைச் சமூகம்.
யா/புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்.

(C/12579)(10.14)

# அகமகிழ்ந்து வாழ்த்துகின்றோம்

## சண்முகராஜா வாமதேவன்

(விசேட பயிற்சி கணிதம்,
அதிபர் சேவை தரம் I)



இன்றைய தினம் மகரகம தேசிய கல்வி நிறுவனத்தில் இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசின் பிரதம மந்திரி

### கௌரவ தி.மு.ஜெயரத்தின

தலைமையில் நடைபெறும் ''ஆசிரியர் பிரதீபா பிரபா'' விருது வழங்கும் நிகழ்வில் விருது பெறும் எமது வித்தியாலய அதிபர் திரு.ச. வாமதேவன் அவர்கள் பிரதீபா பிரபா விருது பெறுவதையிட்டு பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.

### பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் வாழ்த்துச் செய்தி

இன்று 'பிரதீபா பிரபா' விருது பெறும் எங்கள் அதிபர் திரு.ச.வாமதேவன் அவர்களை வாழ்த்துவதில் நாம் மகிழ்வடைகின்றோம். இவர் எமது பாடசாலைக்கு அதிபராகக் கிடைத்தது எமது பிரதேசத்திற்குக் கிடைத்த பெரும் பாக்கியம் என்றே கூற வேண்டும்.

இவர் தனது அன்பான அணுகுமுறையினாலே ஆசிரியர்களையும் சமூகத்தையும் ஈர்த்து எமது பாடசாலையின் வளர்ச்சிக்காகத் தம்மை முழுமையாக அர்ப்பணிப்பவர். காலை முதல் மாலைவரை பாடசாலையிலேயே தன்னை அர்ப்பணிக்கும் இவரின் சிந்தனை முழுவதும் மாணவ நலன் சார்ந்ததாகவும் பாடசாலையின் வளர்ச்சி சார்ந்ததாகவுமே இருந்தது.

எமது பாடசாலையில் காணப்படும் நூலகத்தில் இணைந்த வகுப்பறைத் தொகுதியும் இன்று பிரமாண்டமாகக் காட்சியளிக்கும் பிரதான மண்டபமும் தற்போது அமைக்கப்பட்டுவரும் ஆரம்பப் பிரிவுக்கான வகுப்பறைத் தொகுதியும் இவரின் அர்ப்பணிப்பு மிக்க சேவையின் அடையாளங்களாகும். மேலும் மாணவர்களின் கல்விச் செயற்பாடுகளுடன் இணைப்பாடவிதான செயற்பாடுகளிலும் மாணவர்களை முழுமையாக ஈடுபடுத்தி வெற்றி காண்பதில் மிக்க உறுதி கொண்டவர்.

எமது அதிபர் அவர்கள் தனது சேவையில் மேலும் பல விருதுகளைப் பெற்று சீரும் சிறப்புடன் வாழ இந்நாளில் வாழ்த்துகின்றோம்.

பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
யா/கோண்டாவில் இராமகிருஸ்ண ம.வி.

### பணி தொடர வாழ்த்துகின்றோம்...

வானுலக தேவனாம்
எங்கள் அதிபர் வாமதேவன்
வையகம் போற்றிட
கணப்பொழுதில் கல்வியின்
மகத்துவத்தை புரிய வைத்த -
எம் ஆசான் அதிபராய்
அன்பும் அறிவும் சாந்தமும்
கொண்ட எம் அதிபர்
எம் பாடசாலையின் ஒளி விளக்கே

ஆயகலைகள் பலவும் முன்
அகத்தே கொண்டு வந்து
கல்வி என்னும் ஒளிச்சுடரில்
இவ் அவனியில்
பல பயிர்கள் விளைய வேண்டும்
என்ற பேரார்வம் கொண்டவரே- உம்
பணி தொடரா எம் வாழ்த்துக்கள்

(மாணவர்கள் யா/கோண்டாவில் இராமகிருஷ்ண ம.வி.)

### பிரதி அதிபர் வாழ்த்துகின்றார்

எங்கள் அன்பிற்குரிய அதிபர் அவர்கள் இன்று பிரதீபா பிரபா விருது பெறுவதையிட்டு நான் மிக்க மகிழ்ச்சியடைகின்றேன்.

எனக்கு அண்ணனாக, தோழனாக, ஆலோசகராக இருந்து வழிப்படுத்திக் கொண்டிருப்பவர் எங்கள் அதிபர்.

தான் எடுத்த முயற்சி கைகூடும் வரை உண்ணாது உறங்காது ஓயாது உழைக்கும் ஆற்றல் மிக்க அதிபராக இவரை நான் காண்கின்றேன். நேரம் தவறாது காரியங்களை நிறைவேற்றும் திறன் அவருடைய தனித்துவமான பண்பு என்று தான் கூறவேண்டும்.

ஜப்பானின் ஜெய்க்கா நிகழ்ச்சித் திட்டம் அதனைத் தொடர்ந்து முன்னேடுக்கப்பட்ட '6 S' நிகழ்ச்சித் திட்டம் என்பனவற்றில் தன்னை முழுமையாக அர்ப்பணித்து வெற்றி கண்டவர் எங்கள் அதிபர். இன்று இலங்கைத் தீவின் எந்தப் பாகத்திலிருந்தும் கல்விச் சுற்றுலாவிற்காக யாழ்ப்பாணம் வருகின்ற பாடசாலைகளில் எமது பாடசாலையைப் பார்வையிடாத பாடசாலை எதுவும் இல்லை என்ற நிலையை எமது பாடசாலைக்கு ஏற்படுத்திக் கொடுத்த பெருமை எமது அதிபர் திரு.ச. வாமதேவன் அவர்களையே சாரும்.

அந்தவகையில் எங்கள் அதிபர் கௌரவிக்கப்பட வேண்டியவர். இவருக்கு இன்று கிடைக்கும் விருதைப் போல் மேலும் பல விருதுகள் கிடைக்க வாழ்த்தி விடைபெறுகின்றேன்.

திரு.இ.சர்வேஸ்வரன் பிரதி அதிபர்,
யா/கோண்டாவில் இராமகிருஷ்ண ம.வி.

### ஆசிரியர் கழகத்தின் வாழ்த்துச் செய்தி

இன்றைய தினம் மகரகம தேசிய கல்வி நிறுவனத்தில் இலங்கை ஜனநாயக சோசலிஸ குடியரசின் பிரதம மந்திரி கௌரவ தி.மு. ஜயரத்ன தலைமையில் நடைபெறும் ஆசிரியர் பிரதீபா பிரபா விருது வழங்கும் நிகழ்வில் எமது வித்தியாலய அதிபர் திரு.ச. வாமதேவன் அவர்கள் பிரதீபா பிரபா விருதைப் பெறுவதையிட்டு எமது கழகம் பெருமகிழ்வடைகிறது. எமது அதிபர் தனது முப்பத்தைந்து வருட கால கல்விச் சேவையில் ஆசிரியராக, பகுதித் தலைவராக, பிரதி அதிபராக, அதிபராக பல்வேறு பதவிகளை அலங்கரித்தவர், அலங்கரித்துக் கொண்டிருப்பவர். நற்பண்புகளும் ஒழுக்கமும் நிறைந்த மாணவ சமுதாயத்தை உருவாக்கிய பெருமை மிக்கவர்.

எமது ஆசிரியர்களின் வாண்மை விருத்திக்காகவும் நலனுக்காகவும் என்றும் அயராது உழைப்பவர். நிர்வாகத் திறனும் சிறந்த முகாமைத்துவமும் நிறைந்த ஓர் நல்லதிபராகத் திகழ்பவர். தனது அர்ப்பணிப்பு மிக்க செயற்பாட்டின் மூலம் எமது பாடசாலையின் பெயரை அகில இலங்கை எங்கும் ஒலிக்கச் செய்த பெருமைக்குரியவர் எங்கள் அதிபர் வாமதேவன் என்றால் அது மிகையாகாது. இன்று இவ் விருதினைப் பெறும் எமது அதிபர் மேலும் பல விருதுகளைப் பெற்று நிறைவுடன் வாழ வாழ்த்துகின்றோம்.

ஆசிரியர் கழகம்
யா/கோண்டாவில் இராமகிருஸ்ண மகா வித்தியாலயம்.

### புகழ் சிறக்க வாழ்த்துகின்றோம்

எங்கள் அன்புக்கும் பெருமதிப்பிற்குமுரிய அதிபர் திரு.ச.வாமதேவன் அவர்கள் இன்று ஜனாதிபதி விருது பெறுவதையிட்டு அகமகிழ்வடைகின்றோம்.

எங்கள் அதிபர் அவர்கள் எங்களைப் போன்ற எத்தனையோ மாணவ சமுதாயத்தை உருவாக்கியவர். சுமார் நான்கு தசாப்தங்களாக கணித பாடத்தைக் கற்கண்டாய் ஊட்டிக்கொண்டிருப்பவர். மாணவர்களின் கல்வி வளர்ச்சியிலே கூடிய அக்கறை கொண்டு செயற்படுபவர். எமது பாடசாலையில் கல்வி கற்கின்ற வறிய மாணவர்களை இனங்கண்டு எமது சங்கத்தினூடாக அவர்களுக்குத் தேவையான உதவிகளை வழங்கி அவர்களின் கற்றலுக்கு ஆக்கமும் ஊக்கமும் அளிப்பவர். இவர் தனது பேச்சுத் திறனால் மற்றவர்களைத் தம் பக்கம் ஈர்க்கின்ற அற்புதமான ஆற்றல் உடையவர். இவரின் இத்தகைய ஆற்றலினாலேயே எமது பாடசாலை இன்று வளர்ச்சி கண்டுள்ளது.

கல்விக்காய்ப் பெரிதும் உழைக்கும் இவர் தன் முயற்சியினால் [illegible] அதிபராகி அல்லும் பகலும் தவறாத கடமையினால் அனைத்து மாணவர் மனங்களையும் வென்று இன்று 'நல்லதிபர் விருது' பெறுபதையிட்டு நாம் மனநிறைவடைவதுடன் அவரின் சேவை தொடர எல்லாம் வல்ல கோண்டாவில் அற்புத நர்த்தன விநாயகப் பெருமானை வேண்டி இவர் புகழ் சிறக்க வாழ்த்துகின்றோம்.

பழைய மாணவர் சங்கம், யா/கோண்டாவில் இராமகிருஷ்ண ம.வி.

(32322-23-14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறுவர் தினம்

சிறுவர்களுக்கான அபிவிருத்தி நிலையத்தின் அனுசரணையுடன் வடமாகாண சிறுவர்கள் நடத்தும் சர்வதேச சிறுவர் தினம் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.
கீரிமலை சிறுவர் கழகத்தைச் சேர்ந்த வி.பிரியங்கா தலைமையில் நடைபெறும் இந்த நிகழ் வில் ஆரம்ப உரையை சிறுவர்களுக்கான அபிவிருத்தி நிலையத் தலைவர் சி.வீ.கே.சிவ ஞானம் நிகழ்த்துவார்.
நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக யாழ். அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் கலந்து கொள் வார். (ந)



சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு சிறுவர் தின நிகழ்வுகள் கடந்த 2 ஆம் திகதி கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது.
கரைச்சிப் பிரதேச செயலர் கோ.நாகேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரச அதிபர் செ.ஸ்ரீநிவாசன் மாணவர்களுக்கு பரிசில் வழங்குவதையும் அங்கு இடம்பெற்ற கலை நிகழ்வுகளையும் காணலாம். (ஒ-14-9)

## புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சியின் பொதுக்கூட்டம் நாளை

யாழ்ப்பாணம், ஒக். 5
புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சியின் ஏற்பாட்டில் 13 ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்த மாகாண சபைக்கு அதிகாரம் வழங்கக் கோரி மாபெரும் பொதுக்கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு வவுனியாவில் இடம்பெறவுள்ளது.
இந்தக் கூட்டத்தில் மக்களின் அத்தியாவசிய உணவுப் பொருள்களதும், அன்றாடப் பாவனைப் பொருள்களதும் விலை உயர்வுகளைத் தடுத்து நிறுத்தவும், வாழ்க்கைச் செலவின் அதிகரிப்பைக் கட்டுப்படுத்தவும் 13 ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தி மாகாண சபைகளுக்கு அதிகாரப் பகிர்வை வழங்குமாறும், சுயநிர்ணய உரிமை அடிப்படையில் சுயாட்சி வழங்கும் அரசியல் தீர்வைக் கொண்டுவர வலியுறுத்தியும் பலர் உரையாற்ற வுள்ளனர்.
வவுனியா ரயில் நிலையம் முன்பாகவுள்ள உணவக மண்டபத்தில் இடம்பெறவுள்ள பொதுக் கூட்டம் வவுனியா மாவட்ட கிளைச் செயலாளர் நி.பிரதீபன் தலைமையில் இடம்பெறும்.
இதன்போது கட்சியின் பொதுச் செயலாளர் சி.கா.செந்தில்வேல், தேசிய அமைப்பாளர் வெ.மகேந்திரன், அரசியல் குழு உறுப்பினர்கள் க.தணிகாசலம், சோ.தேவராசா, கா.கதிர்காம நாதன், ச.பன்னீர்செல்வம், புதிய ஜனநாயக இளைஞர் முன்னணி உறுப்பினர் த.பிரகாஷ், புதிய சிந்தனைப் பெண்கள் அமைப்பின் சார்பில் நி.பிரவீனா ஆகியோர் உரை நிகழ்த்தவுள்ளனர். இதன்போது 'சுப்பற்ற கொல்லை' என்ற பெயரிலான சிறப்பு நாடகமும் இடம்பெறும். (வ-14)

## சைக்கிள் வழங்கிக் கௌரவிப்பு

வலி. வடக்கு, ஒக். 5.
புலமைப் பரிசில் பரீட்சையில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்தால் பாடசாலை சமூகத்தால் சைக்கிள் வாங்கித் தரப்படும் என அதிபர், ஆசிரியர்களால் பரீட்சை எழுதிய மாணவர்களுக்கு தெரிவிக்கப்பட்டிருந்தது. அதனடிப்படையில் அகில இலங்கை ரீதியில் தமிழ் மொழி மூலம் நடை பெற்ற தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் அதி கூடிய புள்ளிகளைப் பெற்ற ஏழாலை சைவ சன்மார்க்க வித்தியாலய மாணவன் பரமானந்தம் தனுராஜுக்கு பாடசாலை சமூகத்தினால் புதிய சைக்கிள் ஒன்று அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளது. (ந-86)

## பேச்சுப் போட்டி

யாழ்ப்பாணம், ஒக்.5
தொல்புரம் மத்திய சனசமூக நிலையத்தினர் நவராத்திரியை முன்னிட்டு சங்க எல்லைப் பரப்புக்குள் உள்ள மாணவர்களுக்கான பேச்சுப் போட்டியை நடத்தவுள்ளனர்.
தரம் 6 தொடக்கம் தரம் 13 வரையான மாணவர்களுக்கிடையே இந்தப் போட்டிகள் நடைபெறும்.
போட்டிகள் எதிர்வரும் 12 ஆம் திகதி முன்பள்ளி மண்டபத்தில் நடத்தப்படவுள்ளன.
போட்டியில் கலந்து கொள்ளவுள்ள மாணவர்கள் நிலையச் செயலாளருடன் தொடர்பு கொண்டு படிவத்தினைப் பெற்று விண்ணப்பிக்குமாறு தலைவர் சி.சதீஸ்வரன் அறிவித்துள்ளார். (ந-9)

## சைவ சமய அறிவுப் பரீட்சை

யாழ்ப்பாணம், ஒக்.5
வண்ணை - சாந்தையர் மடம் ஸ்ரீகற்பகவிநாயகர் ஆலய சைவ சமய அபிவிருத்திக் கழகம் வருடம் தோறும் நடத்திவரும் சைவ சமய அறிவுப் பரீட்சை நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு 5 பரீட்சை நிலையங்களில் நடை பெறவுள்ளது.
இந்தப் பரீட்சைக்கென கோப் பாய் நாவலர் தமிழ் வித்தியாலயம், யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை, மிருசுவில் அ.த.க. பாடசாலை, யாழ்.இந்துக் கல் லூரி, காரைநகர் கலாநிதி ஆ.தியாகராஜா மத்திய மகா வித்தியாலயம் ஆகிய ஐந்து பரீட்சை நிலையங்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.
தரம் 3 தொடக்கம் தரம் 13 வரையில் நடைபெறும் இந்தப் பரீட்சைக்கு பல்வேறு பாடசாலைகளைச் சேர்ந்த சுமார் 990 பரீட்சார்த்திகள் தோற்றவுள்ளனர் என உதவிப் பரீட்சைச் செயலர் சு.சிறிகாந்தன் தெரிவித்துள்ளார். (ந)

## திரை விமர்சனப் போட்டியில் வெற்றி பெற்றோர்

வலி. வடக்கு ஒக் .5
நவ மகாஜனன் சிற்பி முன்னாள் அதிபர் அமரர் தெ.து.ஜெயரத்தினத்தின் நூறாவது ஆண்டு பிறந்த நாள் நிறைவையொட்டி யாழ். மாவட்ட மட்டத்தில் திறந்த போட்டியாக நடத்தப்பட்ட திரை விமர்சனப் போட்டியில் வெற்றி பெற்றவர்களின் விவரங்கள் வருமாறு:-
1ஆம் இடம் - திருமதி மாலாதேவி மதிவதனன் (அளவெட்டி மத்தி). 2ஆம் இடம் -செல்வி சர்மிளா இராஜஇராஜேஸ்வரன் (துர்க்காபுரம்). 3 ஆம் இடம் - செல்வி தர்சனா முருகமூர்த்தி (அளவெட்டி). (ந-86)

## பொதுக் கூட்டமும், நிர்வாகிகள் தெரிவும்

தொல்புரம் மத்திய சனசமூக நிலையத்தின் அறுபதாவது வருட பொதுக் கூட்டம் நிலைய மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது.
நிலையத் தலைவர் அ. அழகேந்திரன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்துக்கு முதன்மை விருந்தினராக வலி.மேற்கு பிரதேச சபைத் தலைவர் திருமதி நா. ஜங்கரன் கலந்து கொண்டார்.
நடப்பு வருட நிர்வாகிகள் தெரிவில் பின்வருவோர் போட்டியின்றி ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டனர். தலைவர் - சி.சதீஸ்வரன், உப - தலைவர் வே. அனந்தரூபன், செயலாளர் அ. அழகேந்திரன், உதவிச் செயலாளர் சி.நிரோஜன், பொருளாளர் த.சிவனேஸ்வரன், நிர்வாக சபை உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர். (ந-9)

## ஹப்பன் கணக்கை வைத்திருக்கும் மாணவர்கள் பதிவு செய்க

யாழ்ப்பாணம், ஒக்.5
யாழ்ப்பாணம் தேசிய சேமிப்பு வங்கியில் மேற்தரக் கிளையில் ஹப்பன் கணக்கை நடைமுறைப்படுத்தி வரும் 2013 இல் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள் தங்கள் பெயர் விவரங்களை எதிர்வரும் 10 ஆம் திகதிக்கு முன்னதாக வங்கியில் பதிவு செய்துகொள்ளுமாறு யாழ். தேசிய சேமிப்பு வங்கி முகாமையாளர் தெரிவித்துள்ளார். (ந)

## கண்ணீர் அஞ்சலி



யாழ். ஆனைப்பந்தி அம்பாள் வெதுப்பக உரிமையாளரும் எமது நீண்டகால வர்த்தக நண்பர் விஜயகாந்தின் அன்புத் தந்தையுமாகிய

**சங்கரப்பிள்ளை துரைச்சாமி**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரது ஆத்மா சாந்தி பெறப் பிரார்த்திக்கின்றோம்.

221, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
(32313) (10.6)
பகவான் மருந்தகம்
குடும்பத்தினர்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



தோற்றம்
13 * 07 * 1962

மறைவு
06 * 09 * 2013

**அமரர் இராசரத்தினம் திலகேஸ்வரன்**
[ஆசிரியர், மு/ஆனந்தபுரம் அ.த.க. பாடசாலை]

கடந்த 06.09.2013 இறைவனடி சேர்ந்த எமது குடும்பத்தலைவர் இராசரத்தினம் திலகேஸ்வரன் அவர்களின் இறுதி நிகழ்வில் கலந்து கொண்ட அனைவருக்கும் நன்றி தெரிவிப்பதோடு, நாளை (06.10.2013) ஞாயிற்றுக்கிழமை 31 ஆம் நாள் நினைவு நிகழ்வுகள் எமது இல்லத்தில் நடைபெறும். தொடர்ந்து இடம்பெறும் அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இரணைப்பாலை, புதுக்குடியிருப்பு.
(32309)(4.3.6)
குடும்பத்தினர்.

## பண்ணிசைப் போட்டி

சுதுமலை இந்து சமய விருத்திச் சங்கம் நவராத்திரியை முன்னிட்டு நாவன்மை மற்றும் பண்ணிசைப் போட்டிகளை நடத்தவுள்ளது.
இந்தப் போட்டிகள் எதிர்வரும் 13ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு சுதுமலை சிம்மயபாரதி வித்தியாசாலையில் இடம்பெறும்.
நாவன்மைப் போட்டிகள் ஆரம்பப் பிரிவு, கீழ்ப் பிரிவு, மத்திய பிரிவு, மேற்பிரிவு, அதிமேற்பிரிவு ஆகிய பிரிவுகளாக நடத்தப்படவுள்ளன. (ந-86)

## விசேட கருத்தரங்கு

இலங்கை திறந்த பல்கலைக் கழகத்தினால் நடத்தப்படும் சட்டமாணிக் கற்கைநெறியின் இறுதிப் பரீட்சையை முன்னிட்டு முதலாம் வருட மாணவர்களுக்கான விஷேட கருத்தரங்கு நடைபெறவுள்ளது.
இந்தக் கருத்தரங்கு பேராசிரியர் நா.செல்வ குமாரனால் யாழ் .பிராந்திய நிலையத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நடை பெறும். (ந)

## 320 நோயாளர் சிகிச்சை பெற்றனர்

யாழ்ப்பாணம், ஒக்.5
வலி.தென்மேற்கு பிரதேச செயலர் பிரிவின் கீழ் இயங்கும் நவாலி ஹேமலதா ஆயுள்வேத மத்திய மருந்தகத்தில் கடந்த மாதத்தில் மட்டும் 320 நோயாளர்கள் சிகிச்சை பெற்றுள்ளனர்.
குழந்தைகள், வயோதிபர்கள் மற்றும் சிறுவர்களுக்கு ஒவ்வொரு வியாழக்கிழமைகளிலும் காலை 8.30 மணி முதல் பிற்பகல் 3.30 மணி வரை விசேட சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (ஒ-50)

## கல்விக் கண்காட்சி

தேவரையாளி இந்துக் கல்லூரியில் கல்விக் கண்காட்சி நேற்று வெள்ளிக்கிழமை ஆரம்பமாகி இன்று சனிக்கிழமையும் காலை 8.30 மணி தொடக்கம் பிற்பகல் 2 மணிவரை நடைபெறும்.
பாடசாலை அதிபர் மா.நவநீதமணி தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக [illegible] பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஆ.ஸ்ரீகரனும், ஆரம்பக் கல்வி உதவிக் கல்விப்பணிப்பாளர் திருமதி.க.பஞ்ச லிங்கமும் கலந்து கொண்டனர். (ந-35)

## மரண அறிவித்தல்கள்

### அருட் சகோதரி ஸ்ரெலா புஷ்பம் செபமாலை-தி.கு



வசாவிளானைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் யாழ். திருக்குடும்ப சபையைச் சேர்ந்தவருமான அருட் சகோதரி ஸ்ரெலா புஷ்பம் செபமாலை வெள்ளிக் கிழமை ( 04.10.2013) இறைபதம் இணைந்து விட்டார்.
இவரது பூதவுடல் இன்று (05.10.2013) சனிக்கிழமை மு.ப 10.00 மணிக்கு யாழ். திருக்குடும்ப மாகாண இல்லத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப் பட்ட பின்னர், யாழ். புனித மரியாள் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

தகவல்:
அருட் சகோதரி கிறிஸ்ரா மரியதாஸ்
மாகாணத் தலைவி.

121, பிரதான வீதி ,
யாழ்ப்பாணம்.
(32311)(4.6.3)

### திருமதி கண்மணி கனகசபை



ஏழாலை மேற்கைப் பிறப்பிடமாகவும், இணுவில் கிழக்கு மஞ்சத்தடியை வசிப்பிடமாகவும் கொண்ட கண்மணி கனகசபை (03.10.2013) வியாழக் கிழமை இறைவனடி சேர்ந்துவிட்டார்.
அன்னார் காலஞ்சென்ற மூத்ததம்பி-சிவக் கொழுந்து தம்பதியரின் அன்பு மகளும், காசிப்பிள்ளை -செல்லம்மா தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற கனகசபையின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற சுப்பிரமணியத்தின் சகோதரியும், பாலசிங்கத்தின் (ஓய்வுபெற்ற நில அளவையாளர்) உடன்பிறவா சகோதரியும், காலஞ்சென்றவர்களான திலகம்மா, சண்முகநாதன், சரஸ்வதி, குமாரசாமி, சிவயோகம், மாசிலா ஆகியோரின் அன்பு மைத் துனியும் ஜோதிலிங்கம், அருந்ததி, கணேசலிங்கம், யோகேஸ்வரி, ஜெகதீஸ்வரி ஆகியோரின் அன்புத் தாயும் தமிழ்ச்செல்வனின் சிறிய தாயும் சாந்தி, முத்துலிங்கம் (MSK வர்த்தகர்), பேரின்பநாயகி, காலஞ்சென்ற நாகேந்திரராசா மற்றும் செல்வதாஸ், தயாநிதி ஆகியோரின் அன்பு மாமியாரும் கயல், கௌசிகா, நர்மிதா, சோதிகா, ஆரணி, நித்தியானந்தா, தர்சிகா, சுபங்கரி, கீர்த்திகா, ஜனகன், ஜெனனி, சுருதி, கஜப்பிரியன், கஜலக்சன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் சசிகரன், சசிகலா, தயாகரன், வாருதி, கௌரி, கண்ணகி, முகுந்தன், ஆகியோரின் மாமி யும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (06.10.2013) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப் படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
க.கணேசலிங்கம் (மகன்)
T.P: 021 300 8357
078 913 2927

காரைக்கால் வீதி,
மஞ்சத்தடி,
இணுவில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**POWER CUT SOLUTION BY SOLAR PANAL**

Complete set - 148500/-
250w solar panal - 2
1500w Inverter - 1
86 A Battery - 2
Charger controler - 1

6 Hours working
Tube light (40w) -5
Fan (75w) -2

**KINGS ELECTRONICS**
11A Stanly Road, Jaffna.
T.P.:021 222 3857, 0727949242

**கணினி திருத்தம்**

உங்கள் கணினிகள் பழுதடைந்துவிட்டனவா? உடன் உங்களது வீடுகளுக்கே வந்து திருத்தி தருகின்றோம். அழையுங்கள். 0779086737 Computer Repair
**GUNAA BEST PC** 52, Hospital Road, Jaffna.

**வேலையாள் தேவை**

அம்பிகா அரைக்கும் ஆலை
பெற்றோல் நிலையம் முன்பாக
நெல்லியடி.
தொடர்பு:- 0779361356


**வாடகைக்கு**

கச்சேரி, சுண்டிக்குளி மகளிர் கல்லூரி மற்றும் சென்.ஜோன்ஸ் கல்லூரிகளுக்கு மிக அருகில் வீட்டின் ஒரு பகுதி அல்லது அறைகள் வாடகைக்கு உண்டு.
தொடர்பு: 0774527671

# இலங்கை 'வெனிலா' வெளிநாட்டில் கிராக்கி

கொழும்பு.ஒக்.5
ஐஸ்கிறீம் உற்பத்தியின் போது பயன்படுத்தப்படும் இலங்கையின் வாசனைத் திரவியமான 'வெனிலா'வுக்கு ஹாவாய்த் தீவுகள், ஆஸ்திரேலியா, டுபாய், ஜேர்மனி போன்ற நாடுகளில் பெரும் கிராக்கி நிலவுகிறது.

இந்தத் தகவலை வெனிலா பயிர்ச் செய்கையாளர் சங்கத் தின் தலைவர் எம்.பி.மடு கல்ல தெரிவித்தார்.



உள்நாட்டு வெனிலாத் தேவைக்கு போதியளவிலான வெனிலாவை இன்று வரையிலும் விநியோகிக்க இயலாது போயுள்ள நிலை யில், தற்போது வெளிநாட்டு வர்த்தகச் சந்தையில் வெனிலாவுக்கான கோரிக்கை அதிகரித்து வருகிறது என்று அவர் கூறினார்.

இலங்கையில் தற்போது 500 ஏக்கர்கள் வரையிலான நிலப்பரப்பில் வெனிலா பயிர் செய்யப் பட்டுள்ளது. வருடாந் தம் 20 ஆயிரம் கிலோ கிராம் வரையிலான விளைச்சல் கிடைக்கிறது என்று அவர் குறிப்பிட்டார்.

வெனிலாவுக்கு நிலவும் கோரிக் கையை நிறைவு செய்ய வேண்டுமானால், 800 ஏக்கர்கள் வரையிலாவது வெனிலா பயிர்ச் செய்கையை விரிவு படுத்த வேண்டும். விவ சாயிகள் கூடுதலாக 50 ஏக்கரில் வெனிலாப் பயிர்ச்செய் கையை ஊக்கப் படுத்தும் நட வடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

மாத்தளை, கண்டி, குருநாகல், நுவரெலியா, இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களில் வெனிலா செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று அவர் கூறினார்.

இலங்கையின் வெனிலா உற்பத்தி தொடர்பாக உலகச் சந்தையில் நிலவும் கோரிக் கையை வழங்குவதற்கு இந்த நாட்டில் கிடைக்கும் விளைச்சல் போதுமானதாக இல்லை. அதனால் வெனிலாப் பயிர்ச் செய்கையை விரிவுபடுத்துவதற்கு சிறு ஏற்றுமதிப்பயிர் அபிவிருத்தி அமைச்சின் கவனம் திரும்ப வேண்டியுள்ளது என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச-22)

**கணணி விற்பனை/ திருத்தம்**



உங்கள் திருத்தமுடியாத கணினியை கொடுத்து 9000/- விலையில் ஒரு கணினியை பெற்றுக் கொள்ளமுடியும்.
CRT MONITOR - 2500/- (6M)
அழையுங்கள்
0750698608/ 222 4865
ST.ANTONY'S
#187, K.K.D. ROAD, JAFFNA TOWN.

**தவறிவிட்டது**

போயிட்டி அச்செழு நீர்வேலியைச் சேர்ந்த
**இரத்தினகுமார் ஆனந்தகுமார்**
என்பவருடைய தேசிய அடையாள அட்டை (872643001V), வாகன அனுமதிப்பத்திரம், காப்புறுதி பத்திரம், வரிப்பத்திரம், வங்கி அடகுப் பத்திரம் என்பன அடங்கிய பேஸ் பலாலி வீதி, ஊரெழு அம்பாள் கோயிலில் இருந்து உரும்பிராய் சந்திக்கு இடைப்பட்ட பகுதியில் தவறிவிட்டது.
கண்டெடுத்தவர்கள் தொடர்புகொள்ளவும்.
தொடர்பு:- 0776184384, 0750428510
விநாயகர் எலக்ரிக்கல், உரும்பிராய்.

## பஸ்ஸில் 'ரிக்கற்' வழங்காத நடத்துநர்கள் சிக்கினர்

பயணக் கட்டணங்களாக பயணிகளிடமிருந்து பணத் தைப் பெற்றுக்கொண்டு அக் கட்டணங்களுக்கான 'டிக்கற்று'க்களை வழங்காத இலங்கைப் போக்குவரத்துச் சபையின் 915 நடத்துநர்கள் இலங்கைப் போக்குவரத்துச் சபையின் நடமாடும் பரிசோத னைப் பிரிவிடம் சிக்கிக் கொண்டுள்ளனர்.

கடந்த தினங்களில் இலங்கைப் போக்குவரத்துச் சபை நடமாடும் பரிசோதனைப் பிரிவினால் மேற்கொண்ட திடீர் பரிசோத னைகளின் போது அகப்பட்டுக் கொண்டுள்ள 915 நடத்துநர்களினதும் சேவையை ரத்துச் செய்வதற்கு நடவ டிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

போக்குவரத்துச் சபையின் நடமாடும் பரிசோதனைச் சேவை முகாமையாளர் ஆர். டபிள்யூ எம்.விஜயரத்ன இவ்வாறு தெரிவித்தார்.

சிறு குற்றங்கள் சம்பந்தப்பட்ட 2700 சம்பவங்கள் தொடர்பாக சிக்கிக் கொண்ட ஆயிரத்துக்கும் மேற்பட்ட நடத்துநர்களுக்குத் தண்டனை வழங்கப் பட்டது.

இரண்டு முதல் ஏழு தினங்கள் வரையான காலத்துக்கு அவர்களது சம்பளங்களைக் குறைத் துக் கொள்ளுமாறு சம்பந்தப் பட்ட சாலைகளின் முகாமையாளர்களுக்கு அறிவித்தல்கள் விடுக்கப் பட்டுள்ளன என்றும் அவர் கூறினார்.

இந்தப் பரிசோதனைகள் போக்குவரத்து அமைச்சர் குமார வெல்கமவின் ஆலோசனைக்கு அமைய மேற்கொள்ளப்பட்டன என்று அவர் மேலும் குறிப்பிட்டார். (ச-22)




**பாராட்டி வாழ்த்துகின்றோம்**



**ந. சர்வேஸ்வரநாதன்**
(அதிபர், மு/ஒலுமடு தமிழ் வித்தியாலயம்)
ஒலுமடு நாமம் தனை
ஓங்கி ஒலிக்கச் செய்திட்ட
எம் தமிழ் வித்தியாலய முதல்வர்
"**பிரதீபா பிரபா**" விருதினைப்
பெறுகின்றமையையிட்டு
பெருமையுடன் வாழ்த்தி நிற்கின்றோம்.
ஒலுமடு தமிழ் வித்தியாலய
ஆசிரியர்கள், மாணவர்கள்.
(32331)(10,14)

**யா/ஏழாலை வடக்கு அ.மி.த.க. பாடசாலை, ஏழாலை**
**பாராட்டி வாழ்த்துகின்றோம்**



2013 ஆம் ஆண்டு நடைபெற்ற தரம் - 5
புலமைப்பரிசில் பரீட்சையில் தோற்றி
166 புள்ளிகளைப் பெற்றுச்
சித்தியடைந்த **வி.மதுஷாந்**
மற்றும் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற
**செ.அனோஜன்** (130), **உ.கோபிதா** (127),
**ம.கபிலாஷ்** (126), **ஞா.லக்ஷிகா** (117)
ஆகியோரைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.
**பாடசாலைச் சமூகம்.**
(32328)(10,14)


**யா/ஆனைக்கோட்டை றோ.க.த.க. பாடசாலையின்**
**2013ஆம் ஆண்டின் பாராட்டிற்குரிய வெற்றிச் சாதனைகளில் சில...**

**15 வயதின் கீழ்ப்பிரிவு மேசைப்பந்தாட்ட அணி**



(பி.பிரசாந், த.ஜெஸ்ரின்ராஜ், இ.துஸ்யந்தன், ஜே.கேசவன், செ.ஹரிபிரகாஷ்)
மாகாண மட்டத்தில் வெற்றிவாகை சூடி தேசிய மட்டத்திலே கால்பதித்த 15 வயதின் கீழ்ப் பிரிவு மேசைப்பந்தாட்ட அணியினர், அதிபர், பிரதி அதிபர், உப அதிபர், விளையாட்டுத்துறைப் பொறுப்பாசிரியர் ஆகியோருடன்.

*தரம் 5புலமைப் பரிசில் பரீட்சையில் 100ற்கும் மேல் புள்ளிகளைப் பெற்றோர்.*





**செல்வன் ஸ்ரீதரன் சசிக்குமார்**
(166 புள்ளிகள்)

| | |
|---|---|
| ஸ்ரீ.சசிகுமார் | -166 |
| ஆ.அஸ்வினி | -165 |
| ஜெ.ஜெனிபா | -145 |
| இ.டினோஜா | -139 |
| சி.நிவேதிகா | -133 |
| செ.ஷரிப்பிரசன்னா | -129 |
| ம.அஜய் | -126 |
| ப.பவிசன் | -115 |
| ச.டஜீபன் | -115 |
| ம.ஜெசிந்தன் | -110 |
| இ.தமிழினி | -109 |
| தி.பார்த்தீபன் | -100 |



**அஸ்வினி ஆனந்தராசா**
(165 புள்ளிகள்)



மாகாண மட்ட ஆரம்பப்பிரிவுச் சித்திரப் போட்டியில் 2ஆம் இடமும். 2013 ஆம் ஆண்டின் சிறந்த ஆசிரியருக்கான "பிரதீபா பிரபா" விருது பெறும் எமது பாடசாலையின் ஆரம்பக் கல்வி ஆசிரியர்
*திருமதி.நிர்மலராணி பிரபாகரன் அவர்கள்*

தங்களது கடின உழைப்பால் பாடசாலைக்குப் பெருமை சேர்த்த எங்கள் செல்வங்களை மேலும் பல சாதனைகள் படைக்க மனமாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

(32351-23-14)
பாடசாலைச் சமூகம்,
யா/ஆனைக்கோட்டை றோ.க.த.க. பாடசாலை.

**வாழ்த்துகிறோம்**



புங்குடு தீவு 12ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த அமரர் திரு.திருமதி இரத்தினசபாபதி திருமேனி (அதிபர், குறிகட்டு வான் அரசினர் த.க. வித்தியால யம்) அவர்களின் ஏக புத்திரியும், யா/வண். நாவலர் மகா வித்தி யாலய மனையியல் ஆசிரியயை யுமான
**செல்வி வசந்தி இரத்தினசபாபதி**
அவர்கள் இன்று (05.10.2013) சனிக்கிழமை மகரகம தேசிய கல்வி நிறுவகத்தில் சிறந்த ஆசிரியைக்காகன "**பிரதீபா பிரபா**" விருதினைப் பெறுவதையிட்டு தீவக லயன்ஸ் கழகம் தனது வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறது
**தீவக லயன்ஸ்கழகம்,**
**தீவகம்.**
(32333)(10,14)

**காணவில்லை**



*மார்க்கண்டு லோகராணி*
ஆகிய இவரை பாசையூர் கன்னியர் மடத்தில் இருந்து 03.10.2013 தொடக்கம் காணவில்லை.
இவரைக் கண்டவர்கள் பாசையூர் கன்னியர் மடத்தில் (அந்தோனியார் கோயில் முன்பாக) ஒப்படைக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.
(32342-23-14)
தகவல்: பா.இராசலட்சுமி. தொடர்புகளுக்கு: 021 221 1182

**அறிவித்தல்**

**ஹாட்லிக் கல்லூரி தரம் - 6 அனுமதி - 2014**

எமது கல்லூரியில் தரம் - 6 (2014) இற்கு மாணவர்களை அனுமதிப்பதற்கான விண்ணப்பப்படிவங்களை கல்லூரி அலுவலகத்தில் பெற்றுப் பூரணப்படுத்தி 25.10.2013 இற்கு முன்னர் அலுவலகத்தில் ஒப்படைக்கவும்
(சி-12587) அதிபர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மாணவன் துஷ்பிரயோகம் வவுனியாவில் புத்த பிக்கு கைது

வவுனியா,ஒக்.5

பாடசாலை மாணவனைக் கடுமையாகப் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்திய புத்த பிக்கு ஒருவர் மதவாச்சிப் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

வவுனியா நகருக்குப் பத்திரிகை ஒன்றை வாங்கச் சென்றிருந்த தமிழ்மாணவனுக்குச்சிங்களம் கற்றுத் தருவதாகக் கூறி சந்தேகநபரான பிக்கு மாணவனைப் பலவந்தமாக ஓட்டோவில் ஏற்றிச் சென்றுள்ளார்.

மதவாச்சி தாவகுளம் பிரதேசத்தில் உள்ள விகாரைக்கு அழைத்துச் சென்று மாணவனைப் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தியுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

மாணவனை துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்திய பின்னர், அவரை பஸ்ஸில் ஏற்றி விடுமாறு விகாரையில் சேவையாற்றி வந்த சிவில் பாதுகாப்புப் படை சிப்பாயிடம் கூறி மாணவனை அனுப்பியுள்ளார்.

மாணவன் சிங்கள மொழி அறியாதவர். சிவில் பாதுகாப்புப் படைச் சிப்பாய் சற்றுத் தமிழில் பேசக் கூடியவர். அவர் விகாரைக்கு வந்த காரணத்தை மாணவனிடம் வினவியுள்ளார்.

பிக்கு தன்னைப் பலவந்தமாக அழைத்து வந்து துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தியதை மாணவன் அவரிடம் கூறியுள்ளார்.

இதனையடுத்து சிவில்பாதுகாப்பு படைச் சிப்பாய் சம்பவம் தொடர்பில் விகாரையின் பங்களிப்புச் சபைக்கு அறிவித்துள்ளார். பங்களிப்புச் சபையின் உறுப்பினர்கள் பிரதேசத்தில் உள்ள தமிழ் தெரிந்த ஒருவரை அழைத்து மாணவனிடம் நடந்ததைக் கேட்டறிந்துள்ளனர்.

பிக்குவால் தனக்கு நேர்ந்தவற்றை மாணவன் அவர்களிடம் கூறியதை அடுத்து பிரதேசவாசிகள் சம்பவம் பற்றி மதவாச்சிப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தனர். இதனையடுத்தே புத்த பிக்கு கைது செய்யப்பட்டுள்ளார். (த)

# வருடாந்தம் 200 கோடி தேங்காய்கள் ஏப்பம்

இலங்கை மக்களின் நுகர்வுத் தேவைக்கு ஆண்டொன்றில் 200 கோடி தேங்காய்கள் தேவைப்படுகின்றன என்று தென்னை ஆராய்ச்சி நிறுவனம் தெரிவிக்கின்றது.

அதன் பணிப்பாளரான கலாநிதி ஜயந்த குணதிலக்க இது பற்றிக் கருத்துத் தெரிவித்த போது,

இந்த நாட்டில் உற்பத்தியாகும் தேங்காய்கள் மக்களின் நுகர்வுத் தேவைக்கு மாத்திரமே போதுமானதாக உள்ளன. இலங்கை தேங்காய் ஏற்றுமதி நாடெனினும், இன்றைய கால கட்டத்தில் தேங்காயின் உற்பத்தி வேகமாகக் கீழிறங்கி வருவது மற்றும் தேங்காயின் பாவனை அதிகரித்து வருவது போன்ற காரணிகளினால் தேங்காயை ஏற்றுமதி செய்ய இயலாது போயுள்ளது என்று தென்னை ஆராய்ச்சி நிறுவனத்தின் பணிப்பாளர் ஜயந்த குணதிலக கூறினார்.

2005 ஆம் ஆண்டில் 1000 மில்லியன்கள் வரையிலான தேங்காய்கள் வேற்று நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன. 2010 ஆம் ஆண்டில் 400 மில்லியன்கள் வரையிலான தேங்காய்கள் மாத்திரமே ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன என்று அவர் கூறினார்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### மஹிந்த

முன்னி லையில் பதவியேற்பதை விடுத்து ஜனாதிபதி முன்னிலையில் பதவியேற்பதை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது- என்றார்.

**ஜெ.ஜெயரூபன் - நெடுங்கேணி**
வல்வெட்டித்துறையில் மாவீரன் பிரபாகரன் என்று முழங்கிய விக்னேஸ்வரன், போர்க்குற்றவாளியான மஹிந்தவிடம் மண்டியிட்டு பதவியேற்பதை ஒரு போதும் ஏற்க முடியாது. சாதாரணமாக கட்சித் தலைவர் முன்னிலையில் பதவியேற்றுமக்கள் வழங்கிய ஆணையுடன் எமது தனித்துவத்தை காட்ட வேண்டும். இவ்வாறான சந்தர்ப்பத்தில் தான் தமிழ் மக்கள் தொடர்ந்தும் தமிழ்த் தேசியக் கூட்ட மைப்புக்கு ஆதரவாக செயற்படுவார்கள் - என்றார்.

**சின்னையா சிவரூபன்- யாழ். போதனா வைத்திய சாலை சட்ட வைத்திய அதிகாரி**
உலக நாடுகளே போர்க்குற்றவாளியாக அறிவிக்கப்பட்ட மஹிந்த ராஜபக்ஷ முன்னிலையில் வடமாகாண முதலமைச்சர் பதவியேற்பது ஏற்றுக்கொள்ள முடியாதது. தமிழ் மக்களால் நிராகரிக்கப்பட்ட ஒருவராகவே மஹிந்த ராஜபக்ஷ உள்ளார். அவர் முன்னி லையில் முதலமைச்சர் பதவி யேற்பது தமிழ் மக்களுக்கு இழைக்கும் துரோகம்.

**து.தமிழ்மாறன் - காரைநகர்**
வடக்கு மாகாண முதலமைச்சர் ஜனாதிபதியின் முன்பாகப் பதவிப் பிரமாணம் செய்யவுள்ளமை வெட்கம்கெட்ட செயல். கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் இந்த விடயத்தில் மட்டும் ஏன் அவசரப்பட்டு முடிவு எடுத்தார் என்பது கேள்வியாக உள்ளது.

தமிழ் மக்களுக்கு உரிமைகள் கிடைக்காவிடாமல் தடுத்து முட்டுக்கட்டைகளை ஏற்படுத்தி வரும் அரசின் தலைவர் முன்னிலையில் வடக்கு மாகாண முதல்வர் சத்தியப்பிரமாணம் செய்து தமிழனத்தை மஹிந்த விடம் அடகு வைக்கும் செயல் - என்றார்.

**ஆர்.அரசரத்தினம் - வேலணை**
ஜனாதிபதி முன் முதலமைச்சர் பதவி ஏற்பது என்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முடிவு தமிழ் மக்களுக்குப் பலத்த ஏமாற்றத்தை அளித்துள்ளது.

இதன்மூலம் கூட்டமைப்பின் எதிர்கால நடவடிக்கைகள் சந்தேகத்துக்குரியனவாக இருக்கும் என்றும் அவர் கூறினார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் ஐந்து கட்சிகள் அங்கம் வகிக்கின்றன. இவ்வாறு இருக்கையில் சம்பந்தன் மட்டும் தனித்துச் சென்று ஜனாதிபதியைச் சந்தித்தமை சந்தேகத்தை ஏற்படுத்துவதாகவும் அவர் கூறினார்.

**விஜயகாந்தன் அசோக்- தனியார் நிறுவன ஊழியர் யாழ்ப்பாணம்**
ஜனாதிபதி முன்னிலையில் முதலமைச்சர் பதவியேற்பது என்பது ஏற்றுக்கொள்ள முடியாத விடயம். காரணம் தாம் மஹிந்த முன்னிலையில் பதவியேற்கமாட்டோம் என்று தெரிவித்த இவர்கள் இந்த வாக்குறுதியையே காப்பாற்ற முடியாது உள்ளனர். அப்படியானால் தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிட்டுள்ள விடயத்தை முழுமையாக எவ்வாறு செயற்படுத்துவர் என்ற கேள்விக்குறி தவிர்க்கமுடியாதது. தேர்தல் விஞ்ஞாபனத்தில் மஹிந்தவை ஒருபக்கத்தில் போக் குற்றவாளி என்று குறிப்பிடும் இவர்கள் அப்படியான ஒரு வரின் முன்னிலையில் பதவி யேற்பது என்பது எந்தவகை யிலும் நியாயமற்றது.- என்றார்.

**சிவம் - முள்ளியவளை**
ஜனாதிபதி முன்னிலையில் விக்னேஸ்வரன் பதவி யேற்பது பொருத்தமற்றது. குறிப்பாக ஜனாதிபதி முன்னிலையில் பதவியேற்ற வேண்டும் என்ற கட்டாயம் இல்லை. சாதாரணமாக ஒரு சமாதான நீதிவான் முன்னிலையிலேயே பதவியேற்கலாம் என்று குறிப்பிட்ட கூட்டமைப்பினர் தற்போது எடுத்திருக்கும் முடிவு பொறுப்பற்றது. தாம் எடுக்கும் முடிவில் கூட நிலையான கடைப்பாடு அற்றவர்கள் எப்படி தமிழ் மக்களது பிரச்சினையில் ஒரு நிலைக்கொள்கையோடு நடந்துகொள்ளப்போகிறார்கள் - என்றார்.

**ச.சஜீவன் - வலி.வடக்குப் பிரதேச சபை**
கூட்டமைப்பு வெளியிட்ட தேர்தல் விஞ்ஞாபனத்தில் போர்க்குற்ற விசாரணைக்கு வலியுறுத்தப்பட்டுள்ளது. இதில் இலங்கை ஜனாதிபதி தலைமை யிலான இராணுவத்தினர் தமிழின அழிப்பில் ஈடுபட்டனர் என்ற கருத்து நிலவுகிறது. அப்பாடியானால் ஒரு பக்க போர்க்குற்றவாளி மஹிந்தவே. இவர் முன்னிலையில் வடமாகாண முதலமைச்சர் பதவி யேற்பது என்பது கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனத்தையே கேள்விக்குறியாக்கி உள்ளது.

**நாடக கலைஞர் - நீர்வேலி**
வடமாகாண சபைத் தேர்தலில் தமிழ் மக்கள் வாக்களித்தது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை நம்பியோ தேர்தல் விஞ்ஞாபனத்தை நம்பியோ அல்ல. சிங்கள பேரினவாதம் வெல்லக்கூடாது என்பதற்காகவே அவர்கள் வாக்களித்தனர். இதனை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உணர்ந்துகொள்ள வேண்டும். பேரினவாதிகளுக்கு துணை போவதால் எதிர்காலத்தில் தமிழனின் இருப்பு இல்லாமலே போய்விடும் என்றார்.

இதேவேளை, கூட்டமைப்பின் இந்த முடிவுக்கு ஆதரவாகவும் மக்கள் கருத்துத் தெரிவித்தனர்.

**ஆர்.ரஜீவன் - கனகராயன்குளம்**
துட்டகைமுனு காலத்திலிருந்தே தமிழ் மக்கள் ராஜதந்திரம் இன்றி வாழ்ந்திருக்கின்றனர். வீரமும் திறமையும் இருந்தால் மட்டும் போதாது. அன்றைய சிங்கள ராஜதந்திரத்தை தோற்கடிக்க முடியாமல் போனதற்கு இதுவே காரணம். இது போன்று வீரத்தாலும் திறமையாலும் தோற்ற பல சந்தர்ப்பங்கள் தமிழர் வரலாற்றில் நிறையவே உண்டு. வடமாகாண சபை என்பது நாங்கள் எண்ணிப் பார்க்கும் அளவுக்கு பெரிதல்ல. மக்கள் பிரச்சினை குறித்து சர்வதேசத்துக்கு புரிய வைக்க வேணும். அதேவேளை ஜனாதிபதியின் அனுசரணை இருந்தால் மட்டுமே உள்ளூர் பிரச்சினைகளையும் பூர்த்தி செய்யமுடியும். முதலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்று ஒரு கட்சியை மட்டும் பயன்படுத்த முன்வர வேண்டும். வெவ்வேறு பெயர்களில் போட்டி போடுவது இன்னும் பலவீனமான நிலைக்கு இட்டுச் செல்லும் என்றார்.

**மா.சண்முகலிங்கம் - ஆசிரியர் யாழ்ப்பாணம்**
முதலமைச்சர் பதவி என்பது கௌரவத்துக்குரியது. எனவே அதனை ஜனாதிபதி முன்னிலையில் ஏற்பது தான் விக்னேஸ்வரனுக்கும் பொருத்தமானது. இது குறித்து மாற்றுக் கருத்துக்கள் வெளியிடுவதில் எந்த நன்மையும் கிட்டப்போவதில்லை - என்றார்.

**அ.ஜேசுபாலன் - இலங்கை தமிழரசுக்கட்சியின் உறுப்பினர்**
ஆரம்பத்தில் விட்டுக்கொடுப்புகள் இருந்தால் தான் சிலவற்றை சாதிக்க முடியும். சர்வதேசத்துக்கு நிலைப்பாடுகளை தெளிவு படுத்துவதற்கு சந்தர்ப்பத்தை நாம் அமைத்துக் கொள்ள வேண்டும். ஜனாதிபதி முன்னிலையில் பதவி யேற்பது ஒரு ஆரம்ப முயற்சியே என்றார்.

**கே.எம்.நிலாம் - முன்னாள் யாழ். /கிளி.முஸ்லிம் சம் மேளனத் தலைவர்.**
எப்போதுமே ஒரு நாட்டுக்கு அரசு தான் முக்கியமானது. அரசின் ஆதரவு இன்றி எதுவுமே செய்யமுடியாது. அரசுடன் இணைந்து செயற்பட்டால் தான் நாம் எமக்குக் கிடைக்கக் கூடிய உரிமைகளை பெற்றுக் கொள்ளமுடியும். எனவே கூட்டமைப்பின் முடிவை ஏற்றுக்கொள்கின்றேன் - என்றார். (ஐ-5,4-14-10)

### காணாமற்போனோர்

மாலை 6 மணி வரையும், 18 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மன்னார் புனித செபஸ்தியார் பேராலயத்தில் காலை 9 மணி முதல் மாலை 6 மணி வரையும் இந்தப் பதிவு நடவடிக்கைகள் இடம்பெறவுள்ளது. (த-5)

### ஓட்டோ

யாக வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

எனினும் சிகிச்சை பயனின்றி அவர் அங்கு உயிரிழந்தார்.

கைதடி மேற்கைச் சேர்ந்த ஓய்வூதியரான கந்தன் ஞானமுத்து (வயது-64) என்பவரே உயிரிழந்தவராவார்.

பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.(த-288)

### மக்களின்

டன் வடக்கு மாகாண முதலமைச்சர் தன் முன்னிலை யில் சத்தியப்பிரமாணம் செய்து கொள்வதில் ஆட்சேபனையுமில்லை என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இதன் போது கூறியுள்ளார்.

இதனையடுத்து நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 9 மணிக்கு அலரி மாளிகையில், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ முன்பாக வடக்கு முதலமைச்சராக க.வி.விக்னேஸ்வரன் பதவியேற்கவுள்ளார்.

அதன் பின்னர் எதிர்வரும் 11 ஆம் திகதி வெள்ளிக்கிழமை யாழ். வீரசிங்கம் மண்டபத்தில், முதலமைச்சர் முன்பாகவும் கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் முன்பாகவும் அமைச்சர்கள் 4 பேரும் ஏனைய உறுப்பினர்களும் பதவியேற்கவுள்ளனர்.

நேற்றைய கலந்துரை யாடலிலும் அமைச்சுப் பதவிகள் தொடர்பிலும் தீர்மானம் எதுவும் மேற்கொள்ளப்பட வில்லை.

இலங்கைத் தமிழரசுக் கட்சி கிளிநொச்சி மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட த.குருகுலராஜாவுக்கும், வவுனியா மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட மருத்துவர் ப.சத்தியலிங்கத்துக்கும் அமைச்சுப் பதவி வழங்கப்பட வேண்டும் என்பதில் உறுதியாக உள்ளது.

இதனால் ஏனைய அங்கத்துவக் கட்சிகள் அதிருப்தியடைந்துள்ளன. இருப்பினும் ரெலோ தமது கட்சி சார்பான அமைச்சுப் பதவி எம்.சிவாஜிலிங்கத்துக்கும், புளொட் தமது கட்சி சார்பான அமைச்சுப் பதவி த.சித்தார்த்தனுக்கும் வழங்கப்பட வேண்டும்என்று கோரியுள்ளன.

அத்துடன் ஈ.பி.ஆர்.எல்.எவ். தமது கட்சிக்கு அமைச்சுப் பதவி வழங்கப்படுவதைப் பொறுத்து யாழ். மாவட்டத்துக்கும் முல்லைத்தீவு மாவட்டத்துக்கும் அது சுழற்சி முறையில் பகிரப்படும் என்று தெரிவித்துள்ளது. இதேவேளை இது தொடர்பில் முடிவு எடுப்[illegible] மாலை 5 மணியளவில் கட்சித் தலைவர்களிடையே கலந்துரையாடல் இடம்பெறவுள்ளது. (த-5)

### மேல் மாகாணசபைத்

மேல் மாகாண சபை முதலமைச்சர்களை ஜனாதிபதி தான் தீர்மானித்தார். அவரின் தீர்மானத்தை எவரும் சவாலுக்கு உட்படுத்த முடியாது. மேலும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியால எடுக்கப்படும் தீர்மானம் அதன் பொதுச் செயலாளரும், அமைச்சருமான மைத்திரிபால சிறிசேனவால் அறிவிக்கப்படும். ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியால் எடுக்கப்படும் தீர்மானம் அதன் பொதுச் செயலாளராகிய என்னால் அறிவிக்கப்படும்.

நீதிமன்றத் தீர்ப்பை எவ்வாறு கேள்விக்குட்படுத்த முடியாதோ அது போலவே ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தீர்மானத்தையும் கேள்விக்குட்படுத்த முடியாது" என்றார்.

### ஜனாதிபதியுடன்

சந்திப்பு நடை பெற்றது. இந்தச் சந் திப்புத் தொடர்பில் கருத்து வெளியிட்டபோதே நாடாளுமன்றஉறுப்பினர்சம்பந்தன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

பல முக்கிய விடயங்களைப் பற்றி நான் ஜனாதிபதியுடன் பேச்சு நடத்தியுள்ளேன். தொடர்ந்து பேசுவோம். இந்தப் பேச்சுகளுடாக எங்களுடைய தமிழ் மக் களுக்குத் திருப்தியளிக்கக் கூடிய முடிவுகளை நாம் எடுப்போம்.

நாங்கள் அந்தந்தக் காலத்திற்கு ஏற்ற வகையில் கருமங்களைக் கையாள வேண்டும். நாங்கள் இப்போது பேசுகின்றோம். இறுதியில் எல்லோரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய வகையில் முடிவுகள் நல்லவையாக அமையும் - என்றார்.

### வெட்கம்

ளனர் என்பது எமக்குத் தெரியாது. எனினும், மஹிந்த சிந்தனையை ஏற்கமுடியாவிட்டால் தனி வழியில் பயணிப்பதே சிறந்தது" என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

அதேவேளை, அரசைக் கடுமையாகச் சாடும் - விமர்சிக்கும் முஸ்லிம் காங்கிரஸ், தேர்தல்களின் போதும் தனித்துத் தான் செயற்படுகின்றது. ஏன், அமைச்சரவைக்கு 13 சம்பந்தமாக யோசனை வந்த போதும் எதிர்த்தது. குற்றப் பிரேரணை விடயத்திலும் மு.கா. மாறுபட்ட கொள்கையையே பின்பற்றியது.

"தற்போது வடக்கில் கூட்டமைப் புக்கு முட்டுக்கொடுக்கும் வகையில் கிழக்கில் தீர்மானம் நிறைவேற்றி தமது ஆதரவை மு.கா. வெளிப்படுத்தியுள்ளது. மு.காவுக்கு கொள்கையும் இல்லை. வெட்கமும் இல்லை. அத்துடன், இவர்களை வைத்திருக்கும் அரசுக்கும் கொள்கை இல்லை. மாகாண சபையில் தீர்மானம் நிறைவேற்றினாலும் நாடாளுமன்றம் நினைத்தால் தான் எதையும் செய்ய முடியும் - எனவும் அவர் கூறினார்.

### '13' ஆதரவுத்

வதனூடாக இந்த அதிகாரங்களைப் பெற்றுக்கொள்ள முடியாது என்றும், இது விடயத்தில் எந்த[illegible]னையும் ஏற்படாது என்றும் அவர் தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள ஸ்ரீலங்கா சுதந் திரக் கட்சியின் தலைமையகத்தில் நேற்று ஊடகவியலாளர் சந்திப்பு நடை பெற்றது. இந்தச் சந்திப்பில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாள ரும் அமைச்சருமான மைத்திரிபால சிறிசேன, பெற்றோலிய வளத்துறை அமைச்சர் அநுர பிரியதர்ஷன யாப்பா, பொது நிர்வாகம் மற்றும் உள்நாட்டலு வல்கள் அமைச்சர் ஜோன் செனவிரட்ன ஆகியோரும் கலந்துகொண்டனர்.

இதன்போது, காணி, பொலிஸ் அதிகாரங்கள் குறித்து ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நிலைப்பாடு என்ன என்று ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு,

"காணி, பொலிஸ் அதிகாரங்கள் குறித்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நிலைப்பாட்டை நாம் ஏற்கனவே அறி வித்து விட்டோம். இந்த அதிகாரங்கள் குறித்து இனி பிரச்சினை ஏற்படாது. காணி அதிகாரம் குறித்து உயர் நீதி மன்றம் தீர்ப்பொன்றை வழங்கியுள் ளது. அதனால் காணி அதிகாரம் குறித்து பிரச்சினை ஏற்படாது. அடுத்ததாக பொலிஸ் அதிகாரமானது தேசிய பொலிஸ் ஆணைக்குழுவுக்குக் கீழ்த் தான் இருக்கவேண்டும் என 18ஆவது திருத்தத்தில் குறிப்பிடப்பட்டுள் ளது. எனவே, பொலிஸ் அதிகாரம் தொடர்பிலும் பிரச்சினை ஏற்படாது.

இதேபோல், வடக்கு - கிழக்கு இணைப்பு தொடர்பிலும் பிரச்சினை ஏற்படாது. இது விடயம் தொடர்பில் 2006ஆம் ஆண்டு உயர்நீதிமன்றத் தால் வழங்கப்பட்ட தீர்ப்புக்கமைய அதை மேற்கொள்ள முடியாது" என்று அமைச்சர் சுசில் பிரேமஜயந்த பதிலளித்தார்.

வடக்கு, கிழக்கு மாகாணசபை இணைப்பு முறை தவறானது என்று தானே உயர்நீதி மன்றம் தீர்ப்பு வழங் கியுள்ளது என எழுப்பிய கேள்விக்கு அமைச்சர் பதிலளிக்கையில்,


"வடக்கு, கிழக்கு என்பது ஆரம்பத்தில் ஓரே மாகாண சபையாகவும், ஓர் ஆளுநரின் ஆட்சியின் கீழும் இருந்தது. ஆனால், தற்போது இவை இரண்டும் வெவ்வேறு மாகாணசபைகள். இரண்டு ஆளுநர்கள் இருக்கின்றனர். எனவே, வடக்கு - கிழக்கு இணைப்பு தொடர்பில் பிரச்சினை ஏற்படாது" - என்றார். (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கின் பதக்க வேட்டை தொடர்கிறது


தர்சிகா


லோகஜனி


அனித்தா


நிமலேந்திரா

யாழ்ப்பாணம், ஒக.5
கொழும்பு சுகததாச விளையாட்டு மைதானத்தில் நடைபெறும் பாடசாலைகளுக்கு இடையிலான தேசியமட்ட தடகளப் போட்டியில் வடமாகாணத்துக்கு மேலும் பதக்கங்கள் கிடைத்[illegible]
நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற 19வயதுப்பிரிவு பெண்களுக்கான தட்டுஎறிதல் போட்டியில் வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலய மாணவி தர்சிகா 31.67 மீற்றர் தூரத்தை எறிந்து முன்றாவது இடத்தைப் பெற்று வெண்கலப் பதக்கத்தை வென்றார்.
21 வயதுப்பிரிவு பெண்களுக்கான400 மீற்றர் தடை தாண்டல் போட்டியில் வவுனியா சைவப்பிரகாச மகளிர் கல்லூரி மாணவி கே.லோகஜனி 1 நிமிடம் 4.31 செக்கனில் ஓடி முடித்து 3 ஆவது இடத்தைப் பெற்று வெண்கலப் பதக்கத்தையும், வர்ண விருதையும் வென்றார்.
17 வயதுப்பிரிவு பெண்களுக்கான மூன்றாவது ஈட்டி எறிதல் போட்டியில் மகாஜனக் கல்லூரி மாணவி அனித்தா 31.05 மீற்றர் தூரத்தை எறிந்து இரண்டாவது இடத்தைப் பெற்று வெள்ளிப் பதக்கத்தை வென்றார்.
17 வயதுப் பிரிவு பெண்களுக்கான கோலூன்றிப் பாய்தல் போட்டியில் அருணோதயக் கல்லூரி மாணவி கென்சிகா 2.50 மீற்றர் உயரத்தைத் தாண்டி வர்ணவிருதையும் வென்றுள்ளார்.

> யாழ்.இந்துக் கல்லூரி மாணவன் செந்தூரன் 3.50 மீற்றர் உயரத்தைத் தாண்டி வர்ண விருதையும் வென்றுள்ளார்.

21 வயதுப் பிரிவு ஆண்களுக்கான கோலூன்றிப் பாய்தல் போட்டியில் மகாஜனக் கல்லூரி மாணவன் டினுசன் 3.50 மீற்றர் உயரத்தினை தாண்டி வர்ணவிருதையும் வென் றுள்ளார்.
17 வயதுப் பிரிவு ஆண்களுக்கான உயரம் பாய்தல் போட்டியில் யாழ்.இந்துக் கல்லூரி மாணவன் செந்தூரன் 3.50 மீற்றர் உயரத்தைத் தாண்டி வர்ணவிருதையும் வென்றுள்ளார்.
21 வயதுப் பிரிவு ஆண்களுக்கான கோலூன்றிப் பாய்தல் போட்டியில் அருணோதயாக் கல்லூரி மாணவன் றொசாந் 4 மீற்றர் உயரத்தினை தாண்டி இரண்டாவது இடத்தைப் பெற்று வெள்ளிப் பதக்கத்தையும் வென்றுள்ளார்.
நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்ற 21 வயதுப்பிரிவு ஆண்களுக்கான ஈட்டி எறிதல் போட்டியில் உடுப்பிட்டி அமெரிக்கன்மிசன் கல்லூரி மாணவன் நிமலேந்திரா 35.65 மீற்றர் தூரத்தை எறிந்து இரண்டாவது இடத்தைப் பெற்று வெள்ளிப் பதக்கத்தையும், வர்ண விருதையும் பெற்றுள்ளார்.
இவர் ஆண்களுக்கான குண்டு எறிதல் போட்டியில் 13.60 மீற்றர் தூரத்தை எறிந்து முதலாவது இடத்தைப் பெற்று தங்கப் பதக்கத்தையும் பெற்றுக் கொண்டார். (து-23)

## இன்றைய ஆட்டம்


யாழ்ப்பாணம், ஒக. 5
யாழ். உதைபந்தாட்ட லீக்கினால் அங்கத்துவக் கழகங்களுக்கு இடையே நடத்தப்படும் லீக் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரில் இன்று சனிக்கிழமை மாலை 4.30 மணிக்கு யாழ். துரையப்பா விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டத்தில் அரியாலை ஐக்கிய விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து மயிலங்காடு ஞான முருகன் விளையாட்டுக் கழகம் மோதும். (து-23)

## இறுதியாட்டம் இன்று



யாழ்ப்பாணம், ஒக்.5
கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக்கழகம் நடத்தும் 20 20 மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டித் தொடரின் இறுதியாட்டம் இன்று சனிக்கிழமை மின்னொளியில் இடம் பெறவுள்ளது.
இறுதியாட்டத்தில் கொக்குவில் 'ஏபி' விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து உடுவில் உதய சூரியன் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (து-23)

## அச்சுவேலி மத்திக்கு பளு தூக்குதலில் தங்கம்



அச்சுவேலி, ஒக்.5
அச்சுவேலி மத்திய கல்லூரி விஞ்ஞான பிரிவு மாணவன் குணசீலன் டுசாந் 20 வயதுப் பிரிவு பளுதூக்கல் போட்டியில் தேசிய மட்டத்தில் தங்கப் பதக்கம் வென்றுள்ளார்.
குணசீலன் டுசாந் 20 வயதுக்கு உட்பட்ட ஆண்களுக்கான 94 கிலோ எடைப் பிரிவில் தேசிய மட்டத்தில் முதலாம் இடத்தைப் பெற்றுத் தங்கப் பதக்கம் வென்றுள்ளார்.
மாணவன் டுசாந் கல்லூரி அதிபர் , விளையாட்டுப் பொறுப்பாசிரியருடன் காணப்படுகின்றார். (து-11)

## இறுதியாட்டத்துக்கு வதிரி பொம்மர்ஸ் அணி

யாழ்ப்பாணம் ஒக் .5
பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக்கழகம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை மின்னொளியில் இடம் பெற்ற முதலாவது அரையிறுதியாட்டத்தில் பொம்மர்ஸ் விளையாட்டுக்கழக அணி வெற்றிபெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதிபெற்றது.
வதிரி பொம்மர்ஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து நாவாந்துறை சென்.மேரிஸ் விளையாட்டக்கழக அணி மோதிக் கொண்டது. இதில் வதிரி பொம்மர்ஸ் விளையாட்டுக்கழக அணி2:0 என்ற கோல்கணக்கில் வெற்றிபெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதிபெற்றுள்ளது. (து-23)



சர்வதேச கூட்டுறவாளர் தினத்தை முன்னிட்டு யாழ்.மாவட்டக் கூட்டுறவு சபையினால் நடத்தப்பட்ட கயிறு இழுத்தல் போட்டியில் பங்கு கொள்ளும் அணிகள். (து-17)

## சர்வதேச கூட்டுறவாளர் தின விளையாட்டுப் போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், ஒக்.5
19 ஆவது சர்வதேச கூட்டுறவாளர் தினத்தை முன்னிட்டு யாழ். மாவட்டக் கூட்டுறவு சபையால் கூட்டுறவு பணியாளர்களுக்கிடையே நடத்தப்பட்ட விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்ற கூட்டுறவு சங்கங்களின் விவரம் வருமாறு:-

**சைக்கிள் ஓட்டப்போட்டி 45 வயதிற்கு கீழ்**
1 ஆம் இடம் - பா.பிரணவதாஸ் - தனிநபர், 2 ஆம் இடம் - இ.டிபன் - கோப்பாய் ப.தெ.வ. அ.கூ.சங்கம். 3 ஆம் இடம் - ந.டினிஸ்ரன் - பண்டத்தரிப்பு ப.தெ.வ.அ.கூ. சங்கம்

**சைக்கிள் ஓட்டப் போட்டி 45 வயதிற்கு மேல்**
1 ஆம் இடம் - ஐ.சோமசுந்தரம் - தென்ம.மேற்கு . ப.நோ. கூ.சங்கம்
2 ஆம் இடம் தி.இந்திரசித்து - பண்ட. ப.தெ.வ.அ.கூ.சங்கம், 3 ஆம் இடம் வை. கைலைநாதன் - கூ.தி.தி. சி.க.கூ.சங்கம்

**கிரிக்கெற்**
1 ஆம் இடம் - இணுவில் அபிராமி சி.க.கூ.சங்கம், 2 ஆம் இடம் - உடுப்பிட்டி ப.நோ. கூ.சங்கம்

**கரப்பந்தாட்டம்**
1 ஆம் இடம் - அச்சுவேலி ப.தெ.வ. அ.கூ சங்கம், 2 ஆம் இடம் - உடுப்பிட்டி ப.நோ.கூ. சங்கம்

**கயிறு இழுத்தல் - ஆண்கள்**
1 ஆம் இடம் - ஊர்காவற்றுறை ப.நோ.கூ.சங்கம், 2 ஆம் இடம் - அச்சுவேலி ப.தெ.வ.அ.கூ.சங்கம்

**கயிறு இழுத்தல் - பெண்கள்**
1 ஆம் இடம் - பண்ட் மகளிர் சி.க. கூ.சங்கம், 2 ஆம் இடம் - ஏழாலை மேற்கு ஸ்ரீ விநாயகர் ஐ.நா.ச

**வலைப்பந்தாட்டம்**
1 ஆம் இடம் - உடுப்பிட்டி ப.நோ. கூ.சங்கம், 2 ஆம் இடம் - பண்டத்தரிப்பு மகளிர் சி.க.கூ.சங்கம்

**1500 மீற்றர் ஓட்டம்**
முதலாம்இடம்-கி.ஜெயந்தன்-பண்டத்தரிப்பு ப.தெ.வ.அ.கூ.சங்கம், 2ஆம் இடம்-எஸ்.சிவசுதன்-உடுப்பிட்டி ப.நோ.கூ.சங்கம், 3ஆம் இடம்-சு.கோபிதன்-அச்சுவேலி ப.தெ.வ. அ.கூ.சங்கம்.

**800 மீற்றர் ஓட்டம்**
முதலாம் இடம்-இ.தனுசா- பண்டத்தரிப்பு ப.தெ.வ.அ.கூ.சங்கம், 2ஆம் இடம்-[illegible] திருமகள் சி.க.கூ.சங்கம், 3ஆம் இடம்-த.தாரணி-கைதடி வடக்கு அம்பிகை சி.க.கூ.சங்கம்.

**அஞ்சல் ஓட்டம் 4X100 மீற்றர்- ஆண்கள்**
முதலாம் இடம்-உடுப்பிட்டி ப.நோ.கூ. சங்கம், 2ஆம்இடம்-பண்டத்தரிப்பு ப.தெ.வ.அ.கூ.சங்கம், 3ஆம் இடம்-ஏழாலை மேற்கு ஸ்ரீ விநாயகர் ஐ.நா.சங்கம்.

**அஞ்சல் ஓட்டம் 4X100 மீற்றர்- பெண்கள்**
முதலாம் இடம்-ஏழாலை மேற்கு ஸ்ரீ விநாயகர் ஐ.நா.சங்கம், 2ஆம் இடம்-செல்வ விநாயகர் மாதர் சி.க.கூ.சங்கம், 3ஆம் இடம்-பண்டத்தரிப்பு மகளிர் சி.க.கூ.சங்கம். 3ஆம் இடம்-நவாலி கிழக்கு முருகானந்தா சி.க.கூ.சங்கம்.


**அஞ்சல் ஓட்டம் 4X400 மீற்றர்- ஆண்கள்**
முதலாம் இடம்-பண்டத்தரிப்பு ப.தெ.வ.அ.கூ.சங்கம், 2ஆம் இடம்-உடுப்பிட்டி ப.நோ.கூ.சங்கம், 3ஆம் இடம்-ஏழாலை மேற்கு ஸ்ரீ விநாயகர் ஐ.நா.சங்கம்.

**அஞ்சல் ஓட்டம் 4X400 மீற்றர்- பெண்கள்**
முதலாம் இடம்-செல்வ விநாயகர் மாதர் சி.க.கூ.சங்கம், 2ஆம் இடம்-ஏழாலை மேற்கு ஸ்ரீ விநாயகர் ஐ.நா.சங்கம்.

**200 மீற்றர் ஓட்டம்-பெண்கள் 18-35 வயது**
முதலாம் இடம்-சி.கஸ்தூரி-ஏழாலை மேற்கு ஸ்ரீ விநாயகர் ஐ.நா.சங்கம், 2ஆம் இடம்-நா.கஜனி-பண்டத்தரிப்பு ப.தெ.வ.அ.கூ.சங்கம், 3ஆம் இடம்-சி.பெனலீனா-செல்வ விநாயகர் மாதர் சி.க.கூ.சங்கம். (து-17)

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## சச்சினைப் புகழ்ந்த பிரையன் லாரா

சிட்னி மைதானத்தில் ஒரு கவர் கூட அடிக்காமல் தனது 200 ஓட்டங்களைப் பூர்த்தி செய்தாரே அது தான் பெஸ்ட் என புகழாரம் சூட்டியுள்ளார் பிரையன் லாரா.

சம்பியன்ஸ் லீக் தொடரில் பங்கேற்று அரையிறுதிக்கு முன்னேறியுள்ள டிரினிடாட் டொபாகோ அணியின் மென்டார் ஆக இருக்கிறார் லாரா.

இதற்காக இந்தியா வந்துள்ள லாரா நேற்றுமுன்தினம் டில்லி மைதானத்தில் சச்சினைச் சந்தித்துப் பேசினார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசுகையில், 10 வருடங்களுக்கு முன்பு சிட்னியில் நடந்த டெஸ்ட் போட்டியின்போது சச்சின் ஆடிய ஆட்டம் இன்னும் எனக்கு நினைவில் உள்ளது.

அந்தப் போட்டியில் ஆஸ்திரேலிய பந்து வீச்சாளர்களைச் சச்சின் துவம்சம் செய்தார்.

தனது 200 ஓட்டங்களைத் தொடும் வரை சச்சின் ஒரு கவர் கூட அடிக்கவில்லை என்பது முக்கியமானது. மற்றவர்களை விட எப்போதுமே வித்தியாசமானவர், விசேடமானவர் என்று தெரிவித்துள்ளார்.

மேலும் தான் 20/20 போட்டிகளுக்கு பொருத்தமானவன் என்று நினைக்கவில்லை என்றும், ஆனால் சச்சின், பொன்டிங் போன்றோர் இதற்கு ஏற்றாப் போல விளையாடியுள்ளனர் என்றும் தெரிவித்துள்ளார். (கு)





## கறுப்பினத்தவர்களுக்கும் அணிகளில் ஒதுக்கீடு

தென்னாபிரிக்க உள்ளூர் அணிகளில் கறுப்பின வீரர்களை உள்ளடக்குவதற்கான திட்டங்கள் குறித்து தென்னாபிரிக்கக் கிரிக்கெட் சபை வாக்கெடுப்பொன்றை மேற்கொள்ளவுள்ளது. அத்தோடு, இந்தத் திட்டம் வாக்கெடுப்பில் வெற்றிபெறும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

ஒக்டோபர் 11ஆம் திகதி இடம்பெறவுள்ள தென்னாபிரிக்கக் கிரிக்கெட் சபையின் கூட்டத்திலேயே இது தொடர்பான வாக்கெடுப்பு நடாத்தப்படவுள்ளது.

இதன்படி பிராந்திய அணிகள் தங்கள் அணியில் தலா 2 கறுப்பின வீரர்களையும், மாகாண அணி கள் 3 கறுப்பின வீரர்களையும் கட்டாயமாக உள்ளடக்க வேண்டுமென்ற திட்டம் முன்மொழியப்பட்டுள்ளது. 1998ஆம் ஆண்டு இன ரீதியிலான ஒதுக்கீட்டு முறையைத் தென்னாபிரிக்கக் கிரிக்கெட் சபை அறிமுகப்படுத்தியதோடு அதன் மூலம் ஒவ்வொரு அணியும் 4 வெள்ளையற்ற வீரர்களைக் களமிறக்க வேண்டுமெனத் தெரி வித்திருந்தது. இந்த நடைமுறை 2007ஆம் ஆண்டு நீக்கப்பட்டிருந்தது. வெள்ளையற்ற வீரர்களில் கறுப்பின வீரர்களல்லாத ஏனைய வீரர்கள் இடம்பெற்ற போதிலும், கறுப்பின வீரர்களின் பங்கு குறை வானதாகவே காணப்பட்டிருந்தது. இதன் காரணமாகவே இந்த நடைமுறை குறித்து தென்னாபிரிக்கக் கிரிக்கெட் சபை ஆராய்ந்துள்ளது. (கு)



## இராணுவ வீரராக ஆசைப்பட்டேன்


இராணுவ வீரராக ஆசைப்பட்டேன் என தனது விருப்பத்தைத் தெரிவித்துள்ளார் இந்தியக் கிரிக்கெட் அணியின் அணித் தலைவர் டோனி.

இந்திய கிரிக்கெட் அணியின் அணித் தலைவரான டோனி ராஞ்சியில் உள்ள இராணுவத்தின் பரசூட் ரெஜிமென்ட் டில் ஒருநாள் செலவிட்டார். அப்போது இராணுவ வீரர்களுடன் பேசி மகிழ்ந்தார்.

அப்போது, நான் சிறுவயதில் இருந்தே இராணுவத்தில் சேர விரும்பினேன். இராணுவ வீரர்களை பார்க்கையில் நானும் ஒருநாள் அப்படி ஆவேன் என்று நினைத்தேன் எனத் தெரிவித்தார். நீங்கள் எப்படி கூலாக இருக்கிறீர்கள் என்ற கேள்விக்கு, செய்தியாளர் கூட்டத்துக்கு முதல் நாள் குளிரூட்டிக்குள் உட்கார்ந்து கொள்வேன், அதனால் தான் கூலாக இருக்கிறேன் என்றார். மேலும் இராணுவச் சீருடை விசேடமானது என்றும் தெரிவித்துள்ளார்.

மேலும் இராணுவ வீரர்களின் குடும்பத் துடன் நின்று புகைப்படத்துக்குப் போஸ் கொடுத்ததுடன், வீரர்களின் குழந்தைகளுக்கு ஓட்டோகிராப் போட்டுக் கொடுத்தார். (கு)

# மரண அறிவித்தல்



## சங்கரப்பிள்ளை துரைச்சாமி

(அம்பாள் பேக்கரி உரிமையாளர், ஆனைப்பந்தி)

ஆனைப்பந்தியைப் பிறப்பிடமாகவும் இராசாவின் தோட்டத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சங்கரப்பிள்ளை துரைச்சாமி நேற்றுமுன்தினம் (03.10.2013) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சங்கரப்பிள்ளை-சின்னம்மா தம்பதியரின் பாசமிகு மகனும், காலஞ்சென்ற வீரகத்தி-சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், கண்மணியின் பெறாமகனும், திலகவதியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற ஆறுமுகம் மற்றும் சண்முகலிங்கம், பரமலிங்கம், கமலாம்பிகை, ஆனந்தலக்சுமி, கேதீஸ்வரன், தனலக்சுமி, யோகேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும், ஜெயவதனி, ஜெயகௌரி, விஜயமோகன், ஜெயகீதா, விஜயகாந்தன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், பஞ்சாட்சரம், சிவசுந்தரம், சபாநந்தினி, கி.ஸ்ரீறங்கன் ஆகியோரின் அன்பு மாமனும், காலஞ்சென்ற நாகராசா மற்றும் செல்வநாயகம், கனகலிங்கம், இராசலிங்கம், கந்தசாமி,ரூபாவதி, புஸ்பராணி காலஞ்சென்ற பாக்கியம், சவுந்தலாதேவி மற்றும் விஜயலக்சுமி, காலஞ்சென்ற சந்திரன் மற்றும் வதனி, தவேந்திரன் ஆகியோரின் பாசமிகு மைத்துனரும், யனுஜா, கபிஷன், நக்சிகா, திசிஜா, விதுஷ், டிருஷ் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (06.10.2013) ஞாயிற்றுக்கிமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயாணத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

39/3, இராசாவின் தோட்ட வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 0170

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மலேசியா நாட்டில் உடனடி வேலை வாய்ப்பு

கோழிப்பண்ணை (Farm) ஒன்றுக்கு உடனடியாக 6 பேர் தேவை.
(Calling Visa) ( Work Permit)
இரண்டு வருட ஒப்பந்தம்
அதி உயர் சம்பளம் + OT
இரண்டே வாரத்தில் பயணம்
சாப்பாடு, தங்குமிடம், மருத்துவம் இலவசம்
(வீட்டு பணிப் பெண் இருவர் தேவை)
தொடர்பு: Lanka Voice 075 065 0084
(32537) (3.6.4)

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

# சம்பூர் அனல்மின் நிலையத் திட்டம்:

# இலங்கை – இந்தியா அடுத்தவாரம் ஒப்பந்தம்

கொழும்பு, ஒக்.5

சம்பூர் அனல் மின் நிலையம் அமைக்க அடுத்த வாரம் இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட உள்ளது என்று மின்சக்தி எரிசக்தி அமைச்சு கூறியுள்ளது.

இந்த ஒப்பந்தத்தில் இலங்கை சார்பாக மின்சார சபையும், இந்திய அரசு சார்பாக இந்திய தேசிய அனல் கூட்டுத்தாபனமும் கைச்சாத்திட உள்ளன.

2005 ஆம் ஆண்டு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இந்தியாவுக்கு மேற்கொண்ட பயணத்தின் பயனாக சம்பூர் அனல் மின் நிலையம் அமைப்பதற்கு சந்தர்ப்பம் ஏற்பட்டது.

பல்வேறு காரணங்களால் தாமதமாகி வந்த இந்தத் திட்டம் ஜனாதிபதி, அமைச்சர் பஸில் ராஜபக்ஷ ஆகியோரின் வழிகாட்டலின் கீழ் துரிதப் படுத்தப்பட்டது.

எரிபொருள் ஊடாக மின் உற்பத்தி செய்வதற்கு அதிக செலவு ஏற்படும் நிலையில், குறைந்த செலவில் மின் உற்பத்தி செய்யக் கூடிய அனல் மின் உற்பத்தி குறித்து அதிக நாடுகள் கூடுதல் கவனம் செலுத்தி வருகின்றன.

சம்பூர் அனல் மின்நிலைய திட்டத்துக்கு 600 மில்லியன் அமெரிக்க டொலர்கள் செலவாகும் என்று மதிப்பிடப்பட் டுள்ளது.

ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு ஒரு வருட காலத்துக்குள் நிர்மாணப்பணிகள் ஆரம்பிக்கப்பட உள்ளன.

2017ஆம் ஆண்டில் நிர்மா ணப்பணிகள் பூர்த்தி செய் யப்பட உள்ளன. சம்பூர் அனல் மின் நிலையத்தினூடாக உற்பத்தி செய்யப்படும் மின்சாரம் சம்பூரிலிருந்து ஹபரன ஊடாக வெயாங்கொட வரை அதி சக்திவாய்ந்த கிரிட் உப மின் நிலையத்திற்கு கொண்டுவரப்பட்டு, தேசிய கட்டமைப்புடன் இணைக்கப்பட உள்ளது.

சம்பூர் அனல் மின் நிலையத்தி னூடாக அதிகரிக்கும் எதிர்கால மின்சார தேவை பூர்த்தி செய்யப்பட உள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ச)

## After A/Level's..

இம் மாத பதிவுகளுக்கு எங்களுடன் இணைந்து Pendrive ஒன்றினை இலவசமாக பெற்றுக்கொள்ளுங்கள்

New batches
07. 10. 2013
11. 10. 2013
@ 9.00 am

ESOFT Diplomas have an International Recognation

- DiTEC – Diploma in Information Technology – International + ESOFT Certificates – 4 Months
- DiWE – Diploma in Web Engineering – International + ESOFT Certificates – 6 Months
- DiSE – Diploma in Software Engineering – International + ESOFT Certificates – 6 Months
- DiBM – Diploma in Business Management – International + ESOFT Certificates – 4 Months
- DiCA – Diploma in Computerized Accounting – International + ESOFT Certificates – 4 Months
- DiE – Diploma in English (Grammar | Spoken | Comprehension) – International + ESOFT Certificates – 4 Months

edexcel
Assured

Dual Certificates



50% Discount

ESOFT – Shaping Lives, Creating Futures.
ESOFT METRO CAMPUS - JAFFNA
No 137, K K S Road, Jaffna | Tel :021 222 4142
HOTLINE : 077 309 9 308

| Nelliady | Kilinochchi | Jaffna 2nd Branch |
|---|---|---|
| 151, Jaffna Rd | 01, Kanagapuram Rd, | 17/1 Brown Rd, Jaffna |
| 021 226 4940 | 021 228 5444 | 021 750 1120 |

## Sky Computers (Pvt) Ltd

TP: 021-222-1417
Spoken English With Grammar
(அடிப்படையிலிருந்து கற்பிக்கப்படும்)
(யாழ் பிரபல ஆசிரியர்)
Duration -6 Months (3000/= மட்டுமே)
கணினி, சிங்களம், Mobile Repairing வகுப்புக்களும் நடைபெறுகின்றன.
89, கண்டி றோட், யாழ்ப்பாணம். (கச்சேரிக்கு அருகாமையில்)



## பாராட்டி வாழ்த்துகின்றோம்

விசுவமடுவின் ஒளி விளக்கு
விருது பெறும் வேளை உனக்கு
சங்கினையெடுத்து சாதனை முழக்கு
சந்தோசம் உன் செயலால் எமக்கு

எமது பள்ளியில் தரம் 5 இல் கல்வி கற்பிக்கும்
திருவாளர் ப. சுதர்சன்
ஆசிரியர் அவர்கள் சிறந்த ஆசிரியருக்கான "பிரதீபா பிரபா" விருது பெறுவதையிட்டு நாம் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

மு/விசுவநாதர் ஆரம்பப் பாடசாலை,
விசுவமடு.
(சி12571-23-14)
பாடசாலைச் சமூகம்.

## நீங்கள் OFFSET பிறிண்டரா ?

ARK PRINTING SOLUTIONS இன் புதிய தீர்வு

- ☑ எவ்வாறு Printing பிரச்சினைகளைக் கண்டறிவது ?
- ☑ எவ்வாறு அதிகூடிய Impression களைப் பெற்றுக்கொள்வது ?
- ☑ மை வர்ணங்களால் எவ்வாறு புதுமையான அச்சுப்பதிப்பை மேற்கொள்வது ?
- ☑ எவ்வாறு அச்சு இயந்திரங்களின் ஆயுள் காலத்தை நீடிப்பது ?

நாளை ( 06.10.2013, 9:30am) உலகின் முதற்தர மையான DIC மையினை வடமாகணத்திற்கு அறிமுகம் செய்யும் தருணத்தில் இவற்றுக்கான விடைகளை பெற்றுக் கொள்ளவருமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இல. 16, J SQUARE, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
021 222 6452

## புதிய நிலைகள்



Ms.V.INTHUYA
பொது முகாமையாளர்



Mr.G.T.ULAGASEGARAM
செயலாளர் (இயக்குநர் சபைத் தலைவர்)

- ★ எமது நிறுவனத்தில் உதவி முகாமையாளராகப் பணியாற்றிய செல்வி.வி.இந்துஜா பொது முகாமையாளராகவும்
- ★ பொதுமுகாமையாளராகப் பணியாற்றிய திரு. G.T. உலகசேகரம் இயக்குநர் சபைத் தலைவரின் செயலாளராகவும் ஒக்ரோபர் முதலாம் திகதி முதல் நியமிக்கப்பட்டுள்ளதை எமது சமூகத்திற்கு அறியத்தந்திருக்கின்றோம்.
- ★ நவீன மயப்படுத்தப்பட்ட தொழில் முறைசார்ந்த எங்கள் நிறுவனம் இளைய தலைமுறைகளின் தலைமையில் மிகச் சிறப்பாக பணியாற்றும்.

நன்றி.

திசைகாட்டி (பிறைவேற்) லிமிட்
175, பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
021 221 9016 - 021 568 9090
(323. -14)

G.T.உலகசேகரம்
செயலாளர், இயக்குநர் சபை,

## யாழ் மாணவர்களுக்காக நாம்...

முதன்முறையாக LMCயின்
Soft Skill Development Courses மிகக்குறைந்த கட்டணத்தில்...

2013 A/L பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களே! LMC உடன் இணைந்து மிகக்குறைவான ஒரே கட்டணத்தின் கீழ் English and IT கற்கை நெறிகளை கற்பதற்கு ஓர் அரிய சந்தர்ப்பம்.

மாணவர்களே!! நீங்கள் ஏன் LMC ஐ தெரிவு செய்ய வேண்டும் !!

- பிரதானமாக 3 கற்கைநெறிகளை ஒரே கட்டணத்தில் பயிலமுடியும்.
- கற்கைநெறி முடிவில் ஒவ்வொரு கற்கைநெறிகளுக்கும் உலக தரத்திலான சான்றிதழ் வழங்கப்படும்.
- முற்றிலும் நவீன தொழில்நுட்ப வசதிகளுடன் இணைந்த வகுப்பறை.
- IELTS, City & Guilds க்கு என தனியாக அமைந்த lab வசதிகளை உங்கள் தேவைக்கு ஏற்ப பயன்படுத்த முடியும்.
- IELTS, City & Guilds கற்கைநெறிகளை British Council, City & Guilds ஆகிய நிறுவனங்களினால் கற்பித்தல் பயிற்சியளிக்கப்பட்ட அனுபவம் வாய்ந்த ஆசிரியர்களால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.
- எம்மிடம் IELTS கல்வியின்ற மாணவர்கள் இதுவரை 5.5 – 7.5 வரை பெற்றதற்கான ஆதாரத்தினை பார்வையிடலாம்.

எம்மால் வழங்கப்படும் இக்கற்கைநெறி சலுகையானது October மாதம் 15ஆம் திகதி வரை மட்டுமே.

- Diploma in English
- Diploma in Computer Studies
- Diploma in Web Design

Duration 4 Months
1st Installment Rs. 4500
2nd Installment Rs. 4000
3rd Installment Rs. 4000

- Diploma in English
- Diploma in Graphic Design
- Diploma in Web Design

Duration 4 Months
1st Installment Rs. 5500
2nd Installment Rs. 4000
3rd Installment Rs. 4000

- Cert. in Spoken English
- Diploma in Computer Studies
- Diploma in Web Design

Duration 4 Months
1st Installment Rs. 3500
2nd Installment Rs. 3500
3rd Installment Rs. 3000

- IELTS (General or Academic)
- Diploma in Computer Studies
- Diploma in Web Design

Duration 4 Months
1st Installment Rs. 8500
2nd Installment Rs. 8000
3rd Installment Rs. 8000

- City & Guilds A1 or B1
- Diploma in Graphic Design
- Diploma in Web Design

Duration 4 Months
1st Installment Rs. 7500
2nd Installment Rs. 5500
3rd Installment Rs. 5500

- IELTS (General or Academic)
- Diploma in Computer Studies
- Diploma in Hardware

Duration 4 Months
1st Installment Rs. 7500
2nd Installment Rs. 7000
3rd Installment Rs. 7000

London Metropolitan College
#197, Arasady Road, Jaffna.
Tel: 021 222 7230 | 021 753 8395
info@lmcjaffna.edu.lk | www.lmcjaffna.edu.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 05.10.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.